Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :34 மார்கழி 14 ஆம் நாள் திங்கட்கிழமை 30 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## 10கிலோ கஞ்சா
### மன்னாரில் மாட்டியது

மன்னார், டிசெ. 30
மன்னார், கொன்னையன் குடியிருப்பில் கடற்படையினரும் 08 ›

# எங்களை தனியே விடுங்கள்

## வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நினைவுபடுத்துகிறது தமிழ் அரசு

வவுனியா, டிசெம்பர் 30
நீங்கள் எங்களையும் உங்கள் தேசத்தில் உள்வாங்கி எமக்கும் உரிய உரிமைகளை வழங்கி வாழ விருப்பமில்லை என்று கூறியமையால், எங்களைத் தனியே போகவிடுங்கள் என்ற தீர்மானத்தை வட்டுக்கோட்டையில் நாங்கள் நிறைவேற்றினோம். இன்று இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு காரணம் இருக்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. 23 ›

## இளம்பெண் சடலமாக மீட்பு

வவுனியா. டிசெ. 30
வவுனியா கொக்கு வெளிப் பகுதியில் கிணற்றிலிருந்து இளம்பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
அவர் நேற்று வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். வீட்டுக்கு வந்த உறவினர்கள் நீண்ட நேர 23 ›

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்
## கிளிநொச்சியில் இன்று போராட்டம்
### சகலரையும் பங்கேற்க அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30
வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இன்று முற்பகல் 10 மணிக்கு பெருமெடுப்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.
வடக்கின் ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்கள் இந்தப்போராட் 07 ›

இலங்கை
## சிங்களவருக்கு மட்டுமா சொந்தம்?
### ராஜபக்ஷ அரசிடம் ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, டிசெ. 30
இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் பாடுவதற்கு ஏன் தடை விதிக்கப்படுகின்றது? 07 ›

## புல்லுக்குள் புடையன்: குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 30
புல்லுக்குள். இருந்த புடையன் பாம்பு தீண்டியதில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். 08 ›

## பற்றைக்குள் சிறுவனின் சடலம்

தெல்லிப்பழை, டிசெ. 30
விஜி வினோத் என்ற 13 வயதுச் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.
காங்கேசந்துறை வீமன்காமம் வறுத்தலைவிளானில் உள்ள பற்றைக்குள்ளிருந்தே சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரி 23 ›

## தமிழில் தேசிய கீதம் பிரபாவுக்கே பிடிக்காது
### பௌத்த பீடங்கள் வாதம்



கொழும்பு, டிசெ. 30
நாட்டில் மீண்டும் தமிழ், சிங்கள பிரச்சினையை உருவாக்கி தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவே வடக்கிலுள்ள அடிப்படைவாத அரசியல்வாதிகள், தேசிய கீத விவகாரத்தை ஊதிப் பெருப்பிக்கின்றனர், என்று அஸ்கிரிய பீடத்தின் உதவிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் தெரிவித்தார். இலங்கையில் தமிழ் மொழியில் தேசியகீதம் இசைப்பதற்கு இடமளிக்கப்பட வேண்டும் 07 ›

முச்சந்தி முாளி



பெயரைக் கேட்டோன்ன சும்மா அதிருதில்லே

## சத்தமா? அழையுங்கள் 1955

கொழும்பு, டிசெ. 30
பேருந்துகளில் அதிக ஒலியுடன் பாடல் ஒலிபரப்பப்பட்டால் பொதுமக்கள் முறைப்பாடளிக்க இலக்க 23 ›

## தமிழர்களின் தலைக்குள் எப்போதும் பிரபாகரனே!
### திஸாநாயக்க ஆதங்கம்

கண்டி, டிசெ. 30
வடக்கில் உள்ளவர்களின் தலைகளில் இன்னமும் பிரபாகரனின் சிந்தனைதான் ஓடிக் கொண்டிருக்கிறது. இத 08 ›

## தனயனை மீட்கச் சென்ற தந்தையும் உயிரிழப்பு
### முல்லைத்தீவில் சம்பவம்

நாயாறு, டிசெ. 30
முல்லைத்தீவு மாவட்டம் நாயாற்று கடல் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள கடலில் குளிக்கச் சென்ற தந்தை உயிரிழந்துள்ளார். மகன் கடல் அலையில் அள்ளுண்டு காணாமல் போயுள்ளார். இந்தச் சம்ப 23 ›

மனோ - கூட்டமைப்பு
## 'டீல்'

வவுனியா, டிசெ. 30
வடக்கு, கிழக்குக்கு வெளியில் கூட்டமைப்பு போட்டியிடாது. வடக்கு, கிழக்கில் மனோ அணியினர் போட்டியிட மாட்டார்கள். இந்த ஒப்பந்தம் அவர்கள் இருவருக்கிடையேயும் உள்ளது. இவ்வாறு மனோகணேசனின் சகோதரரும், முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபாகணேசன் தெரிவித்தார். 23 ›

## சமஷ்டித் தீர்வைக் கோரி 55லட்சம் பேர் வாக்களிப்பு
### மாவை. எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 30
தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டிக் கட்டமைப்பில் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், சஜித் பிரேமதாஸ முன்வைத்த தேர் 23 ›

## மாணவருக்கு வவுச்சர் விநியோகம்

கொழும்பு, டிசெ. 30
பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வவுச்சர் மற்றும் பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி நிறைவு செய்யப்படவிருப்பதாக கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். வலய மட்ட அடிப்படையில் பாடப் புத்தகங்கள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

## யாழ். பிரதேச செயலகத்தின் அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ: 30
2019ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கு முடிவுறுத்தல் காரணமாக யாழ்ப்பாண பிரதேச செயலக பணம் கட்டும் கருமபீடம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணியிலிருந்து 11 மணி வரையே செயற்படும் என்று பிரதேச செயலர் சா.சுதர்சன் அறிவித்துள்ளார். வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை ஒன்லைன் ஊடாக 24 மணி நேரமும் பெற்றுக் கொள்ள முடியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## வயிற்றோட்டம் ஒருவர் சாவு



சாவகச்சேரி, டிசெ. 30
வயிற்றோட்டம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி சிறிது நேரத்தில் சாவடைந்துள்ளார். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 68 வயதுடைய மூதாட்டி ஒருவருக்கு கடந்த 27ஆம் திகதி அதிகாலை வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. அவர் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். (ஒ-5-9-104)

# வெள்ளை வானும் பூஜிதவின் இடமாற்றமும்

## விக்ரமபாகு புதுத் தகவல்



**கொழும்பு, டிசெ. 30**

**மஹிந்த ராஜபக் ஷவினரின் வெள்ளைவான் வன்முறை சம்பந்தமாக விசாரணை நடத்தியதன் காரணமாகவே கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த பூஜித் ஜயசுந்தர குருணாகல் பிரதேசத்துக்கு மாற்றலாகிச் செல்ல நேரிட்டது என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வெள்ளைவான் கலாசாரம் இருந்தமைக்கான சாட்சியங்கள் என்னிடம் உள்ளன. தமிழர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரது சகோதரி, கடத்தல் குறித்து எனக்குத் தெரியப்படுத்தினார். அப்போது கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பாக இருந்த பூஜித் ஜயசுந்தரவுக்கு அறிவித்தேன்.
அவர் உடனடியாக விசாரணைகளை நடத்தி கடத்தலை மேற்கொண்ட நபர்களைக் கண்டறிந்தார். பாதுகாப்பு படை உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு கடத்தல் சம்பவத்துடன் தொடர்புள்ளது தெரியவந்தது.
மேல் மட்டத்தில் இருந்து வந்த உத்தரவை அடுத்து பாதுகாப்பு படை உறுப்பினர்களை பூஜித் ஜயசுந்தர விடுதலை செய்ய நேரிட்டது. மறுநாள் பூஜித் குருணாகல் பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.
89 -90ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது தெற்கில் சிங்கள இளைஞர்கள் காணாமல் போவதை எதிர்த்து கதிர்காமத்துக்கு யாத்திரை சென்ற மஹிந்த ராஜபக்ஷக்கு, சிங்களவர் அல்லாத தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களின் மனித உரிமை தொடர்பில் அக்கறையில்லை. மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் செயற்படுத்தப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது - என்றார். (ஒ.5)

## ‘கெத்து’ காட்டும் சண்டித்தன ‘ பிக்கு’





மட்டக்களப்பு, டிசெ. 30
மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர், மத போதகர் ஒருவரின் கன்னத்தில் ஆவேசமாக அறைந்த காணொலி வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸார் முன்னிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற கிறிஸ்தவ மதகுருவை தடுத்து நிறுத்தி முரண்பட்ட சுமண ரத்ன தேரர் தொடர்பான காணொலி வெளியாகியதை அடுத்து, மத போதகர் ஒருவரை தாக்கிய காணொலியும் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
சுமணரத்ன தேரர் பௌத்த மத குருவா அல்லது சண்டித்தனம் செய்பவரா என்று கேள்வி எழுப்பி சமூக ஊடகங்களில் கண்டனம் தெரிவித்துள்ளனர். பொலிஸார் இவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. (ஒ.5)

## “கிளம்புங்கள் கொழும்புக்கு!”

### எம்.பிக்களுக்கு ஐ.தே.க. அழைப்பு

கொழும்பு, டிசெ. 30
ஐக்கிய தேசியக் கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்புக்கு இன்று அழைக்கப்பட்டுள்ளனர்.
காலை 11 மணிக்கு கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டிஆராச்சி தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சியாக நாடாளுமன்ற நடவடிக்கைகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இன்று கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ஒ,5)

## ராஜித இடமாற்ற முயற்சி கைவிடப்பட்டது



கொழும்பு, டிசெ. 30
கொழும்பு லங்கா தனியார் மருத்துவமனையில் சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனைக்கு நேற்று மாற்ற எடுக்கப்பட்ட முயற்சி கைவிடப்பட்டுள்ளது.
கொழும்பு தனியார் மருத்துவமனையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவை தனியார் மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்ட சிறைச்சாலை மருத்துவர், அவரை மாற்றுவதற்கான பரிந்துரையை வழங்கியிருந்தார்.
இதையடுத்து அவரை சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் இறுதி நேரத்தில் அது கைவிடப்பட்டுள்ளது. (ஒ - 5)



# புரியாத தேசிய கீதத்தை பாட கட்டாயப்படுத்தாதீர்

## அரசின் தீர்மானத்தைக் கடுமையாக சாடுகின்றார் சரவணபவன் எம்.பி.

**கொடிகாமம், டிசெ. 30**

**தேசிய கீதம் நாங்கள் பாடத் தேவையில்லை என்பதையே தற்போதைய அரசு வெளிக்காட்டியுள்ளது. மொழி தெரியாத நிலையில் அதைப் பாடுங்கள் என்று அதிபர்களோ, ஆசிரியர்களோ மாணவர்களைக் கட்டாயப்படுத்தாதீர்கள். வடக்குக் கிழக்கிலுள்ள அதிபர்களோ அரச திணைக்களங்கள அலுவலர்களோ தேசிய கீதத்தைப் பற்றிக் கவனம் செலுத்தவேண்டாம்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கடுமையாகச் சாடியுள்ளார்.

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலைவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு சாடினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழில் தேசிய கீதம் பாடக்கூடாது என்று அரசு வெளிப்படுத்துவதால், அதற்கு நாங்கள் அடிமைகள் ஆகக்கூடாது. நாங்கள் வந்தேறு குடிகளாக, அடிமைகளாக இருக்க வேண்டும் என்று தற்போதைய ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதற்கெல்லாம் நாங்கள் இசைந்து போகக்கூடாது.

ஒருவேளை சிறுபான்மையினம் தாங்களாகவே ஒரு தேசிய கீதத்தை உருவாக்கிப் படிக்கட்டும் என்று அரச தரப்பினர் எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை.

எல்லோரும் அரசியல் நோக்கோடு தான் சிந்திக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை, நாடு அபிவிருத்தியடைந்து நல்ல நிலைக்கு வர வேண்டுமாக இருந்தால் ஆரோக்கியமான பொருளாதாரக் கொள்கையும் ஆரோக்கியமான கல்விக் கொள்கையும் கட்டாயம் இருக்க வேண்டும்.

### கல்விக் கொள்கை அரசிடம் 'நோ'

கல்விக்கு என்று கடந்த அரசு ஒரு கொள்கையை வைத்திருந்தது. தற்போதைய அரசு அதை மாற்றியமைத்து வேறுவழியில் கொண்டுசெல்கிறது. தற்போதைய அரசிடம் கல்விக்கு என்று சீரான கொள்கை இல்லை. பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும் மற்றும் எல்லோரையுமே குழப்புவதில்தான் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

இவை தவிர, ஊரை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்ற விழிப்புணர்வை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

பெற்றோர்களே! பெரியோர்களே! ஊர்மக்களே! நாங்கள் இனிவரும் காலங்களில் பேசுவதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. கைதடிப் பகுதிக்கு நிறைய உதவிகள் செய்திருக்கின்றேன். எல்லோரும் வாக்குக்கேட்க மட்டும் தான் வருவார்கள். நான் அப்படியல்ல. -என்றார்.

(த-159)

மரண அறிவித்தல்

திருமதி பவநாதன் சிவசோதி



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தை வாழ்விடமாகவும் தற்போது 45, அம்மன் வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவநாதன் சிவசோதி நேற்று (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் பவநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு நாகம்மா தம்பதிகளின் அன்புப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் மருமகளும் சுதாஜினி, சிவாஜினி(UK), சுதர்சன் (சுவிஸ்), சுதாகரன் (கட்டார்), சுபிதா (UK) ஆகியோரின் அன்புத்தாயாரும் குமரகுருபரன்(UK), சுதர்சனா (சுவிஸ்),· உஷாநந்தினி (ஆவரங்கால்), காந்தகுமார்(UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷிகன் (பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக் கழகம்), சோகிஷன், அநுகா, ஆசான் (சுவிஸ்), சஜிந்தன், ஜெசிந்தன், அக்ஷயா (UK), திபிஷன், அபிஷன், அபிராம் (ஆவரங்கால்), அபிகரன், கபிகரன் (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் நாகேஸ்வரி, குகனேஸ்வரி, சதாசிவம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), பங்கயற்செல்வன் (வத்தளை), காலஞ்சென்ற இரஞ்சிதகுமார் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் சிவநாயகம் (நவாலி), இராசம்மா (மல்லாவி), ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**076 226 1817 (மகள்)**
**076 600 6326(பேரன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தரம் 5 பரீட்சையின் பின்னர் பெற்றோர் கவனிப்பதில்லை

## நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் சுட்டிக்காட்டு

கொடிகாமம், டிசெ. 30

முன்பள்ளி மாணவர்களாக இருக்கும்போது அவர்களிடம் அதிகளவில் பெற்றோர் அக்கறை எடுப்பர். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் அதிக கவனம் செலுத்தும் பெற்றோர்கள், அந்தப் பரீட்சை முடிந்தவுடன் பிள்ளைகளின் கல்வி விடயத்தில் அக்கறை கொள்வதில்லை. அதனால்தான்,சிறிய வயதில் பிரகாசமாகச் சாதிக்கும் மாணவர்கள் அடுத்துவரும் காலங்களில் திறன்கள் மழுங்கடிக்கப்பட்டுக் காணப்படுகின்றனர்.

இவ்வாறு, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளரான ஆசிரியர் செ.பிரதாப் தெரிவித்தார்.

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலைவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முன்பள்ளி சிரேஷ்ட ஆசிரியர் திருமதி இரவீந்திரன் மகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டிருந்தார்.

அந்த நிகழ்வில் உரையாற்றுகையில் பிரதாப் மேலும் தெரிவித்ததாவது:

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் சூழ்நிலையை நாங்கள் அவதானிக்கின்றோம். அவர்களின் செயற்பாடுகளில் அக்கறை எந்தளவுக்கு அக்கறை செலுத்துகின்றீர்களோ அதேபோல் இனிவரும் காலங்களிலும் உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியிலும் வினைத் திறனிலும் உங்கள் ஒவ்வொருவரின் பங்கும் இருக்க வேண்டும்.

பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் எழுச்சிக்காகவும் தன்னைஅர்ப்பணித்து அச்சுறுத்தல் இருந்த காலப்பகுதியிலும் இந்த மண்ணைவிட்டு அகலாது பல இன்னல்களையும் எதிர்கொண்டு பல்வேறு தரப்பட்ட இழப்புக்களையும் துயரங்களையும் அனுபவித்து மக்களோடு மக்களாக இணைந்து மக்கள் சேவகனாகப் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எமது பகுதிகளில் சேவையாற்றி வருகின்றார். அவர், தனக்குக் கிடைத்த காலத்தில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இங்கு பல அபிவிருத்திகளைச் செய்துவருகின்றார்.

இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எந்தவொரு அரசியல் வாதியும் செய்யாத, எந்தப் பிரமுகரும் செய்யாத பல வேலைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இந்தப் பகுதிக்குப் பெற்றுத்தந்துள்ளார்.

இந்தப் பகுதியிலுள்ள உங்களுக்கு அவரின் சேவை கிடைத்திருக்கிறது. இங்கு இருக்கும் அனைவரும் அவருடைய கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமாக இந்தப் பிரதேசத்தின் உயர்வுக்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பங்காளர்களாக வேண்டும். என்றார்.

### அதிபர் கருணாகரன் உரை

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் கலந்துகொண்டிருந்தார்.

அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பிள்ளைகள் சுயமாக இயங்குவதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும். முன்பள்ளி மாணவர்கள் எமது பாடசாலையிலுள்ள திறன் வகுப்பறையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாக இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கின்றேன். நீங்கள் எங்களுடன் இணைந்து நேர அட்டவணைப்படி இயங்க அனுமதிக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் இதை வலியுறுத்தியுள்ளார். பாடசாலையும் முன்பள்ளியும் இணைந்தால்தான் கற்றல், கற்பித்தல் செவ்வனே இடம்பெறும். மாணவரை வலுப்படுத்த முடியும்.

கைதடி கிராமப் பிள்ளைகள் இயல்பாகவே இயல் இசை ஆடல் பாடல்களில் திறமையுள்ளவர்களாக காணப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்லும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் குறைவடைந்து செல்கின்றன. - என்றார். (த-159)

# மக்கள் நிராகரித்ததை மறக்க வேண்டாம்

## ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 30

2015ஆம் ஆண்டில் மஹிந்த அரசு தோல்வியடைந்தது. மக்கள் அப்போதைய அரசை நிராகரித்தமைக்கான காரணங்களை புரிந்து செயற்பட வேண்டும். இல்லையேல் பெற்றுக்கொண்ட வெற்றியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



செயற்திறன்மிக்க நாட்டை உருவாக்கும் நோக்கில் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையே நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி தேர்தலின்போது தனது வெற்றிக்காக கீழ்மட்டத்திலிருந்து பெரும் சக்தியாக செயற்பட்ட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி நன்றியைத் தெரிவித்தார்.

'மகத்தான வெற்றியைப் பெற்றுக்கொடுத்த மக்களின் எதிர்பார்ப்புகளை உரியவாறு நிறைவேற்றுவதே எனக்கும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் மக்கள் கையளித்துள்ள சவால்மிக்க பொறுப்பாகும். இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்' என்று சுட்டிக்காட்டினார்.

'கழிவுகளை வெளியேற்றுதல் முதல் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் வரை நாம் செயற்படும் விதத்தை மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளனர். தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் மக்கள் சிரமங்களை சந்திக்கக்கூடாது. வினைத்திறனான மக்கள்நேய அரச சேவையை உறுதிப்படுத்த வேண்டியது அனைத்து அரச சேவையாளர்களினதும் கடமையாகும்' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரச சேவையானது ஊழல், மோசடியற்றதாகக் காணப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தினார்.

'நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு சென்று, பொருளாதாரம் பலமாக கட்டியெழுப்பப்பட்ட நிலையில், 2015ஆம் ஆண்டில் அப்போதைய அரசு தோல்வியடைந்தது. மக்கள் அப்போதைய அரசை நிராகரித்தமைக்கான காரணங்களை புரிந்து செயற்பட வேண்டும். இல்லையேல் பெற்றுக்கொண்ட இந்த வெற்றியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது' என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வீழ்ச்சியடைந்துள்ள தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தி, முதலீட்டாளர்களை பாதுகாத்து, இழந்த தொழில்வாய்ப்புக்களை மக்களுக்கு மீண்டும் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதனூடாகவே பொருளாதார வளர்ச்சியை அடையமுடியுமென ஜனாதிபதி குறிப்பிட்டார். 19ஆவது அரசமைப்புத் திருத்தம் அரச நிர்வாகத்துக்குப் பெரிய தடையாகக் காணப்படுகின்றது. இதனை நீக்குவதற்கான பலமான நாடாளுமன்றத்தின் தேவைப்பாட்டை ஜனாதிபதி வலியுறுத்தியதுடன், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றுவதற்கு ஏதுவான முதன்மை காரணி அதுவாகுமெனவும் குறிப்பிட்டார். (ஒ.5)

## யானை மற்றும் குதிரைகள் சூழ ஐயப்ப சுவாமி வீதிவலம் வந்தார்



யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணம் கோண்டாவிலிலுள்ள ஐயப்ப சுவாமி, இருமுடி தரித்த ஐயப்ப பக்தர்கள் புடைசூழயானைமற்றும்இருகுதிரைகள்சகிதம்கடந்த 27 ஆம் திகதி மாலைவீதிவலம்வந்தார். இதில் ஐயப்ப பக்தர்கள் நூற்றுக்கணக்கானோர்புடைசூழந்துவந்தனர்.

ஐயப்பபக்தர்கள்நல்லூர்இளங்கலைஞர் மன்றத்தில் வைத்து இருமுடி தரித்துக்கொண்டனர். அதன் பின்னர் ஐயப்ப சுவாமி சகிதம்அங்கிருந்துயாழ்ப்பாண நகருக்கு வீதிவலம் வந்து வந்தனர். யானை முன்னேயும் தொடர்ந்து இரண்டு குதிரைகளும் தொடர்ந்து பக்தர்கள் புடைசூழஐயப்பசுவாமியும்வீதிவலம்வந்தார். இந்த ஊர்வலம் கோண்டாவில் ஐயப்ப சுவாமி கோவிலைச் சென்று நிறைவடைந்தது. (து)

## கிழக்கிலும் கண் வைக்கிறது இந்தியா

கொழும்பு, டிசெ. 30

மட்டக்களப்பு விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் மற்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசு தனது விமானப் பயணங்களை மட்டக்களப்பு விமான நிலையம் வரை மேற்கொள்ள விரும்புவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள ஏனைய சர்வதேச விமான நிலையங்களான கட்டுநாயக்க, யாழ்ப்பாணம் ஆகிய விமான நிலையங்களுக்கு இந்திய விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு விமான நிலையத்தை சர்வதேச நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ.5)



## தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழா

வவுனியா, டிசெ.30

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் மற்றும் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கட்சியின் 70 ஆண்டுகள் நிறைவு விழா வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞரணித் தலைவர் பா.சிந்துஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா கலந்து கொண்டார்.

முன்னதாக கட்சியின் கொடியை மாவை சேனாதிராஜா ஏற்றினார். மதகுருமார்களின் ஆசியுரையைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (க-110)

## வரதராஜ பெருமாள் ஏகாதசி கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.



தொடர்ந்து பத்துத் தினங்கள் மகோற்சவம் இடம்பெறும். பதினொராம் நாள் சங்காபிசேகம் இடம்பெறும். எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு 108 சங்காபிசேகமும், விசேட பூசையும் நடைபெற்று 5 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறும். அன்று முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை ஆரம்பமாகி 11 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை திருவடி நிலை யில் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி யாழ். - காரைநகர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் ஆலய வீதியூடாக சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

## ஒன்றுகூடல்

தெல்லிப்பழை, டிசெ.30

ஆண்டிறுதி ஒன்றுகூடலும், இராப்போசனமும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் கருகம்பனையில் அமைந்துள்ள பவன் விருந்தினர் விடுதியில் இடம்பெறும். கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன விதையனைத்தும் விருட்சமே குழுமத்துடன் இணைந்து நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வருங்காலச் செயற்திட்டங்கள், வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் அடுத்த நகர்வுகள் உள்ளிட்ட பல திட்டங்களுக்கான கலந்துரையாடல்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

# ரஜினிக்கு வில்லியாகும் குஷ்பு



சிறுத்தை சிவா இயக்கத்தில் ரஜினி நடித்து வரும் 168ஆவது படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத் ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் நடைபெற்று வருகிறது. ரஜினியுடன் குஷ்பு, மீனா, கீர்த்தி சுரேஷ், பிரகாஷ்ராஜ், சூரி எனப் பலரும் நடித்து வருகிறார்கள்.

மேலும், இந்தப் படத்தில் கீர்த்தி சுரேஷ் ரஜினியின் தங்கையாக நடிக்க, மீனா அவரது மனைவியாக ஒரு கலகலப்பான வேடத்தில் நடிக்கிறார். தான் நடிக்கும் வேடம் குறித்து மீனாவே சொல்லிவிட்டார். இந்த நிலையில், குஷ்பு எந்த வேடத்தில் நடிக்கிறார் என்பது எதிர்பார்ப்பாக இருந்தது. இந்த நிலையில் தற்போது வில்லியாக நடிப்பதா செய்தி கசிந்துள்ளது. அதாவது படையப்பாவில் ரம்யாகிருஷ்ணன் நடித்தது போன்று ஒரு அதிரடி வில்லி வேடம் என்றும் சொல்லப்படுகிறது.

அர்வக்கோளாறு Retweeted
சிறகுகள் @wings_twitz · 5h
இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை.
—— மகாகவி பாரதியார்.

## ருவீற்ஸ்...

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

எதற்காக சண்டையிட்டோம் என்பதை
மறந்து பேச துவங்கும் பொழுது,
ஆரம்பமாகிறது ஓர் நல்ல உறவு!!

SHIVA SWAMY.P@ShivaP_Offl

அனுபவம் அதிகரிக்க அதிகரிக்க உதடுகள்
தம் பேச்சை சுருக்கி கொள்கிறன...!!!

நகுநா @nagu_dimple

நம் தேவைகளை நாமே பூர்த்தி செய்து
கொள்ளும் வேளையில்...
கற்றலும் தேடலும் அதிகமாகிறது.




நம் வாழ்க்கையில் ரெம்ப த்ரில்லிங்கான பயணம் என்பது...



பெட்ரோல் எப்போது தீருமோ என பயந்து பயந்து பைக் ஓட்றது தான்.!

## வெற்றிக்கான சிந்தனைகள் சில



1) நேரம் தவறாண்ம மிக முக்கியம்.

2) சிறியவர்களின் கருத்துக்களிற்கும் மதிப்பளிக்க வேண்டும், சில சமயங்களில் அவர்களின் யோசனைகூட நமக்குப் பயன்படும்.

3) அதிகாலையில் விழித்தெழும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கும்.

4) சோர்வு, சோம்பல் கூடாது.

5) திட்டமிடுதல் மிக முக்கியம். எந்த செயலையும் திட்டமிடாமல் செய்தால் அது முழுமை பெறாது.

6) எதிர்பார்ப்புகளே ஏமாற்றத்திற்கு காரணம். எனவே எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.

7) நாளை என்று எதனையும் தள்ளிப் போடாமல் அன்றே அப்பொழுதே அதைச் செய்ய வேண்டும்.

8) முடிவெடுக்க முன் பலமுறை சிந்திக்க வேண்டும். முடிவெடுத்த பின் தயக்கம் கூடாது.

9) தன் வேலைகளைத் தானே செய்ய வேண்டும். எதற்கும் அடுத்தவரையே நம்பி இருக்கக் கூடாது.

10) வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

11) பாதுகாப்பாய் ஒரே இடத்தில் இருப்பது வளர்ச்சிக்கு உதவாது.

நான் சுத்தி வளைச்சி கேட்கல...
2020 பார்த்து
நேரடியா கேட்கிறேன்...



எங்கள சந்தோசபடுத்த வாரியா.?
இல்ல 2019 போல
ஈவு இரக்கம் இல்லாம
வச்சி செய்ய போறீயா !?

## நிம்மதி

பசியே இல்லாத ஆயிரம்
வயிற்றுக்கு நீ உணவளிக்கும்
போது வரும் நிம்மதியை
விட...
பசியில் வாடும் ஒரு
வயிற்றுக்கு உணவளித்துப்பார்
அதிக மன நிம்மதி
உருவாகும் உன் இடத்தில்..

## தேநீர் கோப்பையையும் சாப்பிடலாம்

குவியும் குப்பையைத் தடுப்பதற்கான வழியைக் குறித்து உலக நிபுணர்கள் தினமும் யோசித்து வருகின்றனர்.

அந்த வரிசையில் நியூசிலாந்து விமான சேவை ஒன்று, பயணிகளுக்கு சாப்பிடக்கூடிய கோப்பையில் தேநீர் நிரப்பித் தருகிறது. தேநீர் அருந்தியவுடன், கொடுக்கப்பட்ட கோப்பையையும் சேர்த்து சாப்பிடலாம்! வெனிலாசுவையுடன் ஏர்நியூசிலாந்து விமான சேவையில் இவை கிடைக்கின்றன.

கேக்கில் செய்யப்பட்ட கப்பில் கோப்பி இருக்கும். முதலில் கோப்பியைக் குடித்துவிட்டு பின்னர் கப்பைச் (கேக்கைச்) சாப்பிட்டலாம். கோப்பி குடித்துவிட்டு கப்பை வீசி எறிந்து சுற்றுச் சூழலுக்கு பங்கம் ஏற்படுத்துவதை விட்டு விட்டு இப்படியான சூழலைப் பாதுகாக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கன.



# மார்கழி மாத ராசிபலன் 2019-2020



## அதிர்ஷ்டத்தை அள்ள போகும் ராசிக்காரர்கள் யார்?



### சிம்மம்

வாழ்வில் வெற்றி, தோல்விகளை அனுபவமாக எடுத்துக் கொண்டு உயரும் சிம்ம ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 5இல் சஞ்சரித்தாலும் கிரகண தோஷம் ஏற்படுவதால் எதிலும் கவனமுடன் செயற்படுங்கள். தேவையற்ற விடயங்களில் தலையிட வேண்டாம்.

வீண்விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் அமைதி நிலவும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சகோதர, சகோதரிகளிடையே கருத்து வேறுபாடு வந்து நீங்கும். முயற்சிகளில் தடை ஏற்பட்டு நீங்கும். புதிய வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும்.

குழந்தைகள் விடயத்தில் அதிக கவனம் தேவை. குழந்தைகள் உடல்நிலையில் பாதிப்பு என்றால் உடனே மருத்துவரை அணுகுங்கள். குழந்தைகளை கண்காணிப்பில் வைத்து அன்புடன் அரவணைத்துச் செல்வது நல்லது. பூர்வீக சொத்து பிரச்சினைகளில் தற்போது தலையிட வேண்டாம். சிறு, சிறு மனகுழப்பம் வந்து நீங்கும். எந்த முடிவையும் எடுத்து செயல்படுத்துவதற்கு முன் நன்கு சிந்தித்துச் செயல்படுங்கள். அவசர முடிவுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

எதிர்பாராத அதிர்ஷ்டமும், தனவரவும் உண்டாகும். கணவன் மனைவிக்குள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதால் வீண் பிரச்சினைகளை தவிர்க்கலாம். காதல் விடயங்களில் தற்போது அமைதி காப்பது நல்லது.

தந்தை வழியில் ஆதாயம் உண்டு. உங்கள் வாழ்வுக்குத் தேவையான வழிகாட்டுதல் கிடைக்கும். நல்ல அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உண்டு. தெய்வ அனுகிரஹம் உள்ளதால் அனைத்துப் பிரச்சினைகளையும் கடந்து வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

காலநேரம் கருதாமல் பணி செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தாலும், உங்களுக்கு வரவேண்டிய மதிப்பும், மரியாதையும் தாமதமாகும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**அதிர்ஷ்டமான நாள்கள்: டிசெம்பர் 28, 29, 30. ஜனவரி 6, 7, 8, 9, 10, 11.**



### கன்னி

எந்த சூழ்நிலையையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறும் கன்னி ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் புதன் பகவான் உங்கள் ராசிக்கு 3இல் சஞ்சரிப்பதால், மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும். எந்த விஷயத்திலும் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும்.

பிள்ளைகளின் நலனுக்காக தேவையானவற்றை செய்வீர்கள். எதிர்பாராத தனவரவு உண்டு. பூர்வீக சொத்து விஷயங்கள் சாதகமாக அமையும். வாகன பயணங்களில் கவனம் தேவை.

குடும்பத்தினருடன் இரவு நேர பயணங்கள் மற்றும் நீண்ட தூர பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வீடு, வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். உங்கள் வீட்டிற்கு உறவினர்கள் வருகை அதிகரிக்கும். தாய் உடல் நிலையில் கவனம் தேவை. தாயுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். ஆவணங்களை சரி பார்த்து வாங்கவும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு வந்து நீங்கும். தம்பதிகள் ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. தொழில் மற்றும் உத்தியோகத்தில் உங்கள் திறமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களுக்கு சாதகமாக இருப்பார்கள். சக ஊழியர்களிடம் கவனம் தேவை. மற்றவர்களிடம் வெளிப்படையாக பேசுவதை தவிர்க்கவும்.

எந்த பிரச்சினையாக இருந்தாலும், அவசரப்பட்டு செயல்படாமல், நிதானமாக சிந்தித்து செயல்படுவது நல்லது. கடினமான உழைப்பால் உங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வீர்கள்.

நண்பர்களால் ஆதாயம் உண்டு. பல வகையில் பணவரவு அதிகரிக்கும். முதலீடுகளால் லாபம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சில நேரங்களில் வீண் செலவுகள் உண்டாகும்.

**அதிர்ஷ்டமான நாள்கள்: டிசெம்பர் 30, 31. ஜனவரி 1. 9 ,10, 11, 12, 13.**


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 07 - 1988 | 29 - 12 - 2019 |

**திருமதி கிருஸ்ணவேணி கோகுலன்**

**(HNB உத்தியோகத்தர் - கைதடி கிளை)**

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணவேணி கோகுலன் நேற்று (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இராசேந்திரக்குருக்கள் றோசமலர் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் பஞ்சாட்சரம் சந்திரமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவலோகநாதக்குருக்கள், மகேஸ்வரி (திருநெல்வேலி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்), நடராசக்குருக்கள், வாலாம்பிகையம்மை (நல்லூர் வீரகாளியம்மன் தேவஸ்தானம்) ஆகியோரின் பேர்த்தியும் பஞ்சாட்சரம் கோகுலன் (வைத்திய அதிகாரி - பூநகரி) அவர்களின் அன்பு மனைவியும் சிந்துஜா (நூலக தகவல் உதவியாளர் - யாழ் பல்கலைக்கழகம்), கிருஷாந் குருக்கள் , பிரசாந் ஐயா ஆகியோரின் அன்பு சகோதரியும் பார்த்தீபன் (யாழ் மாநகரசபை உறுப்பினர்), அலக்சா (மயூ), கௌசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கௌசிகன் (பொறியியலாளர்) அவர்களின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 262 7812
077 909 5024

தகவல்: குடும்பத்தினர்.


## திருமணத் தடை அகற்றும் திருப்பள்ளி எழுச்சி

மார்கழி மாதம் 30 நாள்களும், சைவ வைணவத் திருத்தலங்களில் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களை பாராயணம் செய்வார்கள்.



கன்னிப்பெண்கள், அதிகாலையில் எழுந்து நீராடி, வாசலில் கோலமிடு வார்கள். அந்தக் கோலத்தின் மையத்தில் மங்கலம் தரும் மஞ்சள் நிற 'பூ'வான பரங்கிப் பூவை, சாணத்தில் நடுவில் வைத்து, மகாலட்சுமியை வரவேற்க வேண்டும்.

பிறகு ஆலயத்துக்குச் சென்று திருவனந்தல் நடைபெறும் நேரத்தில், சிவன் வழிபாடும், நடராஜர் வழிபாடும் செய்தால் இறையருளால் இனிய வாழ்க்கை அமையும். மார்கழி மாதம் முழுவதும் தினந்தோறும் சிவபுராணம் பாடுவது நல்லது.

காக்கும் கடவுளான விஷ்ணுவையும், மார்கழி மாதத்தில் அதிகாலை நேரத்தில் வழிபட்டால் திருமணம் கைகூடும். கனிவான வாழ்க்கை அமையும்.

## தமிழில்...

என்று அழுத்தம் கொடுப்பதற்கு தமிழ் நாட்டுக்கு எந்தவொரு தார்மீக உரிமையும் கிடையாது எனவும் அவர் கூறினார்.
இலங்கையின் 72ஆவது சுதந்திர தின விழாவில் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அனர்த்த முகாமைத்துவ, உள்நாட்டு விவகார, மாகாணசபைகள் அமைச்சு எடுத்துள்ளது.
இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அஸ்கிரிய பீடத்தின் உதவிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர்,
இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 65 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்பட்டது. எனினும், நல்லிணக்கம் என்ற போர்வையில் 2016 இல் தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தை இசைக்கவைத்து முன்னாள் அரசே வீண் பிரச்சினையை உருவாக்கியது.
இந்தியாவில் பல மொழிகள் உள்ளன. எனினும், தேசிய கீதமானது ஒரு மொழியில் மட்டுமே பாடப்படுகின்றது. எனவே, இலங்கையில் தமிழ் மொழியிலும் பாடப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு தமிழகத்துக்கு எந்தவொரு தார்மீக உரிமையும் கிடையாது.
வடக்கிலுள்ள அடிப்படைவாத அரசியல்வாதிகள், நாட்டில் மீண்டும் தமிழ், சிங்கள பிரச்சினையை உருவாக்கி, தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவே தேசிய கீத விவகாரத்தை கையில் எடுத்துள்ளனர், என்றார்.

**பிரபாகரனை அவமதிக்கும் செயல்**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட முருத்தெட்டுவே ஆனந்த தேரர், நல்லாட்சி அரசு செய்த நாசகார செயல்களில் தேசிய கீத விவகாரமும் உள்ளடங்கும். எமது அடையாளமாக இருந்த தேசிய கீதத்தை பிறமொழிகளில் இசைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையை துண்டாட நினைத்த பிரபாகரன் யுகத்தில்கூட தேசிய கீதத்தை மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்படவில்லை. சுமந்திரன் போன்ற அரசியல்வாதிகள் செயற்பாடு பிரபா கரனையும் அவமதிக்கும் செயலாகும்.
தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் தான் இசைக்கப்பட வேண்டும். அதில் மாற்றம் வரக் கூடாது - என்றார்.

(ஓ,5,44)

## கிளிநொச்சியில்...

டத்திடல் கலந்துகொள்ளும் வகையில் பேருந்து ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்தவகையில் கல்மடு இராமநாதபுரம் ஊடாக புதுக்காடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி 0778671344 என்ற அலைபேசி இலக்கத்துடனும் நாச்சிக்குடா, ஜெயபுரம், வன்னேரி ஊடாக ஆனைவிழுந்தான் அம்பலப்பெருமாள் சந்தி, கந்தபுரம் ஊடாக கோணாவில், ஊற்றுப்புலம் ஊடாக சேவையர் கடைச்சந்தி, டிப்போ சந்தி ஊடாக கந்தசாமி கோவில் கிளிநொச்சி செல்ல 0779461328 என்ற அலைபேசி இலக்கத்துடனும், விசுவமடு சுண்டிக்குளம், நெத்தலியாறு, தர்மபுரம், புளியம்பொக்க னை கோவிலடி, முரசமோட்டை, பரந்தன், கிளிநொச்சிவரை 0770242104 என்ற அலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும்.
துணிக்காய், ஒட்டங்குளம், பாண்டியன்குளம், பாலியாறு, ஒட்டறுத்தகுளம், வன்னிவிளாங்குளாம் ஊடாக மாங்குளம் கிளிநொச்சிக்கு 0770201854 என்ற அலைபேசி இலக்கத்துடனும் கச்சிலைமடு, ஒட்டிசுட்டான் ஊடாக முள்ளியவளை, தண்ணிரூற்று, சிலாவத்தை, முல்லைத்தீவு ஊடாக செல்வபுரம், வட்டுவாகல் முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, கைவேலி, வள்ளிபுனம், சுதந்திரபுரம், விசுவமடு, பரந்தன், கிளிநொச்சிக்கு 0770287062 என்ற அலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளமுடியும்.
யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி செல்வோர் 077 866 8602 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பேருந்து சேவையை பெற்றுக்கொள்ள முடியும். என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(த-105)

## சிங்களவருக்கு...

இலங்கை சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடா? இந்தக் கேள்விகளுக்குரிய பதில்களை ராஜபக்ஷ அரசு வழங்கியே தீர வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க.
இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சின் சபைகள் அமைச்சில் நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையின் தேசிய கீதத்தை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பாட அரசமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது. தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் பாட மறுப்புத் தெரிவித்தால் அது நாட்டின் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். தேசிய கீதத்தை இரண்டு மொழிகளில் பாடுவதால் நாட்டில் எவ்வித மோதலும் ஏற்படாது. ஒரு மொழியில் மட்டும் பாடினால்தான் அது மொழி முரண்பாட்டுக்கும் இன வன்முறைக்கும் வழிவகுக்கும் - என்றார்.

(ஓ,5,22)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கைலேஸ்வரன்

(ஓய்வு நிலை அதிபர்- யா/ சாவகச்சேரி இந்து ஆ.பாடசாலை)



தோற்றம் 21.02.1947 மறைவு 29.12.2019

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கைலேஸ்வரன் (ஓய்வு நிலை அதிபர்- யா/ சாவகச்சேரி இந்து ஆ.பாடசாலை) நேற்று **(29.12.2019)** ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் கருணாகரன், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் இந்திரஜோதி, சந்திரஜோதி, மங்களஜோதி, குமரேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற பொன்னையா- ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் வனிதாதேவியின் அன்புக் கணவரும் சந்திரலதா (ஆசிரியர் - யா/கைதடி நுணாவில் G.T.M.S), நிர்மலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிமலரங்கன் (ஆசிரியர்- கிளி/பளை மத்திய கல்லூரி), பிரதீபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிதர்சன், கவினேஸ், கவிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
A9 வீதி,நுணாவில் கிழக்கு

## மரண அறிவித்தல்



### செபஸ்ரியாம்பிள்ளை அமிர்தநாதன்


(இளைப்பாறிய அனலைதீவு வைத்தியசாலை உத்தியோகத்தர்)

நாரந்தனை தெற்கை பிறப்பிடமாகவும் அனலைதீவு 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை அமிர்தநாதன் நேற்று (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை கிறிஸ்ரீனா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகேஸ் தையலம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அருள்மொழி, அருநந்தி, தயாபரன், கிருபானந்தன், மதுரங்கனி, பிரபாநந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் குணதீஸ்வரன், மாலினி, பத்மினி, யோகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சிகன், தர்சனா, தாட்சாயினி, அபிநயன், கிருசிகன், விதுசாயினி ஆகியோரின் அன்புப் பேரனும் மற்றும் காலஞ்சென்ற மாக்கிறேற் மற்றும் வசந்தி, சாமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசரெத்தினம், மோகனாம்பிகை, தேவபாலன், சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அனலைதீவு புனித மரியன்னை ஆலயத்தில் நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அனலைதீவு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 030 2905 — தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 .. 11 .. 1936



இறப்பு 29 .. 12 .. 2019

### கந்தையா சண்முகசுந்தரம்

(இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, ஹாட்லி கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகசுந்தரம் (இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர்) நேற்று **(29.12.2019)** ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் கந்தையா சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, மாணிக்கம் ஆகியோரின் மருமகனும், ஆனந்தமலர் (பவளம்) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் முகுந்தன் (கனடா), அபிராமி (கனடா), இளவேந்தன் (ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் , சண்முகம்சோதி மற்றும் தணிகாசலம், காலஞ்சென்ற சண்முகரத்தினம், மனோரஞ்சிதம் (கனடா), காலஞ்சென்ற மதுரை மீனாட்சி , இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரமேந்திரதீசன் (கனடா-காரை நியூஸ் தொகுப்பாளர்), குமுதா (ஜெர்மனி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி , செல்வநாயகம் மற்றும் செல்வராஜா (கனடா), வசந்தமலர் (கனடா), ஆகியோரின் மைத்துனரும், அகிலதாஸ், கிருபா ஆகியோரின் சிறிய தந்தையும், பானு (லண்டன்), பாபு (அவுஸ்திரேலியா) மனோஜி , ஜெந்து (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிரவின் (கனடா), விஷ்வா (கனடா) தீபிகா (கனடா), அர்த்தனா (ஜெர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(31.12.2019)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **9.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அரவிந்தம்"
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:- இலங்கை: 0212263562, முகுந்தன்- (வாட்ஸ்அப் இல.):+14168303102
அபிராமி - (வாட்ஸ்அப் இல.): +14168389575 இளவேந்தன் - (வாட்ஸ்அப் இல.):+4917640594034

SLAS
Open
விசேட இறுதிக் கருத்தரங்குகள்
பிரிவு I
செவ்வாய் [31.12]
சனி [04.01]
ஞாயிறு [05.01]
காலை 9.00- 4.00மணிவரை
பிரிவு II
செவ்வாய் [31.12]
தொடக்கம் பி.ப.5.00 மணி-7.30மணிவரை
மாதிரி வினாத்தாள்கள்
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு வித்திட்ட இரசாயனவியலின் தந்தை

## S.சண்முகசுந்தரம்

அவர்கள் நேற்றைய தினம் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆற்றொணா துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**NEW SCIENCE HALL**
**சமூகத்தினர்**

# மரண அறிவித்தல்கள்

## அன்னம்மா ஆறுமுகம்

(மணியம்மா)




வாகையடி, மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்னம்மா ஆறுமுகம் நேற்று **(29.12.2019)** ஞாயிற்றுக் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப் பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா -பர்வதம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் வசந்தன் (நோர்வே), வசீகரன் (சாவகச்சேரி பிரதேசசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்பரசி (நோர்வே), பத்மினி (ஆசிரியை- யா/ கைதடி, நாவற்குழி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்சய் (நோர்வே), சௌமியா (நோர்வே), அனித்தா, அபிநதா (மாணவிகள்- யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற நாகராசா மற்றும் ஞானப்பிரகாசம் காலஞ்சென்ற நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஞானேஸ்வரன் (CTB) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(30.12.2019)** திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் **1.00** மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**வசீகரன்: 077 923 6260** **குடும்பத்தினர்**



## நாமகள் சண்முகநாதன்

யாழ். வேலணையைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட நாமகள் சண்முகநாதன் 24-12-2019 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் மருதையனார் (வேலணைத் தமிழறிஞர்- முன்னாள் கிராமசபைத் தலைவர்), மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற ஏ. சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், திருமகள் கேதாரநாதன், காலஞ்சென்ற தனிநாயகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆத்மநாதன், நிர்மலன் மற்றும் அருள்நிதி இராதாகிருஷ்ணன், விமலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - மகேஸ்வரி தம்பதிகள், காலஞ்சென்ற இலிங்கப்பிள்ளை மற்றும் புவனேஸ்வரி இலிங்கப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு சம்பந்தியும், காலஞ்சென்ற கேதாரநாதனின் மைத்துனியும், இராதாகிருஷ்ணன், சுதா ஆகியோரின் அன்பு மாமியாரும், மேகலை, கோசலை, யசோதை, திருமகன், சிற்பரன், தயா, அனுஷா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், மானி- சிந்துஜா, காவேரி, கஜன், அத்தன், குகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வேந்தனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30-12-2019) திங்கட்கிழமை மு.ப 09:30 மணிமுதல் ந.ப 12:00 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs.30260) (13.17)

# தமிழர்களின்...

னால், பிள்ளைகளின் மனங்களில் எல்லாம் பிரபாகரன் இருந்து வருகிறார் என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

கண்டியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் தலைகளில் இன்னமும் பிரபாகரனின் சிந்தனை தான் ஓடிக் கொண்டிருக்கிறது. வடக்கில் எமது உறவுகள், பிள்ளைகள் அனைவரும் கடந்த 30 வருடங்களாக பிரபாகரனுக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்து வந்தார்கள். இதனால், பிள்ளைகளின் மனங்களில் எல்லாம் பிரபாகரன் இருந்து வருகிறார். அவரது பெயரைச் சொன்னவுடன் கைதட்டுவதும், கூச்சலிடுவதும் இதன் விளைவுகளினால் தான்.

நீதியரசராக இருந்து வடக்கின் முதல்வராக பதவியேற்ற சி.வி.விக்னேஸ்வரன் கூட இனவாதமாகத்தான் செயற்பட்டு வருகிறார். அவர், இளைஞர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்.

ஆனால், இது பிழையானதொரு எடுத்துக்காட்டாகும். தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என்று அனைவரும் ஒன்றிணைவதன் ஊடாகத்தான் பிரிவினை வாதத்தை இல்லாதொழிக்க முடியும். நாம்தான் இந்த இளைஞர்களின் மனங்களில் நல்லதை விதைக்க வேண்டும்.

27 மொழிகளைக் கொண்ட இந்தியாவில் இனங்கள் ஐக்கியமாக வாழ முடியுமாக இருந்தால், ஏன் எம்மால் வாழ முடியாது. அத்தனை மொழிகள் உள்ள இந்தியாவில், பெங்காலி மொழியில் தேசிய கீதத்தை பாட முடியுமாக இருந்தால், ஏன் இங்கு மட்டும் ஒரு மொழியில் தேசிய கீதத்தை பாட முடியாது? இது முற்றுமுழுதாக இனவாதத்தை வெளிப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். தேவையில்லாமல் இனங்களை பிரிக்க வேண்டாம் என் நாம் கேட்டுக் கொள்கிறோம் -என்றார். (ஒ.5)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகராசா பரமானந்தபிள்ளை



பிறப்பு 16.10.1951 இறப்பு 29.12.2019

வைரவர் கோவிலடி இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகராசா பரமானந்தபிள்ளை நேற்று (29.12.2019) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகராசா மற்றும் சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து செல்வநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தையல்நாயகியின் அன்புக் கணவரும் கலைவாணி (லண்டன்), அபிராமி, காணமூர்த்தி, துவாரகன், வாகீசன், மைதிலி (இணுவில் மத்திய கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ராகவன் (லண்டன்), கிருஷ்ணராம் ஆகியோரின் மாமாவும் யுவர்சிகன் (லண்டன்), அபிசனன் ஆகியோரின் அன்புப் பேரனும் சந்திராதேவி, சிவானந்தம், செல்வராணி ஆகியோரின் சகோதரனும் சிவசுப்பிரமணியம், கனகலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2019) திங்கட்கிழமை மு.ப . 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 355 3484** **தகவல் - குடும்பத்தினர்**

**தோற்றம்** 28 - 04 - 1942



**மறைவு** 28 - 12 - 2019

## திருமதி புவனேஸ்வரி பவானந்தன்

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பவானந்தன் அவர்கள் 28-12-2019 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி, கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா பவானி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற பவானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், விமலினி, நந்தகுமார், தாரணி, காலஞ்சென்ற சஞ்சித்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிக்குலன், மைதிலி, புஷ்பகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீ விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, காலஞ்சென்ற மங்களேஸ்வரன், ஜெகதீஸ்வரி, காலஞ் சென்ற முத்தேஸ்வரி, கமலேஸ்வரி, பரமேஸ்வரன், விமலேஸ்வரி, தியா கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், லஷ்மிகன், தீபிகா, ஜருஷன், அபிராம், அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.12.2019) திங்கட்கிழமை பி.ப 5.00 - பி.ப 9.00 மணிவரை Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை காலை 7.00-9.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று Highland Hills Funeral Home and Cemetery, 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada வில் மு.ப 9.30 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு

நந்தன் (மகன்) - Mobile : +16474005349 சூட்டி (மகள்) Mobile : +16472394717
தாரணி (மகள்) - Mobile : +492318823827 ரவிகுலன் (மருமகன்) - Mobile : +14049249067

# புல்லு...

மட்டுவில் வடக்கு மட்டுவிலைச் சேர்ந்த கந்தன் சண்முகம் (வயது-65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 26ஆம் திகதி சூரிய கிரகண நாளில் காணி துப்புரவு செய்யச் சென்றுள்ளார். புல்லுக்குள் இருந்த புடையன் பாம்பு தீண்டியுள்ளது. அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணை களை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ.5,26,159)

# 10கிலோ...


பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவ ளைப்பில் 10 கிலோகிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கொன்னையன் குடியிருப்புப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சோதனை நடவடிக்கைகளை அறிந்த சந்தேகநபர்கள் தப்பிச் சென்றிருக்கக்கூடும் என்று நம்பப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப் படவில்லை. கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மோட்டார் சைக்கிளுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ஒ.5)

# பார்த்தீனியம்: மண்ணை விழுங்கும் அசுரக்களை!

சுதர்சினி முத்துலிங்கம்,
ஊடகக் கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



இலங்கையைப் பொறுத்தமட்டில் அந்நிய ஆதிக்கத்தால் இங்கு வேரூன்றிய விடயங்கள் ஏராளம். அப்படியான அந்நிய ஆக்கிரமிப்புகளில் ஒன்றாக , 1980களில் இந்திய இராணுவத்தினர் இலங்கையினுள் 'அமைதிப்படையினர்' என்ற பெயரோடு உள்நுழைந்த வேளையில், அவர்களின் உணவுத் தேவைக்காக இந்தியாவிலிருந்து செம்மறியாடுகள் வரவழைக்கப்பட்டன. அவற்றின் தோல்களில் ஒட்டப்பட்டும் மலத்தில் சமிபாடடையாத உணவாக இருந்தும் "பார்த்தீனிய விதைகள்" இலங்கை மண்ணில் பதுங்கிக் கொண்டு நிலையெடுத்தன. இப்போது தமிழர் தாயகப் பகுதியில் மண்ணின் வளத்தை விழுங்கி ஏப்பமிடும் களையாக, அழிக்க முடியாத அசுரனாக பார்த்தீனியம் விஸ்வரூபமெடுத்துள்ளது.

"பார்த்தீனியம் ஒரு நச்சுக்களை, ஒரு அந்நியக்களை, ஓர் ஆக்கிரமிப்புக் களை" என்று பல இடங்களில் அறிவுறுத்தல் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும். ஆனாலும் அப்பதாகைகளின் கீழே கூட பார்த்தீனியச் செடி பற்றையாகப் படர்ந்து, அந்தப் பதாகைகளைக் கேலி செய்து பல்லிழிப்பதையும் பலரும் அவதானித்திருக்கலாம். எனவே இந்தப் பதாகைகள் எல்லாமே வெற்றுப்பலகைகளாகத் தண்டத்துக்குத் தொங்கிக் கொண்டிருக்கின்றனவே தவிர, மக்களிடம் எவ்வித விழிப்புணர்வை யும் அவை ஏற்படுத்தவில்லை என்பதே யதார்த்தம்.

பார்த்தீனியம் விளைவிக்கும் தாக்கங்கள் பற்றி சரிவர உணர்ந்து கொண்டாலே, நம்மில் பலர் அதனைக் பிடுங்கியெறிந்து அகற்றிட முன்வருவர். மூச்சுத்திணறல், சரும அழற்சி, சொறி கரப்பான், ஆஸ்துமா, ஈழை நோய், குருதி செவ்வணு நலிவு, காசநோய், ஒவ்வாமைபோன்ற பல நோய்களை மனிதர்களுக்கு ஏற்படுத்துவதில் பார்த்தீனியச் செடிகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. ஆடு, மாடு போன்ற கால்நடைகளையும் பார்த்தீனியம் விட்டுவைப்பதில்லை. மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் புற்களோடு சேர்த்து பார்த்தீனியத்தையும் உண்பதால் அந்தக் கால்நடைகளில் பால் சுரக்கும் விகிதம் குறைவடைந்து, சிறிதளவில் மறைமுக நச்சுத்தன்மையும் உருவாகும் வாய்ப்புண்டு. மனிதர்கள், மிருகங்களையன்றிபயிர்களையும் பார்த்தீனியம் தாக்குகின்றது. பார்த்தீனியச் செடிகளிலிருந்து வெளியாகும் ஒரு சுரப்பி பிற தாவரங்களுக்கும் பரவி அவற்றை அழிவடையச்செய்து தன் பரவுகையை விஸ்த ரிக்கின்றது. அத்துடன் விளைநிலங்கள் மற்றும் வளிமண்டலத்தைப் பாதிக்கும் தன்மையும் பார்த்தீனியத்துக்கு உண்டு.

பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், அவற்றில் பூக்கள், பூக்கும் முன்னரே அந்தச் செடிகளை வேருடன் பிடுங்கி அகற்றி விட வேண்டும்.

பார்த்தீனியம் பூத்து விட்டதன் பின்னர் அகற்றினால் , அந்தப்பூக்கள் காற்றினால் பரவலடைந்து புதிய செடிகள் உருவாகும். ஒரு பார்த்தீனியச் செடியிலிருந்து 2000-5000 வரையான செடிகள் உருவாகும் என்றும் கூறப்படுகின்றது. பார்த்தீனியச் செடிகளின் மேல் உப்புத் தண்ணீரை தெளித்தால் அவை கருகிப் போய்விடும். ஆனால் இவற்றினை கைகளால் தொடாமல் அப்புறப்படுத்துவதே சிறந்தமுறை. வீடுகளில், தோட்டநிலங்களில் பார்த்தீனியச் செடி காணப்பட்டால் அபராதம் அல்லது சிறைத்தண்டனை என சட்டங்கள் இருப்பினும் அவை நடைமுறையில் இல்லை என்பதும் உண்மையே. அரசு இது தொடர்பில் தண்டனைகளை இறுக்கமாக்கினால் பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த இயலும். எம்முடைய மண் வளமானதொன்று. அதனை இவ்வாறான அந்நிய நச்சுக் களைகள் ஆக்கிரமித்து வளம் குன்றியதாக்க இனியும் நாம் அனுமதிக்கக் கூடாது. அவரவர் நிலங்களில் உள்ள பார்த்தீனியங்களை அவர்களே களையெடுக்க, முதலில் அவர்களுக்கு பார்த்தீனியம் தொடர்பாக விழிப்பு ணர்வுகளைக் கொடுக்க வேண்டியது அவசியமானது. விழிப்புணர்வு டன் மக்கள் செயலாற்றி பார்த்தீனியத்தினை அழித்தால் மண்வளமாகும். நாடும் நலமாகும்.

# ஒளி வேண்டி நிற்கும் பொன்னொளிநகர்

புலேந்திரன் சங்கீர்த்தனா
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



போரும், போர் சார்ந்த வாழ்வும் தமிழர்களை 3 தசாப்தங்களுக்கும் மேலாக அலைக்கழித்து, அவர்களின் வாழ்வாதாரத்தையும் உலுப்பி விட்டே ஓய்ந்துள்ளன. ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இன்றும் பல குடும்பங்கள் உள்ளன. அப்படி அடிப்படைத் தேவைகளை இழந்து நிற்கின்ற மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் செயற்பாடுகளும் இன்னொரு பக்கமாக நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

அந்தவகையில் சொந்தநிலமோ, வீடோ இல்லாத 65 குடும்பங்களுக்கு , வாழிடத்தை ஏற்படுத்தும் வகையில் ,வலிகாமம் மேற்கு மூளாய்ப்பகுதி பொன்னாலையில் அமைக்கப்பட்டதுதான் பொன்னொளி மீள்குடியேற்றத் திட்டம். வீடமைப்புத்துறை அமைச்சராக அப்போது பதவி வகித்த சஜித் பிரேமதாசவினால், 2019 மார்ச் 08 அன்று இந்தக் குடியேற்றத் திட்டம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டதில் இருந்து, குறித்த 65 குடும்பங்களும் இங்குதான் வசித்து வருகின்றனர். இங்குள்ளவர்கள் ஆடு, மாடு, கோழிவளர்ப்பு, விவசாயம் செய்தல், கூலித்தொழில் மற்றும் கடற்றொழில் ஆகியவற்றை தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.




இதுவரை காலமும் இருக்க இடமின்றி , இரவல் காணிகளிலும், வீடுகளிலும் வாழ்ந்த இந்த மக்களின் வாழ்வில் பொன்னொளிநகர், புதிய நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சியிருந்தாலும், விட்ட குறை தொட்ட குறையாக இங்கும் பல அடிப்படைச் சவால்கள் அவர்களைப் பின் தொடரவே செய்கின்றன.

சீரான போக்குவரத்துக்குரிய பாதை இல்லை. பகலிலேயே பயணிக்கச் சிரமப்படும் அந்தப்பாதையில் , இரவில் செல்வதற்கு ஏற்ற வீதி விளக்குகள் இன்னமும் பொருத்தப்படவில்லை. நீங்கள் பொன்னொளி நகருக்குப் போனால் அங்கு , முன்பள்ளி செல்ல வேண்டிய பிள்ளைகள் பலரும், கூடியிருந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம். காரணம், 65 குடும்பங்கள் வாழும் அந்தக் குடியேற்றத் திட்டத்தில் முன்பள்ளி ஒன்று அமைக்கப்படவில்லை. தொலைவில் உள்ள முன்பள்ளிகளுக்கு பிள்ளைகளைக் கொண்டு செல்வதில் சிரமம் இருப்பதால், பேசாமல் அவர்களை வீட்டிலேயே விட்டுள்ளனர். இதனால் சிறுபராயத்தில் அவர்களுக்கான அடிப்படைக் கல்வி தாமதாகின்றது.

மழைகாலம் வந்துவிட்டால் பொன்னொளிநகர் , தனித் தீவாக மாறிவிடுமளவுக்கு வெள்ளப் பெரும் பிரச்சனையாக மாறியுள்ளது. கடற்கரையை அண்டிய ,வெள்ளம் வழிந்தோடும் பகுதியில் இந்தக் குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதாலேயே இந்த நிலை. எனவே உரிய வடிகாலமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுக் கிராமங்களில் இருந்து வரும் வெள்ளத்தின் பாதையை மாற்றியமைத்து, கடலுக்குச் செல்ல விடுவதன் மூலம் எதிர்காலத்தில் ஓரளவுக்கு வெள்ளப் பாதிப்பைக் குறைக்கலாம். அதற்கும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருபுறம் நீரால், வெள்ளப் பிரச்சினை ஏற்படுகின்றதென்றால், இன்னொரு பக்கத்தில் அதே நீருக்காக இந்தக் குடியேற்றத்திட்ட மக்கள் அலைந்து திரியவும் செய்கிறார்கள். பொன்னொளிநகர் அமைந்துள்ள புவியியல்தன்மையால் அந்தப்பகுதியில் பெறப்படும் நீர் உவர் நீராகவே உள்ளது. இங்கு பொதுக்கிணறு ஒன்று உள்ள போதும் அதுவும் உவர்நீராக இருப்பதால், குடிப்பதற்கான நீரை ஒரு கிலோமீற்றருகும் அப்பால் உள்ள தூர இடங்களுக்குச் சென்றே இவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இல்லாவிட்டால், பிரதேச சபை, தனியார் என்போரிடம் பணம் செலுத்தி பவுசர் மூலம் குடிநீரைப் பெற்று கொள்ள வேண்டியுள்ளது. மழைநீரைச் சேகரிக்கும் தாங்கி சில வீடுக ளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் குறித்த வீட்டில் உள்ளவர்கள் குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவு நிவர்த்திக்க முடியும். அதேபோல சகல வீடுகளுக்கும் இந்த மழை நீரைச் சேகரிக்கும் தாங்கியை அமைப்பதன் மூலம் பொன்னொளிநகரின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர் வைக் காணமுடியும்.

தனியே தங்குமிடங்களை மட்டும் அமைத்துக் கொடுத்து விட்டு, அவர்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்து விட்டதாகக் கணக்குக் காட்டாமல், குடியிருப்பில் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை இல்லாதாக்கி, மற்றையோரைப் போல அவர்களும் சகல அடிப்படை வசதிகளும் கிடைக்கப்பெற்றவர்களாக மாற உரியவர்கள் வழிவகை செய்தல் வேண் டும். அப்போதுதான் பெயருக்கேற்றாற் போல பொன்னொளி நகர் , ஒளியோடு பிரகாசிக்க முடியும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாங்க வேற நாடு நீங்க வேற நாடு

இலங்கைத் தீவில் 70ஆண்டுகளாக கொப்பளித்துக் கொண்டிருக்கின்ற இனமுறுகல் இன்னமும் வளர்ந்து கொண்டு செல்கின்றது. சமாதானம், நல்லிணக்கம் என்பன வெறும் வாய்ச் சொற்களாகிக் கொண்டிருக்கின்றன. இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை என்பதே எட்டாமலே சென்று கொண்டிருக்கின்றது. இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை வளர்க்க வேண்டிய தலைவர்களும், மதப் பெரியார்களும் இன்னமும் இனவாதத் தீயை விதைத்து அதிலிருந்து குளிர்காய்கின்றனர். இது இலங்கையின் துரதிஷ்டம்.

இலங்கையின் சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதில்லை என்ற அரசின் முடிவு, இந்த நாட்டை பிளவுபடுத்தி நிற்கின்றது. சிங்கள– பௌத்த பேரினவாதம் எப்போதும் தமிழர்களை இந்த நாட்டின் குடிமக்களாக மதித்ததில்லை. தங்கள் நாட்டில் வந்தேறு குடிகளாக இருக்கும் தமிழர்களுக்கு எந்த உரிமையும் வழங்கத் தேவையில்லை என்பது அவர்களின் வாதம். புனையப்பட்ட வரலாறுகளை வைத்துக் கொண்டு காலாதி காலமாக தமிழர்களுக்கு எதிராக, அவர்களின் இருப்புக்கு எதிராக போர் தொடுத்து வருகின்றது சிங்கள – பௌத்த பேரினவாதம்.

நல்லாட்சி அரசின் காலத்தில் சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. மஹிந்த தரப்பு அப்போதே அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. இப்போது தமது ஆட்சியில் தமிழ் மொழியை தூக்கிக் கடாசியிருக்கின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள – பௌத்த பேரினவாதம் விஸ்பரூபம் எடுத்துள்ளது. இது சிங்கள – பௌத்த கடும் போக்குவாதிகளுக்கு உற்சாகம் ஊட்டியிருக்கின்றது. நல்லாட்சியின் காலத்தில் அவ்வளவாக எடுபடாத சிங்கள – பௌத்த கடும் போக்கு வாதம் இப்போது உச்சாணிக் கொப்புக்கு போயிருக்கின்றது.

இது சிங்கள தேசம். தமிழர்கள் இங்கு வாழ்ந்து விட்டுப் போகலாம் என்கின்ற அளவுக்கு கடும் போக்குவாதிகளின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

இந்தியா போன்ற பல மொழி பேசும் நாட்டிலேயே, பெங்காலி மொழியில்தான் தேசிய கீதம் பாடப்படுகின்றது. அப்படியிருக்கையில் இலங்கையின் ஏன் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அவர்கள் இப்படிக் கேட்பது ஒன்றும் புதிதில்லை. அப்படிக் கேட்கின்ற தலைவர்கள், இந்தியா போன்ற பல மொழி பேசும் நாட்டில், அங்கு ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மாநிலம் இருக்கின்றது என்பதையும், அந்த மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படாமல் பிரிக்கப்பட்டிருப்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். அந்த நாட்டில் இருக்கின்ற குடிமகன் ஒவ்வொருவனும், பெங்காலி மொழியில் தேசிய கீதம் பாடுவதை எதிர்ப்பதில்லை. அவன் மீது மொழித் திணிப்புச் செய்யப்படவில்லை. அவனுக்கு அவனுடைய நாட்டில் ஏனைய இனங்களுக்கு, மொழிகளுக்கு சமனாக வாழும் உரிமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

இந்தியாவை உதாரணத்துக்கு ஒப்பிட்டுப் பேசும் சிங்களத் தலைவர்கள், குறைந்தபட்சம் அங்கு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களையாவது வழங்கத் தயாராக இருக்கின்றார்களா என்பதை தங்கள் மனச்சாட்சியை (?) ஒரு தரம் கேட்டுப் பார்க்கட்டும். இந்தத் தீவில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள், இதனை தங்கள் நாடு என்று விரும்பி ஏற்றுக்கும் அளவுக்கு, இந்த நாட்டுக் குடிமக்கள்தான் அவர்கள் என்று உணரும் அளவுக்கு நீங்கள் இதுவரை ஏதாவது செய்ததுண்டா?

இலங்கையில் சிங்கள – பௌத்த வாக்குகளால் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோத்தாபய, சிங்கள மக்கள் விரும்பாத ஒன்றைச் செய்யப் போவதில்லை. அவர்கள் விரும்பாத தீர்வை தமிழர்களுக்கு வழங்க முடியாது என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார். தமிழில் தேசிய கீதம் பாடப்படும் விடயத்திலேயே சிங்களவர்களின் மனோநிலை என்னவென்று பட்டவர்த்தனமாகத் தெரிகின்றது. அப்படியிருக்கையில் இந்த நாட்டில் சமமாக வாழும் உரிமையை சிங்களவர்கள் தருவார்கள் என்று தமிழர்கள் எப்படி எதிர்பார்ப்பது? தமிழர்களை அரவணைப்பதற்குப் பதிலாக எட்டி உதைத்து, விரும்பினால் எங்களுடன் இணைந்து வாழுங்கள் என்று மிரட்டும் சிங்கள – பௌத்த பேரினவாதத்துடன் எப்படி வாழ்வது?

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆள்வதற்கு முன்னர் வரையில், இந்தத் தீவில் தமிழர்களுக்கு என்று ஒரு இராச்சியம் இருந்ததை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்திருப்பது நல்லது.



# கையொப்பமிட்டார் சம்பிக்க ரணவக்க!



**கொழும்பு, டிசெ.30**
**ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க நேற்றுக் காலை கொழும்பு குற்றவியல் பிரிவு முன்னிலையாகிக் கையொப்பமிட்டார்.**

2016ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் விபத்தை ஏற்படுத்தி விட்டுத் தப்பிக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த, சம்பிக்க ரணவக்க கடந்த 24 ஆம் திகதி நீதிமன்றில் நிறுத்தப்பட்ட போது அவரது சார்பில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.
அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மேலதிக நீதவான், அவரை 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஐந்து பேரின் தலா 5 இலட்ச ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார். மாதத்தின் இறுதி வாரத்தில் குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாக வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று அங்கு சென்று கையொப்பமிட்டு, நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனையை நிறைவேற்றினார்.
குற்ற விசாரணைப் பிரிவுக்கு சென்று திரும்பும் வழியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சம்பிக்க, உண்மையை என்றும் மறைக்க முடியாது. நான் நிரபராதி. விரைவில் அது அனைவருக்கும் தெரிய வரும் என்றார்.
அதேவேளை, தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ராஜிதவை நேற்றைய தினம் சம்பிக்க சந்தித்து சுகநலம் விசாரித்துள்ளார். (எ-44)

# கட்டுப்பணம் மிகக் குறைவு

## தேசப்பிரிய ஆதங்கம்



கொழும்பு, டிசெ.30
பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் அதிகளவில் களமிறங்குவார்கள். வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை அதிகரிக்காத பட்சத்தில் ஜனாதிபதித் தேர்தல் போன்று பெரும் சிக்கலுக்கு முகம் கொடுக்க நேரிடும்.
இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தற்போது 70 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றில் இருந்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு வேட்பாளர் களமிறங்கும் பட்சத்தில் வேட்பாளர் தொகை அதிகரிக்கும். அதைப்போன்று சுயேச்சை வேட்பாளர்கள் களமிறங்கும் பட்சத்தில் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கும்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் களமிறங்கியமையால் மேலதிகமாகப் பெரும் தொகையைச் செலவிட நேர்ந்தது. பொதுத் தேர்தலில் அதிக வேட்பாளர்கள் களமறங்கினால் செலவு பல மடங்கு அதிகரிக்கும்.
1981ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப் பணத் தொகையே தற்போதும் அறவிடப்படுகின்றது. அந்தக் காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட 10 கட்சிகளே இருந்தன.
ஆனால் தற்போது நிலமை வேறு. அந்தக் காலத்துடன் ஒப்பிடும் போதும் கட்டுப்பணம் 50 மடங்கால் அதிகரிக்கப்பட வேண்டும்.
கட்டுப் பணத் தொகையை அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான திருத்தச் சட்ட வரைபுக்கு நாடாளுமன்ற அனுமதியை எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (எ)

# பற்றைகளை அகற்றி மரக்கன்று நடலாம்

நல்லூர்.டிசெ.30
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் குடியிருப்புக்களுக்கு முன்பாக பாதையோரம் படர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகளை அகற்றி, அவற்றுக்குப் பதிலாக நிழல் தரக்கூடிய மரக்கன்றுகளை நடுகை செய்யலாம் என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது.
குடியிருப்புக்களுக்கு முன்பாக பாதையோரம் வளர்ந்து காணப்படும் பற்றைகளால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளன.
எனவே சபைக்கு உட்பட்ட பகுதியை அழகுபடுத்தும் நோக்கில் மக்கள் பூ மரங்கள், நிழல் மரக்கன்றுகள் போன்றவற்றை அந்த இடங்களில் நடுகை செய்ய முடியும் என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது. (க-17)

# சிரமதானம்

பளை,டிசெ.30
பளை மத்திய கல்லூரியில் டெங்கு கட்டுப்பாட்டுச் சிரமதானமும், பாடசாலை சீருடைக்கான உறுதிச்சீட்டுக்கள் வழங்கலும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும். கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோரை சிரமதானத்தில் பங்குபற்றுமாறு அதிபர் க. உதயகுமார் கேட்டுள்ளார். (க-9)



# டெங்கு விழிப்புணர்வு

டெங்கு அபாயம்– வீட்டிற்கு உள்ளேயும் டெங்கு நுளம்புகள் பெருக்கமடையலாம். எனவே குளிர்சாதனப் பெட்டிகளின் பின் பகுதியிலுள்ள நீர் தேங்கும் பகுதி, வீட்டுடன் கூடிய நாளாந்தம் பாவிக்கப்படாத மலசலகூடங்கள் தண்ணீர் சேகரித்து வைக்கும் கொள்கலன்கள், தண்ணீர்த் தொட்டிகள் போன்றவற்றில் நுளம்புகள் பெருக்கமடையாதவாறு அவதானித்துக் கொள்ளுங்கள்.

# முகாமுக்குள் முடங்கும் கல்வி!



இ.முரளிகரன்,
ஊடக கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பிரதேசமானது நீண்டகாலமாக இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாகும். இது இன்று பகுதியளவில் விடுவிக்கப்பட்ட போதும், ஒரு பகுதி மக்கள் இருபத்தோரு ஆண்டுகளாக தமது சொந்த நிலத்தை விட்டு வலி. தெற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட தனியார் ஒருவரின் காணியில் இத்தனை ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். ஒரு மாதிரிக் கிராமமாக உருவாக்கப்பட்டுள்ள சபாபதிப்பிள்ளை என்னும் இந்த முகாமில் 80 க்கும் மேற்பட்ட குடும்பங்க ளும், 400 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களும் காணப்படுகின்றனர்..இதில் அதிகளவு 5 முதல் 18



வரையான பள்ளிப் பருவச் சிறார்களை அதிகம் அவதானிக்க முடிந்தது. இத்தனை வருட காலமாக வசித்து வருகின்ற மக்களுக்கு உரிய ஜீவனோபாய வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுக்க ஆட்சியாளர்களும், அதிகாரமிக்கவர்களும் தவறிவிட்டனர்.இவர்கள் பரம்பரையாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள். எனவே அவர்களுக்குரிய எவ்விதமான வசதிகளும் இங்கு இல்லை .அவர்களுக்கான மாற்று நடவடிக்கைக்குரிய எந்த ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல கூலித்தொழில், துப்பரவுத்தொழில் போன்றவற்றில் ஈடுபட்டுவருகின்றனர். எனவே அன்றாட வாழ்க்கை யைக் கொண்டு செல்லச் சிரமப்படும் மக்கள் தமது பிள்ளைகளின் கற்றலிலோ, கற்பித்தல் செயற்பாடுகளிலோ அக்கறை இல்லாதவர்களாகவும். தமது வருவாய்க்காக பிள்ளைகளில் தங்கி நிற்கும் நிலையையும் காணமுடிகின்றது.

### இக்கட்டில் ஆரம்பக்கல்வி

இந்த சபாபதிப் பிள்ளை முகாமில் உள்ள முன்பள்ளி மாணவர்களின் நிலைமையினை அவதானிக்கின்ற போது அவர்களின் கிராமத்தை விட்டு வெளியே எங்கும் கற்பித்தலை பெற்றுக்கொடுக்க வசதி இல்லாமல் உள்ளனர். அப் பகுதியில் ஒரு முன்பள்ளி காணப்படுகிறது. இது வரை நாம் பார்த்த முன்பள்ளிகளிலே மிகவும் மோசமான கட்டிடம் இதுவாகும். இரண்டு மேசைகள் ஆறேழு கதிரைகளை கொண்டதாக காணப்படுகிறது. இது சாதாரண தரம் வரை கல்விகற்ற ஒரு பெண்மணியினால் சிறார்களுக்குக் கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.முறையாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் இன்று வரை இல்லை. சிறு பிள்ளைகளுக்குரிய முறையான குடிநீர் வசதியில்லை. வகுப்பறையில் இருந்து உணவு அருந்தவோ கைகளைச் சுத்தம் செய்யவோ கிராமத்தின் மத்தியில் உள்ள நீர் குழாயை நாட வேண்டியுள்ளது. கழிப்பறை வசதியும் அறவே கிடையாது. சிறுவர்கள் மல, சலம் கழிக்க வேண்டுமாயின் கிராமத்தின் மத்தியில் உள்ள பொதுக் கழிப்பறைக்கே செல்ல வேண்டும். அதுவும் மிகவும் அருவருப்பான நிலையிலே காணப்படுகிறது.

அத்துடன் சிறுவர்களுக்கான விளையாட்டுப்பூங்கா, உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு மேல் ஆகிறது. ஒரு சில விளையாட்டு உபகரணங்கள் பற்றைக்குள் மறைந்து விட்டன. ஊஞ்சல்கள் தடத்திலேயே இல்லை. உடைந்து ஆடமுடியாத நிலையில் உள்ளன. இப்படியான நிலையில் பலத்த போராட்டத்துடனே சிறார்கள் ஆரம்பகல்வியைத் தொடர்ந்து.வருகிறார்கள்.

### கால்நடையாகப் போய்வரும் மாணவர்கள்

இங்கு முதலாம் ஆண்டில் இருந்து சாதாரண தரம் வரை மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் தமது முகாமில் இருந்து சுமார் 3கி.மீ தொலைவில் இவர்களுக்குரிய பாடசாலை காணப்பட்டது. ஆனால் ஒன்றரை வருடங்களுக்கு முன் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மயிலிட்டி பிரதேசத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதுடன் இப் பகுதி மக்களுக்கு உரித்தான மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் விடுவிக்கப்பட்டது. இதனால் முகாமுக்கு அருகில் தற்காலிகமாக இயங்கி வந்த பாடசாலை 14 கி.மீ தொலைவிற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. எனவே இது வரை கால்நடையாகச் சென்று கற்று வந்த அனைவரும் பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள்.

குடும்பங்களின் பொருளாதார நிலை மோசமாக உள்ள காரணத்தால் சில பிள்ளைகள் தினமும் பாடசாலை செல்ல முடியாத நிலைமையில் உள்ளனர். பல மாணவர்கள் ஒன்பதாம் பத்தாம் தரங்களுடன் பல தரப்பட்ட வேலைகளுக்குச் செல்பவராக காணப்படுகின்றனர். இவர்களில் பெண் பிள்ளைகள் சிலர் மட்டுமே தனியார் வகுப்புகளுக்குச் சென்று வருகின்றனர். ஆண் மாணவர்கள் செல்வது மிகவும்குறைவு. பள்ளிப்பருவ மாணவர்களின் வாழ்வியலானது சொந்த வீடுவாசல் இல்லாமல் பல்வேறு விருப்பங்கள்,ஏக்கங்கள், தனிமையான நிலை,இயல்பு வாழ்க்கைக்காக போராடிக்கொண்டிருக்கும் அவர்களின் மனநிலையை மாற்றுவார் யாரோ?

# இயங்குசக்திகளின் பங்காளி பெண்

ப.துஷியந்தினி
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

புதுமைகள் நிறைந்த புதியதோர் உலகத்தில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.உலகில் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சிகளைத் தொடர்ந்து தலைமைத்துவத்திற்கான மதிப்பு பாரியளவில் அதிகரித்துள்ளமையை நம்மால் உணர முடிகிறது.அதிலும் ஆண்களை விட பெண்களே தங்களின் ஆற்றல்களைப் பரந்தளவில் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர். அழகு மற்றும் மென்மை என்றால் முதலில் நினைவில் வருவது பெண்கள் தான். ஆனால் வேகமான காலநிலை மாற்றத்தினால் ஈர்க்கப்பட்டு நவீன யுகத்தில் பயணித்துக் கொண்டிருக்கையில் பெண்கள் தங்களுக்கு காலம்காலமாக கொடுக்கப்பட்டிருந்த அடிமை வாழ்க்கையிலிருந்து தம்மை விடுவித்து இன்று ஆண்கள் செய்யும் அனைத்து வேலைகளிலும் சம பங்கு வகிக்கின்றனர் . அதற்கு அப்பாற்பட்டும் தங்களுடைய சக்தியினை விஸ்தரித்து சகலகலா வல்லவர்களாகத் திகழ்கின்றனர்.

உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் அதிகம் மதிப்பளிப்பவர்கள் பெண்கள்தான். பெண்கள் தங்களின் வாழ்க்கைப் பருவங்களில் குழந்தை, சிறுமி, இளமங்கை, மனைவி, மருமகள், தாய், மாமியார், பாட்டி எனும் பல கட்டங்களில் பல வடிவங்களாகத் தங்களை வடிவமைத்துக் கொள்பவர்கள்.எல்லாக் கட்டத்திற்கும் ஏற்பவும் தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளத் தெரிந்தவர்கள். ஆண்களை விட பெண்களே சிறந்த தலைமைத்துவம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.குடும்பத்திலிருந்து தான் பெண்ணின் தலைமைத்துவ ஆற்றல் வெளிப்பட ஆரம்பித்தது.ஒரு குடும்பத்தை சரியான முறையில் நிர்வகிப்பது என்பது மிகக் கடினமான விடயமாகும்.அதிலும் முக்கியமாக குடும்ப அங்கத்தவர்கள் அனைவரினதும் தேவைகளை குடும்பத்தின் குறிப்பிட்ட வருமானத்திற்குள் பூர்த்தி செய்வதென்பது இலகுவான விடயம் அல்ல. இன்று ஆண்களை விடப் பெண்களே தங்களின் குடும்பத்தை மிகச் சிறப்பாக வழிநடத்திச் செல்கின்றனர். தங்களின் நாளாந்த தேவைகளை இலகுவாகச் சமாளிப்பதுடன் எதிர்காலத்திற்காவும் அவர்கள் சேமிக்கத் தவறுவதில்லை.

பெண் பிள்ளைகள் பிறந்தால் அதனைக் கொன்று புதைத்து விடுகின்ற கொடுமைகள் அரங்கேறிய அறியாமைக் காலம் போய் இன்று பெண்கள் கல்வி கற்பது தொழில் புரிவது, நிர்வாகிகளாக விளங்குவது, பேச்சாளர்களாக, மருத்துவர்களாக, பொறியியளாளர்களாகவும் வாழ்கின்றனர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.பண்டைய காலத்தில் இலக்கியங்களில் கதை நாயகியாகவும், கவிஞராகவும், குடும்பத்தலைவி யாகவும் தாயாகவும் மட்டுமே தன்னுடைய வட்டத்தினை அமைத்துக் கொண்டிருந்த பெண்கள் இன்று அவ்வட்டத்திலிருந்து வெளிவந்து மாற்றத்துக்கு தம்மைத் தயார்படுத்தி அம் மாற்றத்தினையும் சந்தித்து அன்று எல்லாத் துறைகளிலும் சாதனை படைத்து ஆளுமை மிக்கவர்க ளாக மாறியுள்ளனர்.

ஒரு புறம் நவீன நாகரிக வளர்ச்சி மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி மறுபுறம் கல்வி வளர்ச்சி மற்றும் வாழ்க்கைச் செலவுகளின் உயர்வு என இவையனைத்தையும் சந்திக்க வேண்டிய சூழலுக்கு பெண்ணானவள் தள்ளப்படுகிறாள். ஓருகாலத்தில் கல்வி அறிவினை முழுமையாகப் பெற்றிடாத பெண்கள் இன்று கற்றலில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகின்றனர் .ஏனென்றால் கல்வியே ஒரு மனிதனை முழுமையாக்கும் என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். குடும்ப வாழ்க்கைச் செலவினைச் சமாளிப்பதற்காக இன்று ஆண்களும்பெண்களும்தொழில்துறையில் இணைய வேண்டியுள்ளது. இதனால்தான் இன்று பெண்களும் பணி புரிகின்றனர்.சாதனைகளையும் பெருமைகளையும் இன்று பல பெண் தங்களிடத்தே கொண்டுள்ளனர். காரணம் புத்தாக்க முயற்சிகளில் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். பெண்மையை மதிக்கத் தெரியாத கயவர்கள் இருக்கும் கடலில் அவள் நீந்தி அக் கரையை அடைவதென்பது மிக இலகுவான காரியம் அல்ல .

ஒரு பெண் தொழில் தேடிச் செல்கையில் அவள் பெண் எனும் காரணத்தினால் புறக்கணிக்கப்படுகின்றாள். ஏனெனில் அவளால் ஆணுக்கு நிகராக வேலை செய்ய முடியாது என்பது சில அறியாமைக்குச் சொந்தக்கார முகாமையாளர்களின் எண்ணம்.சில நேரங்களில் பல தடைகளையும் தாண்டி அவள்ஓர் தொழில் கால் பதிக்கும் போது சில சமயங்களில் தன்னுடைய சக ஊழியர்களின் புறக்கணிப்பிற்கும் முறையற்ற செயல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றாள். பெண்கள் தமது திறமையினை விளையாட்டிலும் நிரூபித்துள்ளனர். சர்வதேச ரீதியில் நோக்கும்போது அதிகளவான பெண்கள் இன்று விளையாட்டுத்துறையில் சாதனை படைத்துள்ளனர்.

ஆரம்ப காலங்களில் சிறுசிறு விளையாட்டுக்களில் மட்டுமே ஈடுபட்டு வந்த பெண்கள் இன்று ஆண்களுக்கு நிகரான அனைத்து விளையாட்டுக்களிலும் சர்வதேச ரீதியில் தங்கள் சாதனையை நிலைநாட்டுகின்றனர்.

இந்த உலகில் மனித உயிர்களின் தோற்றத்திற்கு முதல் ஆதாரமானவள் பெண் . அனைத்துச் செயல்களிலும் அனைத்துத் துறைகளிலும் இன்று பெண்களின் பங்களிப்பே அதிகமாகக் காணப்படுகின்றது. தன்னலம் பாராது இவ்வுலகின் நலனுக்காகப் பாடுபடுவதே பெண்களின் பெருமை. தாயாகச் சேய்களின் நலனுக்காக தன் உதிரத்தை பாலாக்கிக் கொடுக்கின்றாள். சகலவற்றிலும் வியாபித்துள்ள பெண்கள் இவ்வுலகின் இயக்கசக்திகளின் பங்காளிகள் என்பதை மறுப்பதற்கில்லை.

# “மெகா” கூட்டணி

## திட்டத்தை விளக்குகிறார் மனோ

கொழும்பு, டிசெ.30
ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணிக்குள் இன்னும் பல புதிய கட்சிகளையும், சக்திகளையும் உள்வாங்கிப் பெரும் தேசியக் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்க ப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ அண்மையில் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஐக்கிய தேசியக் கட்சியை பிரதான கட்சியாகக் கொண்டு ஏனைய பங்காளிக் கட்சிகளை உள்வாங்கி ஐக்கிய தேசிய முன்னணி என்ற ஒரு கூட்டணி தற்போதும் உள்ளது. இந்தக் கூட்டணிக்குள்ளேயே இன்னும் புதிய கட்சிகள் பலவற்றையும், சக்திகளையும் உள்வாங்கிப் பெரும் தேசிய கூட்டணி ஒன்றை உருவாக்க நாம் முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளை மையமாகக் கொண்டு அந்தப் பெரிய கட்சியைப் பிரித்துப் பிறிதொரு கூட்டணியை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு நாம் உடன்பட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படக் கூடாது.

அவ்வாறு பிளவு ஏற்படாதிருந்தால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நாம் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்படவிருந்த பிளவுகளை நாம் ஏற்கனவே முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். எஞ்சியிருக்கும் பிரச்சினைகளுக்கும் நாம் சுமுகமாகத் தீர்வு காண்போம்.

மிகப் பெரும் கூட்டணியை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

ஆனால் இன்னமும் இறுதி முடிவு எதும் எடுக்கப்படவில்லை.

ஹரின் பெர்ணான்டோவின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். அவர் கட்சித் தலைவர் அல்ல.

ஆனாலும் அவரையும் உள்வாங்கிப் பெரும் கூட்டணி ஒன்றை உருவாக்க நாம் முயற்சிக்கின்றோம்-என்றார். (எ)

# திட்டமிடல்களை விரைவுபடுத்தவும்

## உறுப்பினர் கோரிக்கை

நவாலி, டிசெ.30
பிரதேச சபையின் எல்லைகளை மீளவரையறை செய்து அதற்கான திட்டமிடல்களை உடன் முன்னெடுக்க வலி. தென்மேற்குப் பிரதேச சபை முன்வர வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் பொதுக் கூட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்ததாவது,

வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் பிரதேச சபைகளை நகர சபையாக்குவது, நகர சபைகளை மாநகர சபையாக்குவது, புதிய சபைகளை இனங்காணுவது உள்ளிட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதில் வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையும் ஒன்றாகும். எனவே இந்தச் செயற்பாடுகள் வடகில் முன்னெடுப்பதற்கு முன்னர் வலி. தென்மேற்குப் பிரதேச சபையினராகிய நாம் முன்னெடுக்க வேண்டிய எல்லை நிர்ணயப் பிரச்சினைகளுக்கு முன்கூட்டியே தீர்வு காணப்பட வேண்டும்-என்றார். (க-50)

# புதிய அரசின் முதல் திட்டம்

கொழும்பு, டிசெ.30
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் புதிய அரசின் கீழ் முதலாவது வெளிநாட்டு முதலீடு விரைவில் ஆரம்பமாகும் என்று நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள பாலதக் ஷா மாவத்தையில் உள்ள பெய்ரா ஏரி மற்றும் ஷாங்கரில்லா விடுதிக்கு இடைப்பட்ட பகுதியிலேயே இந்த முதலீட்டுத் திட்டம் அமைக்கப்படும் என்று நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

700 புதிய குடியிருப்புக்களையும், பல வர்த்தக நிலையங்களையும் உள்ளடக்கிய 30 மாடி வணிகக் கட்டடத் தொகுதியை அமைக்கும் இந்தத் திட்டம் 250 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டைக் கொண்ட திட்டம் என்று கூறப்படுகின்றது.

இந்த முதலீட்டுத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும், இந்தத் திட்டத்துக்கான நிலம் ஒப்பந்த நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் குத்தகைக் கட்டணமாக இலங்கை அரசு 43 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற முடியும் என்றும் சுட்டிக்கா ட்டப்பட்டுள்ளது. (எ)

# சுத்தா சகா சிக்கினார்

கொழும்பு, டிசெ.30
கேகாலை, பிந்தெனிய, அட்டாள பிரதேசத்தில் கேரளக் கஞ்சா மற்றும் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதாளச் செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபடுவர் என்று கூறப்படும் கரந்தெனிய சுத்தா என்பவரின் நெருங்கிய சகாவே கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபரிடமிருந்து இரண்டரைக் கிலோ கேரளக் கஞ்சாவும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (எ)

# முன்பள்ளி சிறார்களின் வருடக் கொண்டாட்டம்



வவுனியா, டிசெ.30
வவுனியா பட்டக்காடு இல்மியா முன்பள்ளிச் சிறுவர்களின் ஒரு வருட பூர்த்தி விழா வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வவுனியா நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-222)

# பயிற்சிப் பட்டறை



யாழ்ப்பாணம், டிசெ.30
திருமறைக் கலாமன்றத்தின் முன்னைய மற்றும் நடப்பாண்டு நாடகப் பயிலக மாணவர்களுக்கும், புத்தளம் திருமறைக் கலாமன்றத்தின் இளையோருக்குமான முழுநாள் நாடகப் பயிற்சிப் பட்டறை அண்மையில் மன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெற்றது. வளவாளராக அவிசாவளை திருமறைக் கலாமன்றக் கலைஞரான லக்மால் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

பயிற்சியின் நிறைவில் பயிற்சியாளர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

வளவாளராக கலந்து கொண்ட லக்மால் தமிழர் பாரம்பரிய முறைப்படி திருமறைக் கலாமன்றத்தினரால் கௌரவிக்கப்பட்டார். (க-.023)

## திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிசெ.30
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகை சமேத கண்ணலங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களில் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை அதிகாலை 4.15 மணிக்கு கும்பபூசை ஆரம்பமாகி திருவெம்பாவை உற்சவம் இடம்பெறும். திருவெம்பாவை உற்சவத்தை நிறைவைத் தொடர்ந்து திருவாதவூரடிகள் புராணப் படிப்பு திருவெம்பாவை தினங்களில் தினமும் இடம்பெறும். (க)

# ராஜிதவின் வைத்தியர் “பொய்” வைத்தியம்!

## கண்டுபிடித்தார் டொன் பிரசாத்

கொழும்பு, டிசெ.30
முபாரக் எனும் மருத்துவரே பொய்யான அடிப்படையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு சிகிச்சை அளித்து வருகின்றார். குற்றவாளியைக் காப்பாற்றுவதற்கே மருத்துவர் முபாரக் முயற்சிக்கின்றார் என்று நவ சிங்கலே தேசிய அமைப்பின் தலைவர் டொன் பிரியசாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜிதவின் உடல் நலம் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரி ஒருவரின் ஊடாகப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் எனவும் டான் பிரியசாத் குற்றத்தடுப்புத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றையும் முன்வைத்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று, ராஜித சேனாரத்ன தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தினம் முதல் தற்பொழுது வரையுள்ள நாள்களில் அவருக்கு என்ன வகையான பரிசோதனை முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகளால் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் டொன் பிரியசாத் தனது முறைப்பாட்டில் குற்றத் தடுப்புப் பிரிவைக் கோரியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ)

# 6 மாதங்களுக்குள் பல்கலைக்கழகம்

## பந்துல கூறுகின்றார்



**கொழும்பு, டிசெ.30**
**உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான ஆறு மாத காலப் பகுதிக்குள் மாணவர்களைப் பல்கலைக் கழகங்களுக்குள் உள்வாங்குவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் உயர்கல்வி தொழில்நுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள் ளதாவது:
இதற்கான வேலைத் திட்டம் வகுக் கப்பட்டுள்ளது. பெறுபேறுகள் வெளி யாகி ஒரு வருடகாலம் வரை பல்க லைக் கழக அனுமதிக்காக மாண வர்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த முறையைச் சீரமைப்பது தொடர்பில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வுடன் கலந்துரையாடியுள்ளோம். அடுத்த வருடத்தில் இருந்து இதற் கானதிட்டத்தைநடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று எதிர் பார்க்கின்றோம். உயர்தரப் பரீட் சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிடுவதற்கானதிட்டமும் வகுக் கப்பட்டு வருகின்றது- என்றார். (ஏ)



# தூங்கும் சபைகள்

## உள்ளூராட்சி முறைமை நிபுணர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ.30**
உள்ளூராட்சி சபைகள் மற்றும் கூட்டுறவுச் சபைகள் என்பன தூங்கிக் கொண்டிருக்கும் மிகப் பெரும் இராட் சதர்கள், தூக்கத்திலிருந்து அவை எழ வேண்டும் என்று உள்ளூராட்சி முறைமை நிபுணர் கிருஸ்ணா னந்தன் தெரிவித்தார்.
மக்களின் நட்புறவான உள்ளூராட்சியை மேம்படுத்து வது தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சிச் சபைகளின் பிரதிநிதிகள், மற்றும் ஊடக வியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையா டல் நேற்றுமுன்தினம் காலை நல்லூர் யூரோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.
சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிறுவனமான பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளில் இருந்து விலகி உள்ளூராட்சி மன்றங்கள் தூங்கிக் கொண்டிருக் கின்றன.
ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தமக்கென தனித்துவமான தூரநோக்கு இருக்க வேண்டும். அதை இலக்காகக் கொண்டு சபைகள் மக்களுக்குப் பணி யாற்ற வேண்டும். அவ்வாறு தூரநோக்குடன் மக்களுக் காக, அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக அந்தந்த சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கடமைகளைச் செய்யவேண்டும் - என்றார்.
கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகரசபை, வலிகா மம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, வேலணை, சாவகச்சேரி ,நல்லூர் பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஏனைய சபைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (க-21)

# விபத்தில் பெண் காயம்

கொடிகாமம்,டிசெ.30
மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண் விபத்துக்குள்ளானார். படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா மருத்து வமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.
இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஏ-9 வீதி நாவற்குழி மாதா கோவிலுக்கு முன்னால் இடம் பெற்றது.
விபத்து இடம்பெற்ற நாவற்குழி மாதா கோவி லுக்கு முன்னால் ஏ9 வீதிக்குக் குறுக்காக வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் குழாய் வைக்கப்பட்டுள்ளது.
அதற்குப்பின்னர் குழாய் பொருத்திய நிறுவ னத்தி னர் சரியான முறையில் சீர்படுத்தாத தன் காரண மாக இதுவரை 15 பேர் அந்த இடத்தில் விபத் தைச் சந்தித்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.
அந்த இடத்தில் ஆபத்து என்ற சமிக்ஞை அடை யாளமும் இடப்பட வில்லை. இரவு நேரத்தி லேயே கூடுதலான விபத்துக்கள் இடம் பெறு கின்றன என்று சாவகச் சேரி பிரதேச சபை உறுப் பினர் இ.லோகேஸ்வரன் சபை அமர்வில் தெரியப் படுத்தியுள்ளார். (க-159)




# தென்மராட்சியில் குறைகிறது டெங்கு



சாவகச்சேரி,டிசெ.30
யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதே சங்களை விட தென்மராட்சிப் பிரதே சத்தில் டெங்கின் தாக்கம் குறைவ டையும் நிலை காணப்படுகிறது.
தென்மராட்சிப் பிரதேச செயலக மும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிப் பணியகமும் இணைந்து பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலு வலர் பிரிவுகளிலும் ஒரே நாளில் டெங்குப் பரிசோதனைகளில் ஈடு பட்டனர்.
அதனையடுத்து பிரதேசத்தில் டெங் கின் தாக்கம் குறைவடைந்து வருகி றது என்று சுகாதாரத் திணைக்களத் தினர் தெரிவித்தனர்.
தற்போது பொலிஸாரும், படையின ரும், டெங்குக் கட்டுப்பாட்டு உதவி யாளர்களும் இணைந்து டெங்கின் தாக்கம் அதிகளவில் காணப்படும் சாவகச்சேரி நகரம், கொடிகாமம், கைதடி, மந்துவில் போன்ற பிரிவு களில் டெங்குப் பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.
டிசெம்பர் மாதமுதல் வாரத்தில் 62 பேரும், அடுத்த வாரத்தில் 50 பேரும், மூன்றாவது வாரத்தில் 51 பேரும், நான்காவது வாரத்தில் 41 பேரும் டெங்குத் தொற்றால் பாதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க9)

## சாவகச்சேரி பிரதேச சபைக்கு

# வருமானம் குறைவு

கொடிகாமம், டிசெ. 30
கிராம மட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பிரதேச சபையின் பங்களிப்பு மிக மிக அளப்பரியதாகும். சாவ கச்சேரி பிரதேச சபையின் வருமானம் மிகக் குறைந்த அளவில் இருப்பதை வருடாந்த வரவு செலவுத் திட்டம் மூலம் அறிய முடிகிறது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் தி.தங்கவேலு தெரிவித்தார்.
பிரதேச அமர்வில் பிரேரணை சமர்ப்பித்து உரையாற் றிய அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
பிரதேச சபைக்குரிய வருமானம் வரிஅறவிடுப்பு மற்றும் நீதிமன்றத் தண்டப்பணங்கள், முத்திரை வரிகள் மூலமே கிடைக்கின்றன.
இந்த நிதியும் பிரதேச அபிவிருத்திக்குப் போதாமல் உள் ளது. அரசால் ஒதுக்கப்படும் பொதுமக்களுக்கான வேலைத் திட்டங்களுக்கான நிதியே அதிகமாகக் கிடைக் கின்றது.
அரசால் நடைமுறைப்படுத்தவிருக்கும் கிராமத்துக்கு இரண்டு மில்லியன் திட்டத்தில் மிகக் கூடுதலான தெரி வாக வீதிகளே காணப்படுகின்றன.
நிதியைத் திரும்பச் செல்லாதவாறு போதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை நியமித்தோ ஈடுபடுத்தியோ கிரா மப்புற மக்களின் அதிக தெரிவாக இருக்கும் கிராமப்புற வீதிகளைச் சீரமைக்க வேண்டும் - என்றார். (க-159)





கட்டுவன் ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் இடம்பெற்ற தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களின் காட்சிகள். (க)

# அதிகாரத்துக்காக "மாஸ்ரர் பிளான்"

## வாசுதேவ கூறுகின்றார்



**கொழும்பு, டிசெ.30**

**நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாலேயே சபாநாயகர் பதவியில் இருந்து கரு ஜயசூரிய பதவி விலகாமல் இருக்கின்றார் என்று இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனவரி மாதம் 3ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது. நாடாளுமன்றில் எல்லாம் மாறிவிட்டாலும் சபாநாயகர் பதவி மட்டும் அவ்வாறே காணப்படுகிறது.

பிரதமர், ஜனாதிபதி என அனைவரும் மாறிவிட்டார்கள். நாம் இந்த சபாநாயகரை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலில் எமக்குத்தான் மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அதாவது புதியவர்கள் வேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள்.

சபாநாயகர் கருஜயசூரிய தொடர்ந்தும் சபாநாயகராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுள் ஒருவராவார். தற்போது ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றில் அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சியேதக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றே அவர் விரும்புகிறார்.

அதற்கு நாம் என்றும் இடமளிக்க முடியாது. அவர் செய்வது தவறு என இந்த நாட்டின் மக்களும் உணர்வார்கள். என்றார். (எ)

## இரணைமடுவில் அம்மாச்சி உணவகம்



கிளிநொச்சி,டிசெ.30

இரணைமடுக் குளத்துக்கு அண்மையில் புதிய அம்மாச்சி உணவகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலும், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதிப் பங்களிப்பிலும் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மற்றும் இயற்கையான உணவுகளை உற்பத்தி செய்து, குறைந்த விலையில் மக்களுக்கு வழங்குவதற்கும், சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடனும் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் அமைச்சர் டக்களஸ் தேவானந்தா, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட மேலதிகச் செயலர் எஸ் சத்தியசீலன், கரைச்சிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன், விவசாயத் திணைக்களம் மற்றும் நீர்ப்பரசனத் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க-6)



கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் மாணவர் ஆக்க சஞ்சிகை கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. பொறுப்பாசிரியர் த.சுபத்திராதேவி தலைமையில் முன்பள்ளி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை அதிபர் சஞ்சிகையை வெளியிட முன்பள்ளி ஆசிரியர் திருமதி க.ராஜேஸ்வரி பெற்றுக் கொண்டார். (க-159)

## 124 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

மட்டக்களப்பு,டிசெ.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட 124 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்தும், விதையனைத்தும் விருட்சமே என்ற செயற்றிட்டத்தில் இவை வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 124 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் 5 இடங்களில் வைத்து வழங்கப்பட்டன. (க)



## கற்கள் திருட்டு

வடமராட்சி,டிசெ.30

வடமராட்சிக் கிழக்கில் வீதி வேலைக்கெனப் பறிக்கப்பட்ட கற்கள் களவாக ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

மருதங்கேணி வாரிவிட்டான் வீதி வேலைக்கென கற்கள் பறிக்கப்பட்டிருந்தன. வீதியுடன் தொடர்புடைய பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களால் வீதிவேலைக்குத் தேவையான கற்களை ஒதுக்கியிருந்தனர்.


அவற்றில் ஒரு தொகுதி கற்களை ஒப்பந்தகாரர் களவாக நேற்று முன்தினம் டிப்பர் வாகனத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்ட போது, அந்த வீதியால் வந்த பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் வே.பிரசாந்தன் அவதானித்தார்.

சம்பவத்தைக் கண்டவுடன் மருதங்கேணி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார். கற்களை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மருதங்கேணி சந்திப் பகுதியில் அமைந்துள்ள வீதிச் சோதனைச் சாவடியில் வைத்து மறிக்கப்பட்டது. உடனடியாக பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் செயலாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த தவிசாளர் மற்றும் செயலாளர் கற்கள் ஏற்றிய டிப்பர் வாகனத்தை பார்வையிட்டனர்.

மருதங்கேணிப் பொலிஸாரின் உதவியுடன் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-70)

## பரிசளிப்பு நிகழ்வு





பருத்தித்துறை,டிசெ.30

பருத்தித்துறை பிரதேச சபையின் 2019 ஆண்டுக்கான வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் 9 மணியளவில் சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

பிரதேச சபைத் தவிசா ளர் அ.ச.அரிய குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் மங்கள விளக்குகளை பிரதம விருந்தினர், பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் ச.அரியகு மார்,பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான இ.நாகேந்திராசா,வே.பிரசா ந்தன்,சி.தியாகலிங்கம், கி.ஜெயபாலன், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.சிறிபா ஸ்கரன் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து இறைவணக்கம் இடம் பெற்றது.வரவேற்பு உரையை பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளர் சி.சிறிபாஸ்கரன் நிகழ்த்தி யதைத் தொடர்ந்து தலைமை உரையை சபையின் தவிசாளர் அ.ச.அரியகுமார் நிகழ்த்தினார். சிறப்பு உரையை வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் நிக ழ்த்தினார். தொடர்ந்து வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சிறந்த சனசமூக நிலையங்களுக்கும் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஜ-160)

# சிலைகள் அமைப்பதாயின் விண்ணப்பிக்க வேண்டும்

## பதில் முதல்வர் கூறுகிறார்



*யாழ்ப்பாணம், டிசெ. 30*

*யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் சிலைகள் அமைப்பது தொடர்பில் மாநகர சபை ஊடாக விண்ணப்பித்தால். காரணங்கள், தகுதிகள் பற்றிப் பரிசீலிக்கலாம் என்று யாழ்ப்பாண மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.*

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பரப்புக்குள் இடம்பெறும் பௌத்த மயமாக்கல் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் சபையின் விசேடஅமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் அவர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணச் சிறைச்சாலையின் அனுமதியற்ற சிலை வைப்பு முயற்சி ஓர் இனத்தின் மீதும் ஓர் இனம் சார்ந்த தேசம் மீதும் அத்துமீறி மதத்தைத் திணித்து ஏனைய மதங்களையும் இனத்தவர்களையும் அவமதிப்பதாகவுள்ளது.

தங்கள் மேலாதிக்கத்தை எங்கள் மீது கட்டவிழ்த்து விடுவதற்கான இந்த முயற்சி கண்டிக்கப்பட வேண்டியது. இத்தகைய செயற்பாடுகள் மாநகரத்தில் மட்டுமன்றி யாழ்ப்பாண மாவட்டத்தில் எங்கு நடந்தாலும் அதற்கு எதிராகக் குரல்கொடுக்க வேண்டும். தொடர்ந்து போராட வேண்டும்-என்றார். (து-105)

## சிறைச்சாலைக்கு முன் சிலை: அகற்றக் காரணம் கூட்டமைப்பே

### யாழ்.மாநகர சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் டிசெ. 30

யாழ்ப்பாணச் சிறைச்சாலை முன்பாக வைக்கப்பட்ட பௌத்த சின்னங்களை அகற்ற முதலில் நடவடிக்கை எடுத்தது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் என்று யாழ்ப்பாண மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ந.லோகதயாளன் சபையில் தெரிவித்தார். யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பரப்புக்குள் இடம்பெறும் பௌத்த மயமாக்கல் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட அமர்வு மாநகர சபையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதில் உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு முன்பாக பௌத்த சின்னங்கள் கொண்டுவரப்பட்டு இறக்கப்படுகின்றன என்ற தகவல் இந்தச் சபையிலுள்ளவர்களில் எனக்கே முதலில் கிடைத்தது.

தகவல் உண்மையா என்பதை உறுதிசெய்ய அந்த இடத்துக்குச் சென்றிருந்தேன். அதை உறுதிசெய்து இந்தச் சபையின் பதில் முதல்வர், ஆணையாளர் மற்றும் த.தே.ம.முன்னணி உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோருக்கு ஆதாரத்துடன் தகவல் வழங்கினேன்.

அனுமதியற்ற சிறைச்சாலை தொடர்பில் மாநகர சபை ஒரு கடிதமும் அனுப்பவில்லை எனக் கூறப்புட்டது.

சிறைச்சாலை முன்பாகச் சிலை வைக்கவுள்ளமை பற்றி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டமை சபை உறுப்பினர்களுக்குக் கௌரவக் குறைச்சல் அல்ல. காலையில் தூக்கிய சிலையை மீண்டும் அதே இடத்தில் வைத்துத் திறக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதில் நம்பிக்கை இல்லை என்பதனால்தான் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது-என்றார். (து-105)

## பலி எடுக்கும் ரயில்!

கிளிநொச்சி,டிசெ.30

பளை தொடக்கம் முகமாலை வரையான ரயில் கடவையில் நாளாந்தம் கால்நடைகள் ரயிலுடன் மோதி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தொடர்ச்சியாக மழை பெய்து வந்த காரணத்தால், கால்நடைகள் தங்குமிடங்களுக்குச் செல்வதில்லை. வீதிகளில் தங்கி நிற்பதுடன் வீதிக்கு அருகில் காணப்படும் ரயில் கடவைகளிலும் தங்குகின்றன. அதனால் ரயில் வருகின்ற நேரத்தில் அதனுடன் மோதி விபத்துக்குள்ளாகின்றன.

இதனால் விலை மதிப்பிட முடியாத வாழ்வாதாரமான கால்நடைகள் இறந்து வீதிகளில் தூக்கிவீசப்படுகின்றன. அத்தோடு காயமடைகின்றன. இதனால் கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் கவனயீனமே இதற்குக் காரணம் என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (க-6)

## நுவனுக்கு புதிய பதவி

கொழும்பு, டிசெ.30

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக பிரதிப் பொலிஸ்மா அதிபரான நுவன் வெதசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னரும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியவராவார். அண்மையில் மூத்த பொலிஸ் அதிகாரிகள் 3 பேருக்கும் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்குமே இடமாற்றம் வழங்கப்பட்டது. (எ)

## ஒளிவிழா

கொழும்புத்துறை.டிசெ.30

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒளிவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சென் பெண்டிக்ற் றோ.க வித்தியாலயத்தில் இடம்பெறும்.

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் நத்தார் உரை நிகழ்த்துவார். நடனங்கள் , கரோல்கீதங்கள் மற்றும் நாடக நிகழ்வுகளுடன் நத்தார் தாத்தாவின் ஆடல் பாடல்களும் இடம்பெறும். (க-135)

## ரத்ன தேரரும் வசந்தவும் ஆளுங்கட்சி வரிசையில்

கொழும்பு, டிசெ.30

அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் வசந்த சேனாநாயக்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அவர்கள் நாடாளுமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இவ்வாறு ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற படைகள் சேவி தர்நரேந்திரபெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ)

## பெண் உரிமைகளுக்காக விழிப்புணர்வு ஊர்வலம்




வவுனியா.டிசெ.30

“உங்கள் பெண் பணியாளர்கள் உங்கள் கண்மணி ஆனவர்கள் அவர்களைப் பாதுகாக்கும் இமைகள் நீங்களே” எனும் தொனிப்பொருளில், வவுனியா வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுக்காக்கக் கோரி விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. கிராமியப் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவி பத்மநாதன் பிரியாவின் தலைமையில் ஊர்வலம் இடம்பெற்றது.

வவுனியா வாடி வீட்டில் ஆரம்பமாகிய ஊர்வலம் கடைவீதி வழியாக, பழைய பஸ் நிலையத்தை அடைந்து, வவுனியா வர்த்தக சங்கக் கட்டடத்துடன் நிறைவுற்றது.

இதன் போது துண்டுப்பிரசுரங்கள் பொது மக்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இறுதியில் வர்த்தக சங்கத்தினர் மற்றும் வர்த்தக நலன்புரிச்சங்கத்தினருக்கு மனுக் கையளிக்கப்பட்டது.

“சில வர்த்தக நிலையங்களில் பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றமையும் ஓரங்கட்டுகின்றமையும் சரீர ரீதியாகவும் உளரீதியாகவும், பாலியல் ரீதியரகவும் துன்புறுத்தப்படுகின்றமையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான சமூக பொருத்தப்பாடற்ற நடத்தைகள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கிடைத்துவரும் தகவல்கள் மிகுந்த மன வேதனையை அளித்துவருகின்றன.

ஆண் பணியாளர்களுக்குச் சமமாகப் பணிபுரிந்தாலும் சம்பளம், வேலை நேரம், விடுப்புக்கள் போன்றவற்றில் ஆண்களை விட பாரபட்சமாக நடத்தபடும் நிலையிலும், அவர்கள் வாழ்வாதாரத்துக்காகவே தொடர்ந்து பணியாற்றுகிறார்கள். எனவே பாரபட்சமின்றி துன்புறுத்தல்கள் இன்றி பணிபுரிவதற்கு அனைத்துப் பெண் பணியாளர்களுக்கும் உள்ள உரிமைகளுக்கு நன்கு மதிப்பளிக்கவும்” என்று ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (க-110-ரி4)

## 167.35 மில்லியன் ரூபா மன்னாரில் இழப்பு

மன்னார்,டிசெ.30

கடந்த வாரங்களில் பெய்த கடும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் 167.35 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரி நடராசா திலீபன் தெரிவித்துள்ளார்.

மன்னார், மடு, நானாட்டான், முசலி, மாந்தை மேற்குப் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல கிராமங்கள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இவற்றில் கால்நடைகள், பயிர்நிலங்கள், வீதிகள், குளங்கள் அடங்கும்.

3294.5 ஹெக்ரேயர் பயிர்ச்செய்கையும், 15499.8 மெற்றிக்தொன் உற்பத்திப் பொருள்களும் அழிவடைந்துள்ளன. அதனைவிட 723 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 148 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

மொத்தமாக 167.35 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரி நடராசா திலீபன் மேலும் தெரிவித்தார். (க-213)

# புத்தெழுச்சி கொண்ட தொழிற் படை தேவை

## ஜனாதிபதி கோத்தா தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.30
தொழிற் பயிற்சித்துறையில் புத்தெழுச்சியை ஏற்படுத்தி, உயர் திறன் கொண்ட தொழிற் படையை உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற்சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

திறன்விருத்தி தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரி மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற் சந்தைகள் குறித்து ஆராய்ந்து, அவற்றுக்கேற்ற வகையில் பாடநெறிகளை உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டும். வறிய மக்களுக்கு வலுவூட்டும் சுயதொழில் சார்ந்த பயிற்சி சந்தர்ப்பங்களை விரிவுபடுத்த வேண்டியது அவசியத்தை ஜனாதிபதி விளக்கினார்.

திறன்விருத்தி தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

திறன்விருத்தி அமைச்சின் கீழ் பெரும் எண்ணிக்கையான பயிற்சி நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த அனைத்து நிறுவனங்களையும் ஒருமுகப்படுத்தி முறையான மற்றும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைக்க வேண்டியது அவசியமாகும்.

தொழிற் பயிற்சித்துறை பற்றி இளைஞர் தலைமுறையிடம் உளப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பாடநெறிகளை அறிமுகப்படுத்தும்போதும் பாடநெறிகளுக்கு பெயரிடும்போதும் தொழில் மதிப்பும் கவர்ச்சியுமிக்க வகையில் திட்டமிட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

நாட்டின் முக்கிய துறையாக விவசாயத்துறை உள்ளது. அதற்கேற்ற வகையில் போதுமானளவு கற்கை நெறிகள் இல்லாதிருக்கின்றமை பற்றி கவனம் செலுத்திய ஜனாதிபதி மருத்துவ, பொறியியல் துறைகளைப்போன்று விவசாயத் துறையிலும் நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் நாட்டுக்கு அதிகம் தேவையாக உள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தும்போது அதன் குறைபாடுகளை தீர்க்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அரச நிறுவனங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக முறையான திட்டமொன்று அவசியமாகுமென்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்- என்றுள்ளது. (எ)

## ரயில் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.30
காலி, ரயில் நிலையத்துக்கு அருகே உள்ள தலாபிடிய ரயில் நிலையத்துக்கு அருகில் பெலியத்தவிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த ரயில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலி, தலாபிடியவைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பெலியந்தல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## பிரதமர் வாழ்த்து



கொழும்பு, டிசெ.30
நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் தேர்வில் சித்தி அடைந்த அனைத்து மாணவர்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகப் பூர்வ டுவிற்றர் பக்கத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் மனம் தளரவேண்டாம். இந்த பின்னடைவை கடினமாக உழைக்க ஒரு உந்து சக்தியாக பயன்படுத்துங்கள்.

உங்களின் கனவுகள் மற்றும் நம்பிக்கைகளை எதிர்காலத்தின் அடையாளம் என அவர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். (எ)



நல்லூர் பிரதேச செயலகத்தின் பிரிவு உபசார நிகழ்வும் வருடாந்த ஒன்று கூடலும் யாழ். நாச்சிமார் கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)

## புலமைப் பரிசில் கொடுப்பனவை இணையம் மூலம் வழங்க ஏற்பாடு



கொழும்பு, டிசெ.30
ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு ஜனவரி மாதம் முதல் இணையதளம் மூலம் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற சகல மாணவர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி இணையவழி மூலமாகக் கணக்கு புத்தகத்தில் பணத்தை வைப்பிலிட கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சகல பாடசாலைகளுக்கும் சென்று உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடைய சகல மாணவர்களின் தரவுகளைப் பெற்று அதற்கமைவாக அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் தோற்றுவார்கள்.

அவர்களில் வெட்டுப்புள்ளிக்கு அதிக புள்ளிகளைப்பெற்ற மாதாந்தம் 15ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த 20 ஆயிரம் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். (எ)



சீரடி சாய்பாபா அமையத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, மாற்றுத்திறனாளிகள் தினத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 50 பேருக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. (க-222)



நத்தாரை முன்னிட்டு சரசாலை ஸ்ரீ கணேசா வித்யாலயத்தைச் சேர்ந்த 16 மாணவர்களுக்கு, 15 ஆவது கஜபா படையணியினரால் அவிசாவளை புனித மரியாள் வித்தியாலய அதிபர் மற்றும் நிர்வாக சபையின் நன்கொடை நிதி உதவியுடன் கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. (க)

## நிறைவு நாளும் பரிசளிப்பும்

கொடிகாமம், டிசெ.30
சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை மட்டுவில் கமலாசனி வித்தியாலய மண்டபத்தில்பிற்பகல்ஒருமணிக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில்நடைபெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலக ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ் கந்தராசா, பிராந்திய ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.ஜெகதீசன், ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஜ-159)

### தேசிய கீதச் சர்ச்சை;

# குளவிக் கூட்டுக்கு கல்லெறியாதீர்!

### கோத்தாவுக்கு சங்கரி கடிதம்

கிளிநொச்சி, டிசெ.30
தேசிய கீதம் ஒவ்வொருவரும் தமது தாய் நாட்டைப் புகழ்ந்து பாடும் பாடலாகும். எவரையேனும் குளவியின் கூட்டுக்கு கல்லெறிய அனுமதிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷவிடம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம், வீ. ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தேசிய கீதம் ஒவ்வொருவரும் தமது தாய் நாட்டைப் புகழ்ந்து பாடும் பாடலாகும். எவரையேனும் குளவியின் கூட்டுக்கு கல்லெறிய அனுமதிக்க வேண்டாம். மனசாட்சி உள்ள எவரேனும் இந்த விடயத்தில் தலையிட மாட்டார்கள். ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த மொழியில் தமது தாய்நாட்டைப் புகழ்ந்து பாடுவதையே விரும்புவார்கள். அது ஒரு மனிதனின் அடிப்படை உரிமையுமாகும். குறிப்பிட்ட ஒரு மொழியில் பாடவேண்டும் என்று வற்புறுத்துவது எதிர்க் காலத்தில் விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு வழிவகுக்கும். தமிழ் பேசும் மாணவர்கள் தமக்குத் தெரிந்த மொழியில் மனப்பாடம் செய்து வைத்துள்ளனர்.
தங்களைச் சங்கடப்படுத்துவதற்காக இதனை எழுதவில்லை ஒரு மூத்த அரசியல்வாதியின் நல் ஆலோசனையாக ஏற்றுக் கொள்ளவும்- என்றுள்ளது. (க-6)

## வீதி திறந்து வைப்பு

துணுக்காய் டிசெ.30
துணுக்காய் பிரதேசத்தில் இருபது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வீதியை நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் திறந்து வைத்தார். மல்லாவி துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள புகழேந்தி நகர் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ரூ.20 லட்சம் செலவில் வீதி அமைக்கப்பட்டது. இந்த வீதியே கடந்த வெள்ளிக்கிழமை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து பாலவிநாயகர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடும் மக்கள் சந்திப்பும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான ச. ரூபன் மற்றும் கிராம அமைப்புகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (104-213)

## மூன்றில் இரண்டு பெறுவதே இலக்கு

### லொகுகே கூறுகின்றார்

கொழும்பு. டிசெ.30
பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பலமான அரசு தோற்றுவிக்கப்படும். இடைக்கால அரசு தற்போது முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகளின் பெறுபேறு பெரும்பான்மை யுடன் கூடிய அரசைப் பெற்றுக் கொடுக்கும்.



இவ்வாறு கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:
ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொது ஜன பெரமுன அனைத்து இன மக்களின் ஆதரவையும் கோரியது. ஆனால் தமிழ், முஸ்லிம் மக்க ளின் ஆதரவு எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்கப்பெறவில்லை. அதற்குப் பல்வேறு அரசியல் ரீதியான காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.
தமிழ் மக்களில் பெரும்பாலான தரப்பினர் அரசியல் ரீதியான பாரம்பரியத் தீர்மானங்களைத் தற்போதும் மேற்கொண்டுள்ளமை அரசியல் ரீதியான பெரும் மாற்றமாகும். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய இடைக்கால அரசு தற்போது செயற்படுகின்றது.
அமைச்சுக்களும், அரச திணைக்களங்களும் மக்களுக்கான முறையான சேவையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷவின் சிறப்புப் பணிப்புரையின் நிமித்தம் முன்னெடுக்கின்றன. பொதுத் தேர்தல் தொடர்பில் தற்போது அனைவரது கவனமும் காணப்படுகின்றது.
பொதுத் தேர்தலில் வெற்றிப்பெற்று அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பலமான அரசு தோற்றுவிக்கப்படும்-என்றார். (எ)



## அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுங்கள்

### சிவமோகன் எம்.பி. கோருகிறார்

ஓமந்தை, டிசெ.30
வவுனியா ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள அரச ஊழியர்கள் வீட்டுத்திட்டங்களுக்கு உரிய அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு அரச திணைக்களங்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஓமந்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரச சேவையில் தங்களது பகல் நேரம் முழுவதையும் செலவழிக்கும் அரச ஊழியர்களுக்கு விடிவாக இந்த வீட்டுத்திட்டம் இருந்த போதிலும், ஒரு தசாப்தகாலமாக இவர்களுக்கான அடிப்படை வசதிகளை எவருமே ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அரச வீட்டுத்திட்டத்தை எடுத்தவர்கள் இங்கு வராமல் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணம்.
உண்மையான அபிவிருத்தி செய்யப்படுமாக இருந்தால் 600 க்கும் மேற்பட்ட குடும்பத்தவர்கள் இங்கே வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக ஒரு கூட்டம் ஒழுங்குபடுத்தப்படும். அந்தக் கூட்டத்துக்கு காணிகளைப் பெற்றுக் கொண்ட குடும்பங்களைச் சார்ந்த அரச ஊழியர்களும், கலந்து கொண்டு தங்களது கருத்துக்களைக் கூற வேண்டும். திணைக்களங்களிடமிருந்து காலவரையறையுடன் வாக்குறுதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யப்படுமாக இருந்தால் தான் இந்த மக்களுக்கு விடிவு ஏற்படும்-என்றார். (க-213)

## பரு. நகர வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள்

பருத்தித்துறை நகரசபை எல்லைகக்குள் உள்ள பிரதான வீதிகளுக்கு வீதிப் பெயர்ப் பலகைகள் நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முதற் கட்டமாக 10 வீதிகளுக்கு வீதிப் பெயர் பலகைகள் நடுகை செய்யப்படவுள்ளன.
தற்போது பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி ஓராங்கட்டைச் சந்தியில் இருந்து தம்பசிட்டிக்கு செல்லும் வீதிக்கும், நகர நுழைவாயில் மெத்தைக் கடைச் சந்தியில் இருந்து தும்பளைக்குச் செல்லும் வீதிப் பெயர்ப்பலகைகளும் நடுகை செய்யப்பட்டன.
எஞ்சிய 8 வீதிகளுக்கும் விரைவில் பெயர்ப்பலகைகள் நடுகை செய்யப்படும் என்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் யோசப் இருதயராஜா தெரிவித்துள்ளார்.
இதேவேளை நகரில் உள்ள ஒழுங்கைகளை அறிந்து கொள்வதற்கு வசதியாக நகர சபையின் சொந்தச் செலவில் பெயர்களைக் குறிக்கும் கம்பங்கள் நடுகை செய்யப்படவுள்ளன. இதுவரை 30 ஒழுங்கைகளுக்கு பெயர்க் கம்பங்கள் நடுகை செய்யப்பட்டன. (ஜ-173)

## உரிய அனுமதி பெற்று சின்னம் அமையுங்கள்!

### முன்னணி உறுப்பினர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.30
நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கு நாங்கள் எதிர்ப்பில்லை. அனைத்தும் உரிய அனுமதிகள் பெறப்பட்டு முறைப்படி அமைக்கப் படவேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு என்று யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் அனுமதியின்றி நடைபெறுகின்ற சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்பாக ஆராயும் சபையின் கடந்த வெள்ளிக்கிழமை அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நினைவுச் சின்னங்கள் வெறுமனே நினைவுச் சின்னங்களாகவே இருக்க வேண்டும். எங்களுடைய வரலாற்றுப் பாரம்பரியங்களை நீர்த்துப்போகச் செய்கின்ற அல்லது மாறுபட்ட வரலாற்றைத் திணிக்கின்றவையாக அவை இருத்தல் கூடாது. நினைவுச் சின்னங்கள் தொடர்பில் நாம் பயம் கொள்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. கடந்த காலங்களில் இவ்வாறான சின்னங்கள் மற்றும் பௌத்த விகாரைகள் தமிழர் பிரதேசங்களை சிங்கள மயமாக்கலுக்கு உட்படுத்தவே பிரயோகிக்கப்பட்டன. எமது வரலாற்றுத் தொன்மையான இடங்கள், தமிழர்களின் பாரம்பரிய இடங்களில் இவ்வாறானவற்றை நிறுவி மெல்ல அதன் இன விகிதா சாரத்தைத் திட்டமிட்டு மாற்றியமைத்தது. என்றார். (து-105)

# தமிழரின் ஒற்றுமையை அரசு குழப்பியடிக்கிறது

## தமிழரசின் கிளிநொச்சிச் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

*கிளிநொச்சி, டிசெ. 30*

ஒரு கட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் மத்தியில் இன்று பல கட்சிகள் உருவாகியுள்ளன. தமிழ் மக்களின் ஒற்றுமையைத் திட்டமிட்டுக் குழப்புவதற்கான செயற்பாடே இது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.



கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆரம்ப காலகட்டத்தில் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் ஒரு கட்சியின் கீழ் வாழ்ந்தார்கள். இன்று எங்கள் மத்தியில் பல கட்சிகள் புதிதாகத் தோற்றம் பெற்றுள்ளன. இவை தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதற்காகத் திட்டமிட்டு சில தரப்பினரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகவே உள்ளன. தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களையும், பிரிவி னைகளையும் ஏற்படுத்தி பல வீனப்படுத்தும் செயற்பாடுகளாகவே இவற்றைப் பார்க்கவேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் இல்லாது ஆட்சியமைப்பதற்காக வாக்களியுங்கள் என்று சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை இடம்பெற்றது.

அதற்கு ஆணை கொடுக்கும் வகையில் சிங்கள மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாக்களித்துக் கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கினர். இந்தநிலை தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடாது என்ற நோக்கிலேயே புதிய கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன. மக்களைப் பிரிவினைக்குள் தள்ளி பலவீனப்படுத்தப்பட்ட இனமாக்கவே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதவிர, இனப்பிரச்சினைக்கு அப்பால் அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு சிலர் வருகின்றனர். நாமும் அபிவிருத்தி செய்திருக்கின்றோம். கடந்த 3 ஆண்டுகளில் பல அபிவிருத்தித் திட்டங்களை நாங்கள் செய்துள்ளோம்.

ஏற்கனவே மேற்கொண்ட அபிவிருத்தி திட்டங்களுக்கான பணத்தை புதிய அரசு வழங்காது தடுத்துள்ளது. இது எமது மக்களைப் பாதிப்படையச் செய்யும் செயல். என்று மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-6,35)

# ஒன்றுகூடலும் பரிசில் வழங்கலும்

கிளிநொச்சி,டிசெ.30

பரந்தன் பிரதான அஞ்சல் அலுவலகத்தின் 2019 ஆண்டுக்கான இறுதி ஒன்று கூடலும் பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் இந்த ஆண்டில் சிறந்த முறையில் வருமானத்தை அஞ்சல் திணைக்களத்துக்குப் பெற்று தந்த பரந்தன் பிரதம அஞ்சல் அலுவலகத்துக்கு உட்பட்ட தரும்புரம் உப அஞ்சல் அலுவலத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து சிறுவர்களின் கலை நிகழ்வும், கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழாவில் இந்த ஆண்டுக்கான "இளம்கலைஞர்" விருதைப் பெற்ற வேலாயுதபிள்ளை நயனீசனின் பல்சுவை கதம்ப தனிநடிப்பும் இடம் பெற்றன. பரந்தன் பிரதம அஞ்சல் அதிபர் ரி.ஜெயராம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், ஓய்வு பெற்ற அஞ்சல் உத்தியோகத்தர் ஜ.பாலகுமார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அலுவலகத்தின் உதவி தபால் அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க-421)

# தமிழ்க் கட்சிகளே! ஒன்றிணையுங்கள்

## நல்லை ஆதீன குரு வேண்டுகோள்



யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சார்ய சுவாமிகள் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தேசிய அமைப்பாளர் கு.சுரேந்திரன், கட்சியின் இளைஞரணிச்செயலரும்மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சபா குகதாஸ் ஆகியோர் நல்லை ஆதீனத்தில் ஆதீன முதல்வரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

மரியாதை நிமித்தமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது "தமிழ் மக்களின் விடயத்தில் எல்லோரும் குறிப்பாக அரசியல் கட்சிகள் ஒற்றுமையாக, ஒத்த கருத்துடன் ஒன்றுபட வேண்டும்" என்று ஆதீனக் குரு முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

"அத்தகைய ஒற்றுமை தொடர்பில் சிலருடன் பேசியிருக்கின்றேன். தொடர்ந்தும் அந்த ஒற்றுமைக்காக பலருடனும் பேசவுள்ளேன். இன்றைய காலத்தில் தமிழ்த் தரப்புக்கள் பிரிந்து நிற்காமல் ஒன்றாக ஒருமித்து பயணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்." என்றும் ஆதீன குரு முதல்வர் கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

"மக்களின் அபிவிருத்தி, வாழ்வாதாரம், வேலை வாய்ப்பு போன்றவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மக்களின் அபிலாசைகளை

வென்றெடுக்க வேண்டும். அதற்காக நாங்களும் எங்களாலான முயற்சிகளை எடுத்து வருகின்றோம்." என்று குரு முதல்வரிடம் தெரிவித்துள்ளோம் என்று ரெலோ அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (த-ரி1)

# ஈ.பி.டி.பியினருக்கு செருப்படி விழும்

## *உறவுகளின் சங்கத் தலைவி ஆவேசம்*

யாழ்ப்பாணம், டிசெ. 30

தமிழ் மக்களுக்குப் பெரும் துரோகம் செய்தவர்களின் வரிசையில்வரும் அரச ஒட்டுக் குழுக்களில் ஒன்றான ஈ.பி.டி.பியினர் எம்மை எங்கு சந்திக்க முயற்சித்தாலும் விளக்குமாற்றாலும் எமது செருப்பாலும் அடித்துவிரட்டுவோம்.

ஏனெனில் முதன் முதலாக வெள்ளை வான் கலாசாரத்தில் ஈடுபட்டதே ஈ.பி.டீ.பிதான். இந்தத் தகவலை அவர்களின் காதுகளுக்கு எட்டும்படியாகத் தெரியப்படுத்துகின்றோம்.

இவ்வாறு வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்களின் ஒன்றியத் தலைவி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்திக்கப் போவதாகக் கூறும் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவை சந்திக்க வருமாறு அழைக்கவும் இல்லை, வந்தாலும் சந்திக்கப்போவதுமில்லை.

எமது உறவுகள் காணாமல் போனமைக்கு ஈ.பி. டிபியினரும் காரணமானவர்களே. அவர்களும் சர்வதே குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டியவர்கள். - என்றார். த-105)

# திண்மக் கழிவுகளுக்கு விசமிகள் தீ வைப்பு



கொடிகாமம்,டிசெ.30

தரம் பிரிப்பதற்காக சாவகச்சேரிப் பிரதேச சபையினரால் சேகரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கொயிலாமனை மயான வீதியில் அமைந்துள்ள திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கும் நிலையத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபையினர் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் திண்மக் கழிவுகளை அகற்றி, தரம் பிரித்து எஞ்சிய திண்மக்கழிவுகளை அறுகுவெளிப் பிரதேசத்தில் பிரதேச சபைக்குரிய குப்பை மேட்டில் கொட்டிப் பரவுவதற்காக கொயிலாமனை மயான வீதியில் அமைந்துள்ள நிலையத்தில் சேகரித்து வைத்தனர். அவற்றுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது

சாவகச்சேரி பிரதேச சபையின் ஊழியர்கள் தண்ணீர் பவுசர் மூலம், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

# ஆட்சியமைக்கும் வாய்ப்பை அள்ளிக்கொடுத்தது ஐ.தே.க.

## ஹிருணிகா தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.30

உண்மையில் தற்போதைய அரசு அவர்களது திறமையால் ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக எமது தரப்பினரின் திறமைக் குறைவால்தான் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் இடம்பெற்றுவரும் சில விடயங்கள் நாட்டைப் பாதிக்கும் விதமாகஅமைந்துள்ளன. எதிர்வரும்பொதுத் தேர்தலில் என்றாலும் மக்களின் கண்கள் திறக்கும் என்று நம்புகின்றோம்.

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் இடம்பெற்று வரும் சில விடயங்கள் நாட்டைப் பாதிக்கும் விதமாக அமைந்துள்ளன. அரசின் செயற்பாடுகள், நாட்டின் நிலை என்பன தொடர்பாக சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் கருத்து வெளியிட்டு வந்த இருவரில் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

மற்றையவரைக் கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசுக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் கூட, தற்போது அதன் அரசியல் பழிவாங்கல்களால் பெரிதும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள்.

உண்மையில் 2004 ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க லக்ஸ்மன் கதிர்காமரைப் பிரதமராக நியமிப்பதற்குத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் வேறொரு இனத்தவர் என்பதால் சம்பிக்க ரணவக்க தலைமையிலானோரே மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்குவதற்கு முன்நின்று செயற்பட்டனர். அதேபோன்று 'மஹிந்த சிந்தனை' என்ற புத்தகமும் சம்பிக்க ரணவக்கவினாலேயே எழுதப்பட்டது. மஹிந்தவின் அரசில் அங்கம் வகித்த மிகச்சொற்பமான கற்றறிந்தவர்களில் சம்பிக்கவும் ஒருவர்.

அரசியலைப் பொறுத்தவரை அவர் எதிர் காலத்தில் முக்கியத்துவமிக்க இடமொன்றை அடைவார் என்று தற்போதே ஆளுந்தரப்பு அச்சமடைந்திருக்கிறது.

வழமையாக தேர்தல் மேடைகளில் அவர்கள் போர் தொடர்பிலும், பொருள்களின் விலையதிகரிப்பு குறித்துமே பேசுவார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொருள்களின் விலையதிகரிப்புக் குறித்துப் பேசுவதற்கு எதுவுமிருக்கவில்லை. அதனால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் பற்றிப் பேசினார்கள்.

ரிஷாத் பதியுதீன் வில்பத்து வனத்தை அழித்தார் என்றும், ரவூப் ஹக்கீம் மற்றும் ஷாபி தொடர்பாகவும் பேசினார்கள் எனின் தேர்தல் முடிவடைந்த பின்னர் அவர்களையல்லவா கைது செய்ய வேண்டும்? ஏன் அவ்வாறு செய்யவில்லை? ஏனெனில் அவர்கள் மீது எவ்வித குற்றமும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விடும். மாறாக அரசுக்கு எதிராக வலுவான கருத்துக்களை முன்வைக்கும் சம்பிக்கவும், ராஜிதவும் இலக்குவைக்கப்பட்டார்கள்.

அடுத்ததாக அரசியல் மேடைகளில் வாத, விவாதங்கள் மற்றும் காரசாரமான பேச்சுக்கள் என்பவை மிகவும் சகஜமானவையாகும். 2015 ஜனாதிபதித் தேர்தலில் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இலக்குவைத்து பல்வேறு மிகமோசமான கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆனால் அவர் ஜனாதிபதியானதும் அதற்காக பழிவாங்கல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அதேபோன்று தற்போதைய ஆளுந்தரப்பினரால் தேர்தல் பரப்புரைகளின் போது மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை குறித்து பல்வேறு போலிப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஒருவருடைய கருத்துக்களுக்காக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்றால் இந்த விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எமது அரசு ஆட்சியிலிருந்த போது மருத்துவ அதிகாரிகள், ரயில்வே ஊழியர்கள், பஸ்சேவை ஊழியர்கள் என அனைவரும் வேலைநிறுத்தப் போராட்டங்களை மேற்கொண்டனர்.

தற்போதும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் போராட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. இதிலிருந்து இவர்களுடைய போராட்டங்களின் பின்னணியில் யார் இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது- என்றார். (எ)

## கழிவுப் பொருள்களை தரம் பிரித்து வழங்குக

### மக்களுக்கு துண்டுபிரசுரம்

நல்லூர்.டிசெ.30

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது சுற்றாடல் கழிவுகளைச் சேகரித்து, தரம் பிரித்து கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்கவும். தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை மட்டுமே சபை ஏற்றுக் கொள்ளும் என்று பிரதேச சபை அறிவித்துள்ளது. இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் பிரதேச சபையினால் சகல குடியிருப்பாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடியிருப்புப் பகுதிகளைத் துப்புரவாக வைத்திருப்பதன் ஊடாக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேண வேண்டிய தார்மீகப் பொறுப்பு உங்களுக்கு உண்டு. திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவும். கல்லுண்டாய்ப் பகுதியில் கழிவுகளை அகற்றுவதாயின் உக்கக்கூடிய கழிவுகளைத் தனியாகவும், பொலித்தீன்களைத் தனியாகவும், போத்தல்களைத் தனியாகவும் தரம்பிரித்து வழங்கும் பட்சத்திலேயே அவை ஏற்றுக் கொள்ளப்படும் என்று மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே தங்கள் வீடுகளில் சேருகின்ற கழிவுப்பொருள்களைத் தரம்பிரித்து, கழிவகற்றும் வாகனம் ஒலி எழுப்பிக் கொண்டு வரும் வேளையில் அவற்றை வழங்கலாம். - என்றுள்ளது. (க-17)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் விநாயகமூர்த்தி புவனேஸ்வரி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
1 ஆம் கட்டையடி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

HOTLINE 0777 17 35 17



IT மற்றும் ஆங்கிலம் இரட்டை டிப்ளோமா
TVEC APPROVED CENTRE

புதிய பிரிவுகள் ஆரம்பம்
28-12-2019 - (Sat)
2 - 1 - 2020 - (Thu)
9 am or 3pm

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

IT Courses
- Dip.in Information Teachnology
- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing
- Hardware,Mulitmedia,
- Auto CAD,Java,C++,PHP

DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

NVQ COURSES
ICT -Full Time (Level 4)
CAA -Full/Part Time
புதிய பிரிவுகள் 2/1/2020 ஆரம்பம்

- இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)
IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
• DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி | கண்டி வீதி (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் |
| --- | --- | --- | --- | --- |
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

# நெடுந்தீவு மாணவன் சாதனை



யாழ்ப்பாணம் டிசெ.30

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் மாவட்ட நிலையில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் யேசுதாசன் கிறிஸ்துராஜன் என்ற மாணவன் கலைப்பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட நிலையில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். பெறுபேறு குறித்து மகிழ்ச்சி கலந்த தொனியில் கருத்து வெளியிட்ட மாணவன் கிறிஸ்துராஜன் "எனது பிரதேசம் எல்லா நிலையிலும் பின்தங்கியுள்ளது.

நான் படித்து உயர்நிலைக்கு வந்து எனது பிரதேச வளர்ச்சிக்கு வித்திடு வதுடன் பிரதேசத்தின் தொல்லியலைப் பாதுகாக்கும் வகையில் தொல்லியல்துறையில் உயர் பதவி வகிப்பதே எனது நோக்கம்" என்றார். தனியார் கல்வி நிலையங்களோ கல்விக்கான வேறு மேலதிக வாய்ப்புகளோ இல்லாத இந்தப் பிரதேசத்தில் இம்மாணவன் பாடசாலையில் மாத்திரம் கற்று சித்தியடைந் தமை குறிப்பிடத்தக்கது.

(104)



கோப்புப்படம்

# கிளிநொச்சி மாவட்ட முதனிலைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் டிசெ.20

நேற்று முன்தினம் வெளியாகியுள்ள உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் நிலை பெற்ற மாணவர்களின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**புதியபாடத்திட்டம்**

**உயிரியல் பிரிவு**

விமலேஸ்வரன் பவிக்சன் ஏ2பி கிளிநொச்சி ம.வி

**பொறியியல் தொழிநுட்பம்**

கண்ணப்பமூர்த்தி சுபாஞ்சன் 2ஏபி பளை மத்திய கல்லூரி

**உயிர்முறைத்தொழிநுட்பம்**

ஆர்.மதுசாளினி 3பி முழங்காவில் ம.வி

**கணிதம்**

சிவராஜா றேனுஜன் 3ஏ கிளிநொச்சி ம.வி

**கலை**

சுந்தரலிங்கம் பிரணவி 3ஏ கிளிநொச்சி ம.ம.வி

**வணிகம்**

பாலச்சந்திரன் கிருபாளினி 3ஏ அக்கராஜன் ம.வி

**பழைய பாடத்திட்டம்**

**உயிரியல் தொழிநுட்பம்**

தர்மகுலசூரியர் சிலக்சனா 2ஏபி கிளிநொச்சி இந்துக்கல்லூரி

**உயிர்முறை தொழிநுட்பம்**

சுந்தரமூரத்தி சுவாகி 2பிசி கிளிநொச்சி ம.ம.வி

**வணிகம்**

சுபாஸ் 2ஏபி கிளி.முருகானந்தா கல்லூரி

**கணிதம்**

வின்சன்றிபோலட் கிருசா ஏ2பி கிளிநொச்சி மகா வித்தியாலயம்

கலை சிவனேசன் தர்சி 3ஏ வட்டக்கச்சி மத்திய கல்லூரி

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகள்

## நேற்றுமுன்தினம் வெளியான க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாடசாலைகளால் வழங்கப்பட்ட பெறுபேறுகளின் விபரம்

### வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

**உயிரியல் பிரிவு *(ஆங்கில மொழி)***

**3ஏ**

எம்.நிவேதா, எஸ்.அபிராமி, பி.தாரணி, ரி.மதுராங்கி, டி.அபிராமி, என்.சினேகா.

**2ஏ,பி**

ஆர்.யதுசா, வி.தபோதினி, த.கௌசிகா, ஜெ.சாகித்தியா.

**உயிரியல் பிரிவு *(தமிழ் மொழி)* 3ஏ**

க.அபர்ணா, கு.கஜந்தினி, கே.சாகிர்த்தியா, கே.லிந்துஜா, எஸ்.அபினஜா, ஜெ.கமலியா, ப.கஸ்தூரி, க.துளசிகா, ந.கிசாந்திகா, எஸ்.டர்மிகா, எல்.றிஸ்மி, எஸ்.சாரங்கா, ரி.நூர்மிலா, ஜெ.கீர்த்திகா, எஸ்.கம்சிகா, எஸ்.தேனுகா, கே.தர்சிகா.

**2ஏ, பி**

க.அபிராமி, எம்.மதுசா, பி.கஜானா, ஜி.மதுசா, ஆர்.நித்தியராகவி, எஸ்.துளசினி, வி.விமலினி, எஸ்.துசாரா, ஐ.சங்கவி, பி.காருண்ஜா, எஸ்.தர்மசாயினி, எல்.கீத்தனா, வி.கோபிகா, ஆர்.லக்சிகா, ஜெ.தாருகா

**2ஏ, சி**

ஆர்.மாதங்கி, பி.சுகிரா, வி.தர்சனா, ஆர்.கம்சிகா, ஜி.ஆரணி, எஸ்.சுபாங்கி, எஸ்.தயானி, ஜி.அபிசாயினி.

**ஏ,2பி**

ஆர்.சங்கவி, எஸ்.பவித்ரா, எஸ்.கோபிகா, கே.சாகிர்த்ரா.

**ஏ,பி,சி**

ஜெ.சபிணா, எஸ்.கார்த்திகா, எஸ்.தர்சிகா.

**கணிதப்பிரிவு (ஆங்கில மொழி)**

**2ஏ, பி**

பி.கஜானி, ஜெ.ஜெயதீபிகா

**கணிதப்பிரிவு (தமிழ் மொழி) - 3ஏ**

கே.சங்கவி, ஆர்.யசிந்தா, ரி.பைரவி, கே.நிதுர்சிகா, யு.சதுரங்கினி, ஜெ.சுவேதிகா, ஈ.ஞானமதுரி

**2ஏ, பி**

கே.சங்கவி, எஸ்.பூர்வஜா

**2ஏ, சி**

எஸ்.அஜிந்தா

**வணிகப்பிரிவு - 3ஏ**

ஆர்.தேனுஜா, ஏ.அஸ்வினி, எஸ்.மதுமை, வி.சொருபி, எஸ்.தேனுஜா, எம்.ரசிகா, ரி.திலக்ஸி, பி.ரம்யா, எஸ்.விதுர்சனா, ஜி.காருணி, வி.வைஸ்ணவி, எ.அருண்யா.

**2 ஏ,பி**

பி.பிரியதர்சனா, பி.ஜெனகா, வி.அனுஸ்ரா, கே.பிரசாந்தினி, எ.அஜினா, வி.தீபிகா.

**2ஏ,சி**

எஸ்.பிரணவி

**ஏ,2பி**

ஜெ.நிவேதா, ஏ.டிலுஜா, பி.தனுசா, பி.கீர்த்தனா

**கலைப்பிரிவு - 3ஏ**

எம்.சயந்தினி

**2ஏ,பி**

ஜெ.கௌசல்யா

**2ஏ,சி**

வி.ரதுஸா

**ஏ,2பி**

வி.காயத்திரி, ரி.கீர்த்தனா

**ஏ,பி.எஸ்**

எஸ்.பானுஜா

**தொழில்நுட்ப பிரிவு உயிரியல்**

ரி.லிலனிஜா ஏ.பி, எஸ்.கீர்த்தனா ஏ,2சி, எம்.தனுஜா பி,2சி, எஸ்.பிரியங்கா பி,2சி, வி.சுதர்சிகா 2பி,சி, எ.சர்மிளாபி,2சி, கே.கிருத்திகாபி,2சி, எஸ்.சிவதர்மினி 3சி

**இலத்திரனியல் தொழில்நுட்பம்**

டி.சரோன் கபோனா 3பி, எல்.சில்வியா பி,2சி, எம்.விஸ்ணுகா பி,2சி

### கிளிநொச்சி குமரபுரம் பரந்தன் இந்து மகா வித்தியாலம்

**வர்த்தகப்பிரிவு**

சி.மேகலா - 2ஏபி, ந.ரக்சன் - ஏ2சி, பா.தெபோறா - பிசிஎஸ், சி.ரியானி - சி2எஸ்.

**கலைப்பிரிவு**

ந.சுபாசினி 2பிஎஸ், ம.துஜிந்தா - சி2எஸ். (104 222)

### சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானம்**

ரவிதாஸ் கிருத்திகா -3ஏ, மகேந்திரன் ஐந்தூரன் - ஏ2பி, ஜோன் பிரகாஸ் றெனால்ட் ஜனுசன் - ஏ2பி, அருமைத்துரை சுகன்யா - 2ஏபி, திருவருட்செல்வம் அகல்யா - ஏ2பி, பாலகிருஸ்ணன் விபுஷானி - 2பிசி

**பௌதீக விஞ்ஞானம்**

குணபாலா டிலக்சன் - ஏ2பி, ரவிதாஸ் அகிலா - ஏபிசி, குணசேகரன் கீர்த்தனா -ஏபிசி, கஜேந்திரன் ரஜீகன் - ஏபிஎஸ், உதயகுமார் கிருஷாணந் - பி2சி

**இயந்திரவியல் தொழினுட்பம்**

சிறீறஞ்சன் கஜப்பிரியன் -3ஏ, ஜெயதாஸ் றிலக்சன்-2ஏபி, லவன் லக்சன் - ஏ2பி, நடராசா கௌதமன் - ஏபிசி, ஓம்பிரகாஸ் றெனால்ட் ஜெனுசன் - 2ஏபி, மோகனதாஸ் சதுசன் - பி2சி, டக்ளஸ் ஜோன்சன் அன்ரூசிடின் - ஏபிசி, செல்வராசா ஜனாங்த்தனி -3சி

**கலை**

நாகரட்ணம் சதீஸ்குமார் - 3ஏ, றிசாந்தி விஜியகுமார் - 3பி, கில்டா தேவராசா -3பி, இராசதுரை மிதுசன் - 2பிசி

**வர்த்தகம்**

ரவிக்குமார் சோபிதா - 2பிஎஸ், அருளானந்ததேவன் மதனிகா - பி2சி

### வட்டு இந்துக் கல்லூரி

**உயிரியல் பிரிவு**

ர.சஞ்சிகன் - 3பி, இ.எழில்வதனா- பி2சி, தீ.சரணியா - பி2சி, யோ.மாதங்கினி - பி2சி, வி.துசாந்தி- பி2சி, ஜெ.வினோதினி - 2ஏபி, ச.சோபிதா- ஏபிசி

**கணிதப் பிரிவு**

ப.புவிந்திரா - ஏபிசி, க.நிலுசியா- ஏபிசி, ம.பிரகாஸ்குமார்- ஏபிசி, கு.வினோஜன்- பி2சி, வ.சதிகா- பிசிஎஸ். க.வித்தியா - 2ஏபி, அ.அனுசன்- ஏ2பி, செ.தினேஸ்- 2ஏசி, தி.தாரணி - ஏ2பி, இ.வனஜா- ஏபிசி, தே.தஜீவன்- 2பிசி, சி.பார்கவி- பிசிஎஸ்.

**வணிகப்பிரிவு**

க.ஸ்வர்ணா- 3ஏ, அ.தாருஜா- 3ஏ, கு.தினுசன்- 2ஏபி, ம.சுவர்ணா- ஏ2பி, ப.சரணியா- ஏபிசி. த.சுஜீவன்- ஏ2பி.

**உயிர்முறைமைகள்தொழில்நுட்பம்**

அ.சங்கீதா- ஏ2சி, வி.கீர்த்தனா- 3சி, சி.ரக்ஷ்னா- 3சி, ஸ்.அஞ்சலிக்கா- 3சி, இ.சைந்தினி- 3சி, ச.சதுசா - 3சி

**கலைப்பிரிவு**

எ.லோ.நி.அனுஸ்ரா- 3ஏ, க.மயூரன்- 2ஏபி, த.திசியா- ஏ2பி, ஜீ.விதுசியா- 3பி, யோ.நிலாவினி- ஏ2சி. ச.விதுசா- ஏ2பி, வ.கோகிலதாஸ்- பி2சி, ம.கீர்த்தனா- பி,2சி

**பொறியியல் தொழில்நுட்பம்**

சி.சிந்துசன்- 3ஏ, சி.தனுசன்- 2பிசி, அ.அன்ரனிரெக்ஸ்- பி2சி, ஆ.பிரதீபன்- பி2சி. வி.ராகவன் - 2ஏபி, ந.அஜித்- 2பிசி, சி.சசிகரன்- 3பி, சு.தர்மராஜ்- 2பிசி.

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகள்

**நேற்றுமுன்தினம் வெளியான க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாடசாலைகளால் வழங்கப்பட்ட பெறுபேறுகளின் விபரம்**

**யா/ஞானாசிரியர் கல்லூரி கரவெட்டி**
**வணிகப்பிரிவு** - எஸ்.ஸ்ரீரம்யா - 3ஏ

**கலைப்பிரிவு**
ஆர்.தர்சினி - 2ஏபி,, கே.குமிதா - ஏபிசி, ஏஸ் .கஸ்தூரி - ஏபிசி. (104)

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி க.பொ.த. உயர்தரம் பரீட்சைப் பெறுபேறுகள்**

**கணிதப் பிரிவு**
ச.லிங்கேஸ்வரன் - 3 ஏ, தி.மணிமோகன் - 3 ஏ, சி.சர்மிலன் - 3 ஏ, கி.வினோஜன் - ஏபிசி, து.லக்சன் - ஏபிசி, ஸ்.நிசாந்தினி - ஏபிசி, சி. ஜெயதரன் - ஏ2சி, ப.கேதுஷா - பி2சி, பெ.சாகித்தியன் - பி2சி.

**உயிரியல் பிரிவு**
த.ரேணுஜன் - 2ஏபி, ம.துஷரா - 3 ஏ, சு.திலக்சனா -2 பிசி, வி.ஷெசகி - பிசிஎஸ்.

**வணிகப் பிரிவு**
ஜெ.றொக்சனா - 3 ஏ, லோ.துளசிகா - 3ஏ, த.கர்சிகா- 3ஏ, ப.கீர்திகா - 3ஏ, க.மதுரா - 2ஏபி, அ.யசிந்தா- ஏ2பி, கை.லோகிதாஸ் - 3ஏ, பி.பிரியங்கன் - 2ஏசி, கி.பங்கயன் - ஏபிசி, செ.நிருபா - ஏபிசி, த.சகானா ஏபிசி.

**கலைப்பிரிவு**
த.ரேணுஜா - 3ஏ, ஜெ.சஞ்சீவன் -3ஏ, ச.கபில்ராஜ்- 3ஏ, சு.திலக்ஸன் - 3ஏ, சு.சஞ்சிகா- 2ஏபி, ச.அபிசரண்- 2ஏபி, க.கஜகரன் - 2ஏபி, மோ.திவிசனா - 2ஏபி, பா.சாணு- 2ஏஎஸ், தி.ஜனனி - ஏ2பி, ச.சஞ்ஜீகரன் - ஏ2பி, ச.மோகனகீதன் - 2ஏஎஸ், கி.டர்வின் - ஏபிசி ம.மரியலிஷா -ஏபிசி சு.சிந்துஜா - ஏபிசி சு.கோபிகா - ஏபிசி. (104-422)

**மானிப்பாய் இந்துக் கல்லூரி க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்**

**கணிதம் விஞ்ஞானப் பிரிவு**
சி.சிவதர்சன் - ஏபிசி, கௌ.ஜதுர்ஷன் - ஏ2சி, கே.கெலிஸ்ரன் - ஏ2சி, யோ.டிலக்சன் - ஏசிஎஸ், பி.தனுசன் - ஏசிஎஸ், இ.சிவாஜன் - 2பிசி, ஜீ.சுவஸ்திகன் - பிசிஎஸ், ர.டிலக்சன் - 2பிஎஸ், சி.கஜுரன் - பி2எஸ், ம.மதுஷன் - 2சிஎஸ், ஜெ.கஜீபன் - சி2எஸ்

**உயிர்முறைமைகள் தொழினுட்பப் பிரிவு**
சு.சுரேந்திரன் - 2பிசி, ர.துதிசன் -பிசிஎஸ், பு.துவாரகா- 3சி, ரா.சரணிகா - 2சிஎஸ், சி.சந்துஜா - 2சிஎஸ், செ.அஜித்தா - 2சிஎஸ், சி.ஜோன்பிளேமிங் - 2சிஎஸ், லோ.ரிலக்சன் - சி2எஸ், சு.சோபாசினி - சி2எஸ் க.குமரன் - சி2எஸ், லோ.டிலாஜினி - சி2எஸ்.

**பொறியியல் தொழிநுட்பப் பிரிவு**
ம.யந்துசன் - ஏ2சி, கு.டனுஜன் - 2பிசி, கே.கஜந்தினி- 2பிசி, வி.கிருஸ்ணஜெயன் - 2பிசி, பு.எவ்றிக் ஏனோக் - 2பிசி, கி.கவிராஜ் - 3சி, வி.நேசராஜ் - பிசிஎஸ், எஸ்.ரீ.பிரதீபன் - 3சி, ஞா.பீஸ்மன் - பி2எஸ், செ.பிரசன்னா - 2சிஎஸ், ஜெ.மதனராஜ் - 2சிஎஸ்.

**வணிகப் பிரிவு**
செ.கலாகரன் - ஏ2சி, பா.கஜீவன் - 2பிசி, இ.தனுசியன் - பி2சி, வி.நிசாந்தன் - பிசிஎஸ், கி.ஜெயபிரணவ சர்மா - 2சிஎஸ், சி.டினேஸ்குமார் - 2சிஎஸ், ஜெ.பிரணவன் - 2சிஎஸ், சு.ஜோர்ஜ்பிரவீன் - 2சிஎஸ், சி.சுபாஸ் - சி2எஸ்.

**கலைப்பிரிவு**
சு.நிதாபன் - ஏ2பி, சி.டிலக்சன் - ஏபிசி, ஜெ.ஜதீஸ்வரன் - பிசிஎஸ், அ.கமில்ரன் - 3சி, ச.கீர்த்திகன் - 3சி, ப.கோகுலன் - 2சிஎஸ், செ.சிந்துஜன் - 2சிஎஸ், எஸ்.ரீ.சாதுசன் - 2சிஎஸ், ஆ.திலக்சன் - 2சிஎஸ், ச.அஜீபன் - 2சிஎஸ் (104)

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி**
**கணிதப்பிரிவு**
எஸ்.டனுஜன்-3ஏ, என்.பாலகுமாரன்-3ஏ, கே.பிரவிந்தன் - 3ஏ, கே.ஜகிர்த்தன் - 2ஏ,பி, சௌமியன் 2ஏ,பி, அகித் - 3ஏ, பி.வைஷ்ணவன் - ஏ,பி,சி, எம்.கங்காதீபன் - ஏ,பி,சி, எஸ். தனுசன் - ஏ,பி,சி, ரி.சாருஜா - 3பி, வி.விதுசன் - பி,2சி, வி.சாருஜன்- 2பி,எஸ், கே.ஜதுகுலன் - 3பி, ஆர்.சஜிதா- பி,சி,எஸ், எம்.சானுகா -3சி,

**விஞ்ஞானப்பிரிவு**
எஸ்.சங்கவி -3ஏ, எ.கீர்த்தனன் -2ஏ,பி, தரணிகா- ஏ,பி,சி, கே.கீர்த்திகா- 2பி,சி, ரி.ஜீவிதா- 2பி,சி, எஸ்.நிருஷா - 2சி,எஸ், எஸ்.சம்பவி - 2சி,எஸ், என்.தர்சிகா- 3சி

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**
சு.வைஷ்ணவன் - 3ஏ, சி.விதுஷன் - 2பிசி, ப. இந்துசன்- 3சி, நா.அருண்- 2சிஎஸ், க.குபேரன்- 2சிஎஸ், ப.கபில்ராஜ்- 2சிஎஸ்.

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு**
க.ஹானுஜி- ஏ2பி, சி.டிலக்சி- பி2சி, கோ.சாகித்தியா- 3சி, சா.கஜானா- பி2சி, ம.ஹரிகரன்- பிசிஎஸ், க. பிரியங்கா- பி2சி, சி.உதயகரன்- 3சி, செ. பிரியந்தி- 2சிஎஸ், ஞா.டௌசிகா- 2சிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு**
கு.பூர்ணிமா- 3ஏ, ம.நிதரச்னா- 3ஏ, பா.வைஷ்ணவி- 3ஏ, த.தர்ஷணாங்கி- 3ஏ, தி.அபிநயன்- 3ஏ, யோ.பிரிந்தா- 3ஏ, ந.சரண்ராஜ்- 3ஏ, இ.சீதாராம்- 2ஏபி, தி.சோஸ் ரீபன்- 2ஏபி.

**கலைப்பிரிவு**
சு.யஸ்மினா- 3ஏ, வே.லம்ஷிகா- 3ஏ, சி.கிந்துசன்- 3ஏ, த.சயந்தன்- ஏ2பி, இ.சர்மிலன்- ஏ2பி, ச.நர்த்தியா- ஏ2பி, ஜெ.கஜானி- 2ஏசி, ம.மோகனன்- ஏபிசி. (104)

## மன்னாரில் சிறாஜ் முதலிடம் பெற்றார்



மன்னார் அல்.அஸ்கார் தேசிய பாடசாலை மாணவன் எப்.சிறாச் கணித பாடப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். 2019ஆம் ஆண்டிற்கான க.பொ.த.உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியுள்ளன. இதில் மன்னார் அல். அஸ்கர் தேசிய பாடசாலை மாணவன் எப்.சிறாஜ் கணிதப் பிரிவில் (பழைய பாடத்திட்டம்) 2ஏபி பெறுபேற்றைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தில் சாதனைப்படைத்துள்ளார். (104-213)

## புதுமுறிப்பு கிராமம் சாதனை படைத்தது

யாழ்ப்பாணம் டிசெ.30

கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பு கிராமத்தில் வரலாற்றில் முதன்முதலாக ஒரே தடவையில் ஏழு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி சாதனை படைத்துள்ளனர். கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்விப் பொதுதராதர சாதாரணம் வரை கல்வி கற்று அயற் பாடசாலைகளில் உயர்தரம் கற்று உயர்தர பரீட்சையில் தோற்றிய ஏழு மாணவர்கள் இந்த வரலாற்று சாதனையை படைத்தது தங்கள் கிராமத்திற்கு புகழை சேர்த்துள்ளனர்.

உயிரியல் மற்றும் கணிதப்பிரிவில் தலா ஒவ்வொருவரும் வர்த்தகப் பிரிவில் இருவரும் கலைப்பிரிவில் மூவருமாக ஏழு பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (104 -6)

## அப்பா விவசாயம் செய்தே எம்மை படிப்பித்தார்

*மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன் பிரதீஸ்*

வவுனியா டிசெ. 30



எனது தந்தை விவசாயம் மேற்கொண்டு மிகவும் கஸ்டப்பட்டுத்தான் என்னைப் படிக்க வைத்தார்.

அவர் சிந்திய வியர்வையின் பலனை தற்போது நான் அடைந்துள்ளேன் என தெரிவித்தார் வர்த்தகப்பிரிவில் வவுனியா மாவட்டத்தில் முதலாவது இடத்தினைப் பெற்ற மாணவன் தங்கராசா பிரதீஸ்.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியான உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தினைச் சேர்ந்த தங்கராசா பிரதீஸ் வர்த்தகப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். தனது பரீட்சைப் பெறுபேறு குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தினசரி 5 கிலோ மீற்றர் தூரம் பேரூந்தில் பயணித்து தான் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றேன். தினமும் பாடசாலையில் கற்கும் பாடங்களை வீட்டில் சென்று மீட்டுப் படிப்பேன். அத்துடன் கடந்த கால வினாத்தாள்களை செய்து பார்த்துப் படிப்பது எனது வழமை. எனது தந்தை விவசாயம் செய்து வியர்வை சிந்தியே என்னைப்படிப்பித்தார். எதிர்காலத்தில் ஒரு சட்டத்தரணியாவதே எனது எதிர்கால இலட்சியமாகாக் கொண்டு இந்தப் பரீட்சைப் பெறுபேற்றினைப் பெற்றுள்ளேன். கஷ்டம் என்பது ஒரு விடயமே இல்லை. ஒரு குறிக்கோளைக் கொண்டு அதிலே மனைதைப் ஒருநிலைப்படுத்தி செயற்பட்டால் எதிலும் வெற்றி பெறலாம். எனத் தெரிவித்தார். (104- ரி4)

## கல்வியின் மூலமே நாம் இழந்தவற்றை பெற்றுக்கொள்ளமுடியும்

*மாணவி யாழினி தெரிவிக்கிறார்*



கல்வியின் மூலமே நாம் இழந்தவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என இறுதி போரின்போது தந்தையை தொலைத்துவிட்டு சிறு வயதிலிருந்து ஒரு கையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வணிகத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று சாதித்துள்ள மாணவி இரவிச்சந்திரன் யாழினி தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வணிகத்துறையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் இடம் பிடித்து பல்கலைக்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளார். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவி இ.யாழினி.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் உக்கிரம் அடைந்த காலகட்டத்தில் எறிகணை ஒன்று எங்கள் வீட்டின் மீது வீழ்ந்து வெடித்தபோது அம்மா ஒரு கையை இழந்தார். அதன் பின்னர் முள்ளிவாய்க்காலில் வைத்து அப்பாவையும் இராணுவத்திடம் ஒப்படைத்தோம். இதுவரை எங்கு தேடியும் அப்பாவைக் காணவில்லை. அம்மா தனது கையை இழந்த நிலையில் அப்பாவையும் இழந்து மிகவும் கஷ்டப்பட்டே எங்களை வளர்த்தார். இன்று நான் பல்கலைக்கழம் தெரிவாகியுள்ளேன். நாம் போரால் இழந்தவற்றை கல்வியின் மூலமே பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையே என்னைப் போல் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (104- ரி3)



# பொலித்தீனுக்குத் தடை

## பிரதேச சபையில் பிரேரணை

கொடிகாமம், டிசெ.30

மனித மற்றும் பிற நில நீர் வாழ் உயிரினங்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் பொலித்தீன் பாவனையைத் தடை செய்ய வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபை அமர்வில் உறுப்பினர் கஜன் பிரேரணை சமர்ப்பித்தார்.



லஞ்சீற் புதைக்கவும் முடியாது. எரிக்கவும் முடியாது. வாழையிலையைப் பசளையாகவும் பயன்படுத்த முடியும். எதிர்கால சந்ததிகளை நாமே நோயாளிகளாக்கும் செயற்பாட்டை செய்து வருகின்றோம். சூடான உணவுகளை பொலித்தீன் தாளில் பரிமாறி உட்கொள்வதால் புற்றுநோய் வர வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தேநீர்ச்சாலைகள், உணவகங்கள் திருமண மண்டபங்கள் ஆகியவற்றில் உணவு பரிமாறுதலின் போது பொலித்தீன் (லஞ்சீற்) பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்படும். மாற்றீடாக வாழை இலையைப் பயன்படுத்த வேண்டும். வாழையிலை உற்பத்தியாளர்களின் விவசாயம் மேம்பட இதனை பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும். விவசாயிகளின் நலன் கருதியும் வருமானத்தை ஈட்டக் கூடிய வகையில் வாழையிலையையும், தாமரை இலையையும் பாவிக்க வேண்டும் என்று பொதுச்சுகாதார பரிசோதகர் ஊடாக அறிவுறுத்தல் வழங்க வேண்டும்" என்ற பிரேரணையைச் சமர்ப்பித்து உறுப்பினர் உரையாற்றினார்.

லஞ்சீற்றை நாம் தடை செய்ய முடியாது. சுகாதார நலன்கருதி நோயின்றி வாழ்வதற்கு வாழையிலையைப் பாவிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்த முடியும். உணவகங்களுக்கும், திருமண மண்டபங்களுக்கும் அறிவுறுத்த முடியும். பிரதேச மக்களின் நலன்கருதி மக்களுக்கு ஒரு விழிப்புணர்வு வழங்க முடியும் என்று தவிசாளர் க.வாமதேவன் பதிலளித்தார்.

(க-159)

## மன்னார் கரையோரங்கள் படையினரால் சிரமதானம்

மன்னார், டிசெ.30

இலங்கை இராணுவத் தளபதியின் பணிப்புரைக்கு அமைவாக இலங்கையில் கரையோரப் பிரதேசங்களைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோரப் பிரதேசங்களிலும் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன.

மன்னார் மாவட்ட இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் சுபசன வெளிகல தலைமையில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் கடற்கரைப் பகுதியில் தூய்மையாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

சுமார் 220 கிலோ மீற்றர் கடற்கரைப் பிரதேசம் இராணுவத்தினரால் தூய்மைப்படுத்தப்பட்டது. கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட சகல விதமான கழிவுப் பொருள்களும் அகற்றப்பட்டன.

(க-56)



## சிறுவன் படுகாயம்

வவுனியா, டிசெ.30

விபத்தில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பதுளை நோக்கிச் சென்ற இ.போ.ச பஸ், புளியங்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் சென்று கொண்டிருந்த போது, அதே திசையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவன் பஸ்ஸுடன் மோதி விபத்து நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். துவிச்சக்கர வண்டியில் பயணித்த 13 வயதுச் சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(க-110)



## சிரமதானம்


கொக்குவில், டிசெ.30

தூய்மையான பசுமையான நகரம் என்ற திட்டத்தின் கீழ் கொக்குவில் பகுதியில் சிரமதானம் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் ஜே.122 கொக்குவில் கிராம அலுவலர் க.பாலினி தலைமையில் சிரமதான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

சிரமதானப் பணியில் கிராம மட்ட அமைப்புகள், பொது மக்கள், நல்லூர் பிரதேச சபையினர், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பங்குபற்றினர்.

(க-ரி1)



## நாவலர் விழா

மன்னார், டிசெ.30

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் ஏற்பாட்டில் 'நாவலர் விழா' மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் நேற்று இடம் பெற்றது.

பாடசாலை முன்றலில் இருந்த நாவலர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு துறைசார் விருதுகள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் தலைவர் மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரி பவனேசன், மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன் அறநெறி பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், திணைக்களப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(க-56)

## நவீன அடையாள அட்டை

யாழ்ப்பாணம், டிசெ.30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாழ்நாள் உறுப்புரிமை பெற்றவர்களுக்குப் பிளாஸ்ரிக்கிலான நவீன அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

இதனைப் பெறுவதற்குப் பிரத்தியேகமாக வழங்கப்படும் படிவத்துடன், படம் மற்றும் 250 ரூபா பணம் செலுத்தி தபால் கட்டளையை அனுப்பி நவீன அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூ.சே.குலநாயகம் கேட்டுள்ளார்.

(க-50)



## எங்களை...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒப்பந்தங்களை தந்தை செல்வா செய்தார். ஒப்பந்தங்களில் முக்கியமாக இருந்தது எங்களுடைய நிலங்களைக் காக்கின்ற பணியாகும். பண்டாரநாயக்கவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு இணைவதற்கான சந்தர்ப்பம் இருந்தது. இணைய வேண்டும் என்றே எழுதப்பட்டிருந்தது. காணி அதிகாரம் பிராந்திய அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தங்களில் சமஷ்டி என்ற சொல் எங்கும் இருக்கவில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் சமஷ்டி என்ற சொல் இருக்கவில்லை. டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் சமஷ்டி என்ற சொல் இருக்கவில்லை.

சமஷ;டி என்பதெல்லாம் இல்லை. எனவே புதிய வரைபை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று பலர் இன்று கூக்குரலிடுகின்றார்கள். ஆனால் நாங்கள் தான் சமஷ்டிக்கட்சி. சமஷ்டியை எதிர்த்தவர்கள் நீங்கள். அதுவும் காலாகாலமாக. தற்போது சமஷ்டி மீது திடீர் காதல் ஏற்பட்டுள்ளது.

**தேசிய கீதம்**

தேசிய கீதம் இசைப்பது என்பது சிறு விடயம். அதனை பெரிதுபடுத்தக்கூடிய விடயம் இல்லை. ஆனால் அது மனநிலையின் அறிகுறியாக இருக்கின்றது. உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோனுக்கு அரசமைப்புத் தெரியாது. அது என்ன சொல்கின்றது என்பது தெரியாது. ஆங்கில பத்திரிகையொன்று தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டிருந்தபோது அரசமைப்பில் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டும்தான் உள்ளது என்று கூறியுள்ளார். அவ்வளவுதான் அவருடைய அறிவு.

13ஆவது திருத்தத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது அவருக்குத் தெரியாது. 16ஆவது திருத்தத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதும் அவருக்குத் தெரியாது. மொழி உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தை அவர் வாசித்தது கிடையாது.

இந்த திருத்தத்தத்துக்கு முன்னதாக 1978 ஆம் ஆண்டில் இரண்டாம் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டபோது அது சிங்களத்திலும் தமிழிலும் உருவாக்கப்பட்டது என்பது அவருக்குத் தெரியாது. இரு மொழியிலும் அரசமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் எது மேலோங்கும் என்பதும் கிடையாது. இரண்டுக்கும் சம அந்தஸ்து இருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரையில் தேசியக்கொடியாக இருக்கட்டும் தேசிய கீதமாக இருக்கட்டும் நாங்கள் இன்னும் இந்த நாட்டின் தேசிய வாழ்க்கைக்குள் உள்வாங்கப்படவில்லை.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோது நாங்கள் மீண்டும் இந்த ஆட்சி முறைக்குள் வந்தோம். ஆனால் அதனை முழுமையான தீர்வாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைத் திருத்தம் செய்யவேண்டும் என்றே கூறினோம். அதன் பின்னரே போர் எல்லாம் நடந்தது.

நாங்கள் இன்னும் தேசிய வாழ்க்கைக்குள் சம குடிமக்களாக உள்வாங்கப்படவில்லை. அவ்வாறு உள்வாங்குவதற்கான இணக்கத்தை தெரிவித்துள்ளோம். ஒரு நாட்டில் வாழ்வதற்கான இணக்கத்தைக் கூறியிருந்தாலும் அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை ஒவ்வொரு தேர்தலிலும் அழுத்தம் திருத்தமாக நாம் சொல்லிக்கொண்டே இருக்கின்றோம். அது செய்யப்படவேண்டும். அது செய்யப்படும் வரை எதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என்பதையும் நாம் முழு நாட்டுக்கும் தெரிவித்திருக்கின்றோம்.

நாங்கள் தேசிய கீதத்தை பாட விட வேண்டும் என்று கேட்கவில்லை. எங்களை வாழ விட்டால் போதுமென்றே கேட்கின்றோம். அதனையே அரசுக்கும் சொல்ல விரும்புகின்றோம்.

சர்வதேசத்தில் இலங்கையும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கின்ற நாடு என்று கருத வேண்டும் என விரும்பினால் 70 வருட காலமாக இத்தனை தசாப்தங்களாக தொடர்ச்சியாக எங்கள் மக்கள் கொடுக்கின்ற ஜனநாயக தீர்ப்புக்கு மதிப்பளித்தே ஆக வேண்டும்.

அது செய்யப்பட்டால் தான் இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாகலாம். முன்னேற்றம் அடையும். அத்துடன் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து விடுபட முடியும். அது செய்யப்படாத வரையில் நாங்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டே இருப்போம். உங்களையும் உய்யவிட மாட்டோம் - என்றார். (ஒ.5,110,246)

## இளம்பெண்...

மாகியும் அவரைக் காணாத நிலையில் தேடியுள்ளனர். வீட்டின் கிணற்றைப் பார்த்தபோது நீரில் மூழ்கி சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது.

கொக்குவெளியைச்சேர்ந்த சிவானந்தம் சுலக்சனபிரியா (வயது-19) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

வவுனியா காமினி மகா வித்தியாலத்தில் கல்வி கற்று வரும் பெண் குத்துச்சண்டை போட்டியில் அகில இலங்கை ரீதியில் சாதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,110)

## பற்றைக்குள்...

வித்தனர்.

நேற்றுக் காலை குழை வெட்டச் சென்ற ஒருவர், சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். அங்கு சென்ற காங்கேசந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

கடந்த 26ஆம் திகதி சிறுவனைக் காணவில்லை என்று சிறுவனின் அம்மம்மா காங்கேசந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். (ஒ,5,26)

## தனயனை...

வம் நேற்று மாலை இடம்பெற்றது.

கெலனியாவைச் சேர்ந்த வருண கமகே (வயது-55) சடலமாக மீட்கப்பட்டு ள்ளார். அவரது மகனான லபிது கமகே (வயது-16) காணாமல் போயுள்ளார்.

கோம்பாவில் சந்தி என்று அழைக்கப்படும் 14ஆம் கட்டையடியில் இராணுவ முகாம் உள்ளது. அந்த முகாமில் பணியாற்றும் அதிகாரி ஒருவரைப் பார்ப்பதற்கு அவரின் குடும்பத்தினர் நேற்று வந்துள்ளனர். அவர்களில் தந்தையும், மகனும், கடலில் குளிக்கச் சென்றுள்ளனர்.

கடல் அலையில் மகன் அள்ளுண்டு செல்வதைப் பார்த்த தந்தை, மகனைக் காப்பாற்ற முயற்சித்துள்ளார். இருப்பினும் அவரும் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மீனவர்களின் உதவியுடன் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது. தந்தையின் சடலம் மீட்கப்பட்டது. மகனைக் காணவில்லை. தொடர்ந்தும் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. (ஒ.5,105,ரி3)

## சமஷ்டித்...

தல் அறிக்கையை ஏற்றுக் கொண்டு 55 லட்சம் மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். அவர்களில், தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் உள்ளடங்குகின்றனர். நீதி நியாயம் தெரிந்த மக்கள் அப்படி வாக்களித்திருக்கின்றார்கள். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழா வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாஸவுக்கு 40 இலட்சத்துக்கு அதிகமான சிங்கள மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். சிங்கள - பௌத்தரான அவர் எமது இனத்தின் சார்பில் முன்வைத்த தேர்தல் அறிக்கையின் முக்கியத்துவம் கருதியே இவ்வாறு வாக்களித்திருக்கின்றார்கள். நாம் தோற்றுவிட்டோம் என்று நீங்கள் பின்னோக்கிப் பார்க்கத் தேவையில்லை.

நாம் எதிர்பார்த்தது போல தனது குடும்பத்தை போர்குற்றங்களில் இருந்து பாதுகாப்பதற்காக பல விடயங்களை ஜனாதிபதி செய்கின்றார். பல கைதுகள் இடம்பெறுகின்றன. இந்த நாட்டில் எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு குழப்பமான நிலை உருவாக்கப்படுகிறது. நாடாளுமன்றத் தேர்தல் வரை அதை இன்னும் தீவிரப்படுத்துவார்கள்.

இந்த அரசு எமது இனத்துக்கு விரோதமாக எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்கு எமது கட்சியின் இளைஞர்கள், தொண்டர்கள் தயாராக வேண்டும் என்பதே எனது கோரிக்கை. எம்மை நாம் ஆயத்தம் செய்வதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும். தைரியத்தை இழந்து விடாதீர்கள். எதற்கும் தாயாராக எமது மக்களை அணிதிரட்ட வேண்டும் என்பதுதான் இன்று எனது செய்தியாக இருக்கும். மாறாக வாக்கு கேட்டு வரவில்லை - என்றார். (ஒ.5,110)

## சத்தமா?...

மொன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. நாளை மறுதினம் முதலாம் திகதி முதல், அதிக ஒலியில் பேருந்துகளுக்குள் பாடல் ஒலிபரப்பப்பட்டால் பொதுமக்கள் 1955 என்ற இலக்கத்துக்கு அறிவிக்க முடியும். அத்துடன், தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பாடல்களை கொண்ட இறுவட்டு ஒன்றையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உருவாக்கியுள்ளது. நாளை இந்த இறுவட்டு தனியார் பேருந்து சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும்: இதன்படி, தெரிவு செய்யப்பட்ட பாடல்களை ஒலிபரப்பாமல், உரத்த ஒலியில் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டால் பொதுமக்கள் முறையி டலாம். (ஒ.5)

## 'டீல்' ...

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள எந்த அரசியல் கட்சியும் எந்த மாவட்டத்திலும் தேர்தலில் போட்டியிடலாம். வடக்கு கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனை ஈடு செய்வதோடு தேசிய பட்டியலிலே வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏனைய மாவட்டங்களிலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

மனோகணேசனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. தெற்குபகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடக்கூடாது என்றும், வடக்கில் மனோகணேசன் போட்டியிட மாட்டார் என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிரு ந்தது.

இருந்தும் மனோகணேசன் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் வடக்கு, கிழக்கில் வேலைகளை மேற்கொண்டமையால் அவர் இங்கு போட்டியிட்டு விடுவார் என்ற எண்ணத்தில் தாங்களும் தெற்கில் போட்டியிடுவோம் என்ற கருத்தை மனோகணேசனுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள் - என்றார். (ஒ.5,110)





# இன்றைய நாள்

**மேடம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற, புதிய வாய்ப்பு உருவாகும். நம்பிக் கையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் மனதில் பதற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் சார்ந்த குறைகளை சரி செய்வதால் எதிர் பார்த்த வளர்ச்சி உருவாகும். சிறு அளவில் பணக்கடன் பெறுவீர்கள்.

**மிதுனம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பண வரவு முக்கிய செலவுகளுக்கு பயன்படும்.

**கடகம்:** உங்கள் மனதில் உத்வேகம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். உபரி பண வருமானம் கிடைக்கும். விவகாரங்க ளில் சாதகமான தீர்வு வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடத்து வீர்கள்.

**சிம்மம்:** தடைகளை சரி செய்கிற யுக்திகளை அறிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அரிகரிக்கும். உபரி பண வரவை தகுந்த முதலீடாக மாற்றுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கன்னி:** மனதில் சிறு குழப்பம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை செயல்களில் மாற்றம் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியை உருவாக்கும். பண வரவு சீராகும். வெகு நாள் காணாமல் தேடிய பொருள் புதிய முயற்சியால் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் சஞ்சலம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். சேமிப்பு பணம் செலவாகும். நேரத்திற்கு உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.


**விருச்சிகம்:** மனதில் தெய்வ நம்பிக்கை வளர்ந்து மகிழ்ச்சியை தரும். தொழிலில் தேவையான மூல தனத்து டன் அபிவிருத்தி பணி செய்வீர்கள். அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**தனுசு:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்து பேசுவர். தொழில், வியாபாரம் செழிக்க தன்னம்பிக்கையுடன் பணி புரிவீர்கள். பண வரவு சீராகும்.

**மகரம்:** பணி சிறப்பாக நிறைவேற புதிய திட்டம் உருவாக்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும். ஆதாய பண வரவு கிடைக்கும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** உறவினரின் பேச்சு தொந்தரவு தருவது போல உணருவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி ஏற்படலாம். பண பரிவர்த்தனையில் நிதானம் வேண்டும்.

**மீனம்:** சமயோசிதமான செயலால் எதிர்ப்பு விலகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். நிலுவை பணம் வசூலாகும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.




# 21 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருள் உருகுவேயில் மீட்பு!

மொன்ரெவிடியோ, டிசெ. 30
உருகுவே நாட்டில் பெரும் தொகை பெறுமதியான போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட போதைப் பொருள்கள் இலங்கை மதிப்பில் சுமார் 21 ஆயிரம் கோடி பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உருகுவே நாட்டில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நாட்டின் கடற்படை அதிகாரிகளும், சுங்க அதிகாரிகளும் துறைமுக நகரான மொன்ரெவிடியோவில் நடத்திய தேடுதலிலேயே இந்தப் பெருந்தொகையான போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேற்கு ஆப்பிரிக்க நாடான டோகோவின் தலைநகரான லோமுக்கு அவை கடத்தப்பட இருந்தமை தெரியவந்துள்ளது. (ம)



# அலஸ்காவில் கடுமையான பனி

வொஷிங்டன், டிசெ. 30
அமெரிக்காவின் அலஸ்கா கடுமையான பனிப்பொழிவை எதிர்கொண்டுள்ளது. கடுமையான பனி காரணமாக அங்கு மைனஸ் டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை நிலவுகிறது.

இது குறித்து ஊடகங்கள், 'அலஸ்கா இவ்வாண்டும் கடுமையான பனிப்பொழிவை எதிர்கொண்டுள்ளது.

அலஸ்காவின் வடக்குப் பகுதியில் மைனஸ் 35 முதல் 55 டிகிரி வெப்ப நிலை நீடிக்கிறது' என்று செய்தி வெளியிட்டுள்ளன.

அலாஸ்காவில் நிலவும் பனிப்பொழிவு குறித்து அமெரிக்க தேசிய வானிலை மையம் கூறும்போது, 'வெள்ளிக்கிழமை அலாஸ்காவில் மைனஸ் 65 டிகிரி வெப்ப நிலை நீடித்தது. கடந்த 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு அலாஸ்காவில் நிலவிய குறைந்தபட்ச வெப்ப நிலை இதுவாகும் என்று தரவுகள் தெரிவிக்கின்றன' என்று தெரிவித்துள்ளது. (ம)


# சோமாலியாவில் தாக்குதல் 90 பேர் சாவு

சோமாலியாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 90ஆக அதிகரித்தது.

சோமாலியாவில் அல் குவைதா அமைப்புடன் தொடர்புடைய அல்ஷபாப் பயங்கரவாத அமைப்பு, தொடர்ந்து வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. குறிப்பாக சோதனைச் சாவடிகள், விடுதிகள் மற்றும் கடலோரப் பகுதிகளைக் குறிவைத்து தாக்குதகள் நடத்தப்படுகின்றன. சோமாலியா தலைநகர் மொகடிஷுவில் உள்ள பாதுகாப்பு சோதனைச் சாவடியில் உள்ள வரி செலுத்தும் மையத்தை குறிவைத்து பயங்கரவாதிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தினர். நேற்று மாலை நிலவரத்தின்படி 90 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் (ம)



# சீனா, ரஷ்யாவுடன் இணைந்து ஈரான் கூட்டுப் போர்ப் பயிற்சி!





தெஹ்ரோன், டிசெ. 30

இந்திய பெருங்கடலின் வடக்குப் பகுதியில் சீனா, ரஷ்யாவுடன் இணைந்து கூட்டு ராணுவப் பயிற்சி நடத்தியதை ஈரான் உறுதிப்படுத்தி உள்ளது.

அமெரிக்கா- ஈரான் இடையே பதற்றம் நிலவி வரும் சூழலில் ஈரான், ரஷ்யாவுடன் இணைந்து இந்தியப் பெருங்கடல் மற்றும் கல்ப் ஆப் ஓமனில் கூட்டு ராணுவ பயிற்சியை நடத்த இருப்பதாக சீனா தெரிவித்தது. இந்தக் கூட்டு ராணுவப் பயிற்சி மூன்று நாடுகளுக்கு இடையேயான கடற்படை ஒத்துழைப்பை இன்னும் ஆழமாக்கும் என்றும் சீனா தரப்பில் தெரி விக்கப்பட்டது. இந்த நிலையில் சீனா, ரஷ்யாவுடன் இணைந்து கூட்டு ராணுவ பயிற்சி நடத்தியதை ஈரான் ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. நான்கு நாள் நடைபெறும் கூட்டு ராணுவ பயிற்சி குறித்து ஈரான் தரப்பில், 'இந்தக் கூட்டு ராணுவ பயிற்சி மூலம் கூறப்படும் செய்தி என்னவென்றால் அமைதி, நட்பு, நீடித்த பாதுகாப்பு என்பதாகும். இது ஈரானைத் தனிமைப்படுத்த முடியாது என்று காட்டுக்கிறது' என்றும் தெரிவித் துள்ளது. (ம)

# சல்லடையாகின்றது சிரியா!



சிரியாவில் கடந்த இரண்டு வாரங்களில் சுமார் 2 லட்சத்துக்கு அதிகமான மக்கள் வடக்குப் பகுதியிலிருந்து இடப்பெயர்ந்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.


இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபைத் தரப்பில், "சிரியாவில் நடைபெறும் தாக்குதல் காரணமாக கடந்த 12ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை மாரெட் அல் நுமன் பகுதியிலிருந்து இரண்டு லட்சத்துக்கு அதிகமான மக்கள் வெளியேறியுள்ளனர். அந்த பகுதியே வெற்றிடமாகக் காணப்படுகிறது' என்று தெரிவித்துள்ளது. முன்னதாக சிரியாவில் அரசுப் படையுடன் ஈரான், ரஷ்யா இணைந்து நடத்தும் தாக்குதலை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கண்டித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

**பின்னணி**

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும் ஐஎஸ் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்துவரும் போர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளித்து வருகிறது. ஐஎஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள சில இடங்களில் சண்டை அவ்வப்போது நடந்து வருகிறது. இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் வேறு நாடுகளுக்கு அகதிகளாக சென்றுள்ளனர். (ம)


## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 11 . 1944



இறப்பு 29 . 12 . 2019

### மாணிக்கம் நற்குணம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல 12/4; காலிங்க மாவத்தை, கொழும்பு - 5 இல் நீண்டகாலம் வசித்து வந்தவருமான மாணிக்கம் நற்குணம் 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் லலிதா, முகுந்தன்(London), சகிலா(London), வசந்தன் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்சிலின், கஸ்தூரி, கிரிசாந்தன், சிந்தூரா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : பிள்ளைகள், மருமக்கள்.

தொடர்பு : அன்சிலின் (மருமகன்) 077 785 9350
முகுந்தன் (மகன்) 00447956950630
கருணாநிதி (தம்பி) 077 757 1002
(CS 30029)(14.17)

## மரண அறிவித்தல்



### திருமதி தேவநாயகி தில்லைநடராஜன்

சரசாலையைப் பிறப்பிடமாகவும் மின்டோ சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவநாயகி தில்லைநடராஜன் சிட்னியில் 28.12.2019 அன்று காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மகளும், கொழும்புத்துறையை சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் - மஹேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சோமசுந்தரம் தில்லை நடராஜனின் அருமை மனைவியும், குமாரஸ்வாமிபிள்ளை மற்றும் லோகநாயகின் அன்பு சகோதரியும், ஶ்ரீரங்கராஜன், யமுனராஜன், மதனராஜன், விக்னராஜன், காலஞ்சென்ற வரதராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2019) செவ்வாய்க் கிழமை FOREST LAWN MEMORIAL PARK, CAMDEN VALLEY WAY LEP PINCTON ஆஸ்திரேலியா மயானத்தில் நண்பகல் 12 மணிமுதல் 3 மணி வரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45, அம்பலவாணர் வீதி,
அத்தியடி யாழ்ப்பாணம்.
0212222797

தகவல்:
திருமதி லோகநாயகி
ஶ்ரீசக்திவேல்

தொடர்பு: ரா. குமாரஸ்வாமிப்பிள்ளை - 040 360 9170
சோ. ஶ்ரீரங்கராஜன் - 040 896 6517
(c23037)(13.17)

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 08 . 1973



மறைவு 28 . 12 . 2019

### கிருஸ்ணன் ஜீவாதரன்

(யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்).

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடிச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் ஜீவாதரன் 28.12.2019 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன் மற்றும் பூமணி தம்பதிகளின் கனிஸ்ட புதல்வனும் சோபாவின் அன்புக் கணவரும் கைதடியைச் சேர்ந்த சத்தியசீலன் காலஞ்சென்ற இரத்தினம் (தவம்) தம்பதிகளின் அன்பு மருமகனும் லோகேஸ்வரன் (ஜேர்மனி), நிர்மலா (ஆசிரியர் - மட்டுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), சதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கருணாகரன் (லண்டன்), ரமேஸ்குமார் (சுவிஸ்), சங்கீதா (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கஜன், விஜயலதா (ஜேர்மனி), சிறீதரன் (மக்கள் வங்கி - பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்), வாணி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் கவிப்பிரியா, சாய்ப்பிரியா, கேமப்பிரியா(ஜேர்மனி), ஆரதி, துயான், ஆருஷன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் பிரியங்கா, கிருத்திகன், சுபஸ்தீ, தஷ்சிகா, வஷ்னி, அக்ஷித் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு சின்னத்தா இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(CS 30258)(14.17)

தகவல்:
குடும்பத்தினர்.

சிறீதரன் - 077 728 6200

# மோசமான தலைமை


## வில்லியம்சனை சாடுகிறார் மக்கலம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று நிறைவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தில் வில்லியம்சனின் தலைமைத்துவம் மோசமாக அமைந்துள்ளது என்று சாடினார் அந்த அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய பயிற்சியாளருமான மக்கலம்.

'முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தைப் பார்த்தோமானால் ஆஸ்திரேலியா மெதுவே தங்கள் நிலையை வலுப்படுத்திக் கொள்ள அனுமதித்தோம். நான் கேன் வில்லியம்சனின் பெரிய விசிறி, இப்போதும் கூட விசிறிதான், ஆனால் சில வேளைகளில் அவர் ஆர்வமற்ற முறையில் களத்தில் செயல்படுகிறார்.

அதாவது தலைமைத்துவத்தை அவர் மகிழ்ச்சியுடன் செய்வதுபோல் எனக்குத் தெரியவில்லை. ஆஸ்திரேலியாவை ஆஸ்திரேலியாவில் எதிர்கொள்வது சாதாரணமல்ல. ஆனாலும் ஆர்வமற்ற தலைமைத்துவத்தால் தவறுகள் நிகழ்கின்றன.

20 ஆயிரம் ரசிகர்கள் நியூஸிலாந்திலிருந்து மெல்போர்னுக்கு வந்திருக்கின்றனர். நியூஸிலாந்து அணி கடும் நெருக்கடியில் இருந்தபோதும் அவர்கள் நியூஸிலாந்தின் தேசிய கீதத்தை பாடியபடி இருந்தனர். இந்த அணியை ஒரு பெருமையாக அவர்கள் கருதுவதன் அடையாளம் இது. அவர்கள் நியூசிலாந்து அணி ஒவ்வொரு போட்டியிலும் வெல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள் அல்லர். ஆனால் தங்கள் வீரர்கள் முகத்தில் புன்னகையுடன் பாசிட்டிவாக ஆடி எதிரணியினருக்கு அவ்வப்போது அடி கொடுத்து நாங்கள் சுலபமானவர்கள் அல்லர் என்று விளையாட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் - என்றார். (ம)






# ஆஸ்திரேலிய அணி பதற்றமற்ற வெற்றி!

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பதற்றமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது நியூசிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 467 ஓட்டங்களைப் பெற்றது. ஹெட் அதிகபட்சமாக 114 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் வாக்நெர் 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 148 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. லாதம் பெற்ற 50 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் கம்மின்ஸ் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. வோர்ணர் 38 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் வாக்நெர் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.



488 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 240 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்ததை அடுத்து 247 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலிய அணி.

பந்துவீச்சில் லயன் 4 இலக்குகளையும் பற்றின்சன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஹெட் தெரிவானார். (ம)

# கிண்ணம் வென்றது கொலின்ஸ் கொங்கிரஸ்




கரணவாய்கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் கொலின்ஸ் கொங்கிரஸ் அணி கிண்ணம் வென்றது. கொலின்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கோகுலன் தலைமையிலான கொங்கிரஸ் அணியும் விஷ்ணு தலைமையிலான யுனைற்றெட் அணியும் பலப்பரீட்சை நடத்தின. 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கொங்கிரஸ். (ம-108)


# யுனிவெர்சல் கராத்தே

யாழ்ப்பாணம், டிசெ. 30

யூனிவேர்சல் கராத்தே போட்டியில் கிளிநொச்சி மாவட்ட சகுறா கராத்தே சம்மேளனத்தின் மாணவர்கள் பதக்கங்களைக் கைப்பற்றினர்.

வென்னப்புவ அல்பிரட் பிரிஸ் உள்ளக விளையர்ட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. 17 வயதுக்குட்பட்ட குமித்தே மற்றும் காட்டாப் போட்டிகளில் இராமர் பேரினியன் வெள்ளிப் பதக்கத்தையும், கலையமுதன் பரிதிகன் காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)





## முடியுமானால் ஆஸியை

# வீழ்த்துங்கள் பார்க்கலாம்!

### சொந்த அணிக்குச் சவால் விடுக்கிறார் கங்குலி

முடிந்தால் ஆஸ்திரேலிய அணியை இப்போது வீழ்த்துங்கள் என்று இந்திய அணிக்குச் சவால்விடுத்துள்ளார் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சவுரவ் கங்குலி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் இந்தியா டெஸ்ட் தொடரை 2:1 என்று வெற்றிபெற்று அங்கு டெஸ்ட் தொடரை முதன் முதலாகக் கைப்பற்றிய துணைக்கண்ட அணி என்ற பெருமையை இனி யாராலும் விராட் கோலி தலைமையிலான இந்திய அணியிடமிருந்து தட்டிச் செல்ல முடியாது.

ஆனால் ஐசிசி டெஸ்ட் சம்பியன் ஷிப் என்ற ஒன்று உருவானதற்குப் பிறகு அனைத்து நாடுகளும் தங்களுக்குச் சாதகமாகவே ஆடுகளங்கள் அமைக்கும் போக்கில் அடுத்த தொடரில் ஆஸ்திரேலியாவை அவர்கள் மண்ணில் வீழ்த்துவது கோக்லி படைக்குப் பெரும் சவாலாகும். சிமித், வோர்ணர் தடை செய்யப்பட்டு பெய்ன் தலைமையில் மனரீதியாக உடைந்துபோயிருந்த ஆஸ்திரேலிய அணியைத்தான் கோக்லி வீழ்த்தினார், அடுத்த முறை ஆஸி அணி வலுவாக இருக்கும் என்பதோடு கடந்த முறை இருப்பது போல் ஆடுகளம் அமையாது என்பதும் இப்போதே நமக்குப் புரிகிறது.

2020 ஆஸி. டெஸ்ட் தொடர் விராட் கோக்லிக்குக் காத்திருக்கும் பெரிய சவால். விராட் கோக்லி தனக்கும் அணிக்கும் நிர்ணயித்துக் கொண்ட உயர் தரநிலையை வைத்துப் பார்க்கும் போது 2018ஆம் ஆண்டில் தாம் வென்ற ஆஸ்திரேலிய அணி சிறந்த ஆஸ்திரேலிய அணியல்ல என்பது கோக்லியின் மனதில் இருக்கும் என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

அடுத்த ஆஸி. பயணத்தில் கோக்லி எதிர்கொள்ளவிருப்பது முழு வலுவுடைய ஆஸ்திரேலிய அணி. அவர்களை வீழ்த்த நம்மிடம் அணி உள்ளது ஆனால் தன்னம்பிக்கையுடன் அவர்களை வீழ்த்த நம்மிடையே சரியான அணி உள்ளது என்பதை நம்பிக் களமிறங்கி அனைத்தையும் சரியாகச் செய்ய வேண்டும்.

நான் தலைவராகும்போது என் குறிக்கோள் அதுதான், சிறந்த அணியுடன் மோதி நிரூபிக்க வேண்டும் என்பதே. 2003ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா தொடர் என் நினைவில் உள்ளது அப்போது சிறப்பாக ஆடினோம். இப்போதைய அணிக்கும் நிறையத் திறமைகள் உள்ளன, அந்தத் தொடருக்காக நான் காத்திருக்கிறேன். குறிப்பாக தொடக்க வீரர்களைச் சரியாக வைத்திருக்க வேண்டும், அயல்நாடுகளில் ஆடும்போது இதுதான் முக்கியம். எனவே சரியாகச் சிந்தித்தால் ஆஸ்திரேலியாவை மீண்டும் அங்கு வீழ்த்த முடியும்- என்றார். (ம)

## என்றும் எம்.எஸ்.டி

கடந்த பத்து ஆண்டுகளில் சிறந்த அணித் தலைவர் எவர் என்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் கேள்விக்கு, பலரும் இந்திய அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.டோனியின் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர்.

ரசிகர்களில் 90 வீதமானவர்களுக்கும் மேற்பட்டவர்கள் டோனி, கோக்லி, ரோகித், கேன் வில்லியம்சன் ஆகியோரின் பெயர்களைத்தான் பரிந்துரைத்துள்ளனர். மேற்படி நால்வரிலும்கூட பெருமளவானவர்கள் டோனியின் பெயரைத்தான் குறிப்பிட்டுள்ளனர். (ம)




## விடைபெற்றார் சிடில்

11 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடிய ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பீட்டர் சிடில் தற்போது ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

35 வயதாகும் பீட்டர் சிடில் 67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 30.33 என்ற சராசரியில் 221 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். கடைசியாக நடந்த ஆஷஸ் தொடரில் பங்கேற்றார்.

2008ஆம் ஆண்டு மொஹாலியில் இடம்பெற்ற தன் அறிமுகப் போட்டியில் சச்சின் டெண்டுல்கரின் விக்கெட்டை முதல் விக்கெட்டாகக் கைப்பற்றினார்.

2010ஆம் ஆண்டு பெர்த்தில் தன் பிறந்த தினத்தன்று இங்கிலாந்துக்கு எதிராக எடுத்த ஹாட்ரிக் சிடில் வாழ்க்கையில் மறக்க முடியாததாகும். (ம)



# ஒலிம்பிக் தடையை எதிர்த்து ரஷ்யா முறையீடு



மொஸ்கோ, டிசெ. 30

ஒலிம்பிக் தொடரில் விளையாடுவதற்கு ரஷ்யாவுக்கு நான்கு ஆண்டுகள் தடை விதித்துள்ள நிலையில் தடையை எதிர்த்து ரஷ்யா மேன்முறையீடு செய்துள்ளது.

ரஷ்ய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஊக்கமருந்துச் சோதனையில் சிக்கியதால் ரியோ ஒலிம்பிக் தொடரில் விளையாட ரஷ்யாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் ரஷ்யாவுக்கு 4 ஆண்டுகள் தடை விதித்து அண்மையில் தீர்ப்பளிக்கப்பட்டது. இதனால் அடுத்த வருட ஒலிம்பிக் தொடரில் விளையாட முடியாத நிலை ரஷ்யாவுக்கு ஏற்படும். இந்த நிலையில் தடையை எதிர்த்து ரஷ்யா மேன்முறையீடு செய்துள்ளது. (ம)

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
**2022 A/L தொழில்நுட்பபிரிவு**

- **தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**
  சக்தி, ராகவன், முருக நிரோஜன், லவன்
- **பொறியியல் தொழில்நுட்பம்**
  அருண்குமார், சிவஜன், டினோசன், கேதீஸ், திவாகர்
- **உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்**
  திருக்குமரன், ஜெயந்தன், சிவகுமார், நிரோஜன், ராகவன்
- **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
  லவன், உமாகாந்தன்
- **புவியியல்**
  S.P. கரன்
- **விவசாய விஞ்ஞானம்**
  நிரோஜன், ஜெயந்தன், சாரங்கன்
- **ஊடக கல்வி**
  K.V. நவநீதன்
- **கணிதம்**
  தயாளன்
- **சித்திரம்**
  ஜெயந்தன்

புதிய பிரிவு ஆரம்பம் 04.01.2020 சனிக்கிழமை காலை 09.00 மணி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்
0770175346, 0771703549

யாழ் நகரில் A/L 2019
கலை வர்த்தகப் பிரிவுகளின்
முன்னணி பெறுபேறுகளுடன்-----
**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி — மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**கலை, வர்த்தகப் பிரிவுகள்**
**A/L 2022**
ஆரம்பம்:- 05.01.2020 Sun 9.00am
**A/L DAY CLASS**
ஆரம்பம்:- 02.01.2020 Thur 7.00am
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
T.P 076 166 1986, 070 339 6696

**தரம்: 5 வகுப்பு**
புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைவதற்கு ஏற்றமுறையில் வீடுகளுக்கு வந்து பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். யாழ்நகர், திருநெல்வேலி, நல்லூர், கோப்பாய், கோண்டாவில், கொக்குவில், மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 077 248 7080

**வாடகைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில்
(4 ஆம் குறுக்குத்தெரு) அமைந்துள்ள
வாகனத்தரிப்பிடம்,
4 அறைகள் கொண்ட வீடு
வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 277 3671

**ES Printers**
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**Mangala**
2 நாட்கள் மட்டுமே
**மங்களா காட்சியறை**
அனைத்து தளபாடங்களுக்கும் அதிரடி விலை குறைப்பு. தெரிவுக்கு முந்துங்கள்.
536, K.K.S. வீதி, மனோகராசந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:- 021 222 8367

## மரண அறிவித்தல்



### திருமதி நகுலாம்பிகை இராஜேஸ்வரன்

கட்டுவன் தண்ணீர்த்தாழ்வைப் பிறப்பிடமாகவும் முத்தட்டு மட வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை இராஜேஸ்வரன் 27.12.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா இராஜேஸ்வரனின் அன்பு மனைவியும், தனுசன் (கனடா), அனுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தாட்சாயின் அன்பு மாமியும், கவிஷ்னா, அனனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் கமலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (நோர்வே), காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் காந்திமதி (டென்மார்க்) Lion சுந்தரேஸ்வரன் (வரன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (31.12.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் (இணுவில்) இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்தட்டு மட வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 861 6125**
(in 12095) (13,17)

## மரண அறிவித்தல்

பிறப்பு
12 - 01 - 1940



இறப்பு
29 - 12 - 2019

### சிவசுந்தரம் ஸ்ரீபராபரன்

நெல்லியோடை வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுந்தரம் ஸ்ரீபராபரன் 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், வேதநாயகியின் பாசமிகு கணவரும் விஜயலட்சுமி, சிவசுந்தரம் (ஸ்ரீ), தயாராணி, சிவதாஸ், தயாபரம் ஆகியோரின் அன்புத் தந்தையும் பகீரதன், யதுசாயிரா, ஜெயகாந், ரம்மியா, றஜீவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸேசிகன், அக்ஷியன், திவ்யனா, அதர்ஷனன், ஆத்மீகன், வருணிகா, அருட்ஷனன், ஜஸ்மியா, சிவலதன், சிவதாரகி, கபினேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நெல்லியோடை வீதி, அச்சுவேலி தெற்கு,அச்சுவேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நெல்லியோடை வீதி,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**
(IN 12106) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 8264731/077 9262549/ 077 255 4281**

**DMI JAFFNA**
கலை | வர்த்தகம் | தொழில்நுட்பம்
**A/L - 2022**
ஜனவரி 04
காலை 9.00 மணி

**வர்த்தகம்**
கணக்கீடு — D.Sam
வணிகக்கல்வி — T.S. ரிஷி
பொருளியல் — S.S. ஸ்ரீ

**தொழில்நுட்பம்**
S. தயாபரம்
T. கிசோக்குமார் | K. ஜனா
பொறியியல் தொழில்நுட்பம் (E-TECH) — N. றஜிந்தன் | K. ஜனா, S. சத்தியதாஸ்

**கலை**
தமிழ் — R.S. சந்திரசேகர்
புவியியல் — N. பாபு
வரலாறு — M. பத்மன்
விவசாயவிஞ்ஞானம் — V. சசி
கிறிஸ்தவ நாகரிகம் — M. அருள்ஸ்ரீபன்
நாடகம் — K. மங்களேஸ்
இந்துநாகரிகம் — P. ஜோதீஸ்வரன்
அரசியல் — K.S. இளங்கோ
அளவையியல் — E.S. பவன்
மனைப்பொருளியல் — N.V. சசி
ஊடக கற்கை — K.V. நவநீதன்
ICT — N. அம்பி

DMI JAFFNA
சுன்னாகம் கிளை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
A/L - 2022
ஜனவரி 04
மாலை 3.00 மணி

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.